
www.alhasanath.lk

# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர்: 41 இதழ்: 10 ஒக்டோபர்: 2015 துல்ஹிஜ்ஜா- முஹர்ரம்: 1436/37



பொதுசன நூலகம்
08 OCT 2015
மாநகர சபை
யாழ்ப்பாணம்

"இலங்கை முஸ்லிம் சமூகம் தேசத்துடன் கலந்து வாழ்தல் என்பதிலிருந்து தேசத்திற்கு பங்களிப்புச் செய்தல் என்ற தளத்தை நோக்கி நகர வேண்டும்"

- பேராசிரியர் தாரிக் ரமழான் -

PUBLIC LIBRARY
JAFFNA



## அண்டை வீட்டுத் தோழனுக்கு ஓர் அழகிய உபதேசம்

ISLAMIC MONTHLY இஸ்லாமிய இலட்சியக் குரல் 60/-

# மாவனல்லையில்

ஒக்டோபர் 2 முதல்

The BOOK Café

stationers | designing | printing



**New Colombo Kandy Rd**
**(Next to Seylan Bank)**
**Mawanella.**
**0777 783 483**

# பிஸ்மி ஆரோக்கியமான கூந்தலுக்கு ஹேர்பல் ஹெயார் ஒயில் III







(கை கண்ட பலன், உண்மையானது)
பிஸ்மி ஆயுர்வேத ஹெயார் ஒயல் 111

இயற்கை பச்சை மூலிகை மாத்திரம் உபயோகித்து, தயாரிக்கப்பட்ட பிஸ்மி ஹெர்பல் ஹெயார் ஒயில் டிரிபல்வன் III இந்தியாவில் கேரளா பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் மூலிகை மருந்தாகும்

இந்தத் தைலம் முடி உதிர்வதைத் தடுக்க சிறந்தது என்பது பரிசோதனை மூலம் நிருபிக்கப்பட்டுள்ளதாக, இதனை விநியோகம் செய்யும் கண்டி பிரின்ஸ்கோனர் உறுதிப்படுத்துகின்றது. கேரளாவில் உற்பத்தியாக்கப்படும் இத்தைலம், இலங்கைக்கு இறக்குமதியாக்கப்பட்டு, கொழும்பில் 200அட அளவிலான போத்தல்களில் அடைக்கப்படுகின்றது. பிஸ்மி ஹேர்பல் ஹெயார் ஒய்ல் இலங்கையில் மிக நீண்ட காலமாக கொழும்பு, கண்டி, அக்குறணை ஆகிய மூன்று நகரங்களிலும் உள்ள, குறித்த முகவர்களிடம் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.

பிஸ்மி ஹேர்பர் ஹெயார் ஒய்ல் பாவணையாளர்கள் போலிகளில் இருந்து பாதுகாப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட மூன்று இடங்களில் மாத்திரமே விற்பனை செய்யப்படுகின்றது.

பிஸ்மி ஹேர்பல் ஹெயார் ஒய்ல் ட்ரிபல்வன் பாவிப்பதால், குறுகிய காலத்தில் மிகச்சிறந்த பிரதிபலனை பெற்றுக் கொள்ளலாம். இதனை பாவிப்பதன் மூலம் 15 நாட்களில் 70மூ பலனையும், 30 நாட்களில் ஆரோக்கியமான கூந்தலையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பது வைத்தியர்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தைலத்தை வாங்கிய பின்னர், நாம் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, முழு விபரங்களையும் பெற்றுக்கொண்டு பாவிப்பதன் மூலம் குறுகிய காலத்தில் மிகச் சிறந்த பலனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை நாம் உங்களுக்கு உறுதிப் படுத்துகின்றோம். எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:.

**077-3735705 / 081-3820404**

**Reg.No. 128458**

## அற்புதம்!!! ஆனால் உண்மை

உதிர்ந்த தலை முடிகளை மீண்டும் பெற்றுக கொள்ள நிங்களும் இன்றே "பிஸ்மி ஆயுர்வேத ஹெயார் ஒயல் 111" பாவித்து முழுமையான பயனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

* தலை முடி உதிர்வதைக் கட்டுப்படுத்தும்.
* தலை முடி உடைவதைக் கட்டுப்படுத்தும்.
* தலை முடியைக் கறுப்பாக்கும்.
* தலை முடியை அடர்த்தியாக்கும்.
* தலை முடி நரைப்பதை (வெள்ளையாவதைக்) கட்டுப்படுத்தும்.
* பொடு முற்றாக இல்லாமல் போகும் (எந்த மருந்துக்கும் பயனளிக்காத பொடுத் தொல்லை, இந்த ஒயிலைப் (Oil) பாவிப்பதன் மூலம் குறுகிய நாட்களில் முற்றாக இல்லாமல் போய் விடும்)
* மிகச் சிறப்பாகவும், வேகமாகவும் முடி வளரக்கூடிய ஒன்று பிஸ்மி ஹெயார் ஒயில் மட்டுமே

நீங்களும் இன்றே பாவித்துப் பாருங்கள்

இது ஏமாற்றம் அற்றவர்களின் தேர்வு. அதுமட்டுமல்ல நிஜமும் இதுவே!

Triple one Bismi Herbal Hair Oil

### இதோ அரசாங்க வைத்தியரின் நற்சான்றிதழ்

பிஸ்மி ஹேர்பல் ஹெயார் ஒய்ல் (III) 40வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண், பெண் இருபாலாரதும் வழுக்கைத் தலையில் பிஸ்மி எண்ணெய்யை தொடர்ந்து 40 நாட்கள் பூசி வர முடி செழிப்பாக வளரும். எவ்வித பக்க விளைவுகளும் அற்றது.
65 வயதுக்குட்பட்டவர்களின் முடி உதிர்வதை 10-15 நாட்கள் பாவிப்பதன் மூலம் முற்றாகக் கட்டுப்படுத்தலாம். முடி உதிர்வது முற்றாக நின்று விடும். உதிர்ந்த முடியை மீண்டும் வளரச் செய்ய, உங்களது நீண்டகாலக் கவலையைப் போக்க Bismi Herbal Hair Oil (111) ஐ நீங்களும் பாவித்து, உண்மையான பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Reg. No. 7765
Dr. (Mrs) D. M. I. Kumarihamy
D.A.M.S. (Lanka) H.Ac.F. (Lanka)
Bandaranayake Dispensary
Kandy

**Kandy Prince Corner**
**#191, 1st Floor, Central Market, Kandy.**
**கண்டி பிரின்ஸ் கோர்னர்**
**191,1ம் மாடி, மத்திய சந்தை, கண்டி**

**CITY PHARMACY**
**அக்குறணை சிடி பாமசி**
(அஸ்னா பள்ளிவாயலுக்கு முன்னால்)
**124, Asna Mosqe Road, Akurana - 06.**

**Rusan Trade Centre**
**211-213, 2nd Cross Street, Colombo-11.**
**ருஸான் டிரேட் சென்டர்**
(முஸ்லிம் சிவப்புப் பள்ளி,சம்மான் கோட்டை பள்ளி வாயலுக்கு முன்னால்)

200ml Rs ரூபா 1950/=

Imported from Kerala




பெற்றுக் கொள்ள முடியாத தூரத்திலுள்ளவர்கள் பார்சல் கொரியர் மூலம் பெற்றுக் கொள்ளலாம்

நீண்ட காலமாக, பிஸ்மி ஆயுர்வேத தைலம் விற்பனையாளர்கள் கொழும்பிலும், கண்டியிலும், அக்குறணையிலும் மட்டுமே...!மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களைத் தவிர, இலங்கையில் வேறு கிளைகள் இல்லை. போலிகளுக்கு ஏமாற வேண்டாம்.

بسم الله الرحمن الرحيم


**அல்குர்ஆன் விளக்கம்** 4-6
## தொடரும் வலீத் இப்னு முகீராக்கள்
அஷ்ஷெய்க் எம்.எச்.எச்.எம். முனீர்

**அல்ஹதீஸ் விளக்கம்** 07-10
## காலம் வேண்டி நிற்கும் இஸ்லாமிய குற்றவியல் தண்டனைகள்
அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

**தஃவா களம்** 11-13
## அண்டை வீட்டுத் தோழனுக்கு ஓர் அழகிய உபதேசம்

## அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையும் இஸ்லாமிய அரசு இயக்கத்தின் எழுச்சியும் 13-15






**"இலங்கை முஸ்லிம் சமூகம் தேசத்துடன் கலந்து வாழ்தல் என்பதிலிருந்த தேசத்திற்கு பங்களிப்புச் செய்தல் என்ற தளத்தை நோக்கி நகர வேண்டும்"** 18-20
- பேராசிரியர் தாரிக் ரமழான் -

**அந்நிஸா**

| | |
|---|---|
| 21/22 | இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றனவா? |
| 23/24 | ஸுமைய்யா (ரழியல்லாஹு அன்ஹா) இஸ்லாத்தின் முதல் உயிர்த் தியாகி |


## சுவனத்துக்கு அழைத்துச் செல்லும் ஆசிரியர் பணி! 32-34


"எக்காளம் ஊதப்பட்டு விட்டாலோ அந்த நாள் மிகக் கடுமையான நாளாக இருக்கும். நிராகரிப்பாளர்களுக்கு இலேசானதாய் இராது. நான் தன்னந்தனியாக படைத்திருக்கின்ற அந்த மனிதனை என்னிடம் விட்டுவிடுவீராக! அவனுக்கு நான் அதிகமான செல்வத்தை வழங்கினேன். அவனுடனேயே இருக்கக்கூடிய புதல்வர்களையும் அளித்தேன். மேலும், அவனுக்கு தலைமை தாங்கும் வழிவகைகளையும் வகுத்துக் கொடுத்தேன். இதன் பிறகு நான் அவனுக்கு இன்னும் அதிகமாக வழங்க வேண்டும் என்று அவன் ஆசைப்படுகின்றான். ஒருபோதும் இல்லை. அவன் நம்முடைய வசனங்களுடன் பகைமை கொண்டவனாக இருக்கின்றான். நான் அவனை அதிவிரைவில் வேதனையின் சிகரத்துக்கு ஏறச் செய்வேன்."
(ஸூரதுல் முத்தஸ்ஸிர்: 8-17)


மலர்: 41 இதழ்: 10

2015 செப்டெம்பர் | துல்ஹிஜ்ஜா- முஹர்ரம்:1436/37

ISSN: 1391 - 460X

**வெளியீடு:**
**இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி**

**தொடர்புகளுக்கு:**
அல்ஹஸனாத்
77, தெமடகொட வீதி,
கொழும்பு-09, இலங்கை
தொலைபேசி :(011) 2689324,
தொலைநகல் :(011) 2686030
மின்னஞ்சல்: alhasanath@gmail.com
இணையதளம்: www.alhasanath.lk



பொறாமைத் தீயில் கருகிய சகோதரத்துவம்! 35-37
வீண்டிக்கும் அருட்கொடைகள் 38-39
ஸீரா 47-48
அளவான உணவு! அழகிய சூழல்! 50-52
வாய்ச் சுகாதாரம் 53



**விலை விபரம்:**

**உள்நாடு:** தனிப் பிரதி: ரூபா 60.00 | வருட சந்தா: ரூபா 1050.00 | ஆறு மாதம்: ரூபா 525.00

**வெளிநாடு:** இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர், மலேசியா: 2550.00 |
மத்திய கிழக்கு நாடுகள்: 2600.00 | அவுஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா: 3300.00 |
இங்கிலாந்து, நியூசிலாந்து: 4000.00 | ஐக்கிய அமெரிக்கா, கனடா: 4700.00




PUBLIC LIBRARY JAFFNA

# A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான பாடநெறிகள்

## Real Access Program

இப்பாடநெறியின் மூலம் 5 தகைமைகளைப் பெறலாம்

- Diploma in Computer Studies
- Diploma in Graphic Designing
- Diploma in Web Designing
- Diploma in Hardware
- Diploma in English

3 மாதம் Weekly 05 Days 8:30 to 4:30

ஆங்கிலம் மற்றும் கணனிக் கல்வியை அடிப்படையில் இருந்து கற்கும் விதமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறியாகும்

பாடநெறி ஆரம்பம் 14th Batch Oct - 15 | 15th Batch Oct - 29

02 சர்வதேச UK+ISO தரச் சான்றிதழ்கள் உட்பட 06 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்

## குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் கதைக்க வைக்கும் ஒரே பாடநெறி

02 மாத முழுநேர வதிவிட / வதிவிடமற்ற கணனி பயிற்சியுடன் கூடிய ஆங்கில பாடநெறி

தினமும் 03 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி

## Diploma in ENGLISH With IT


IT: MS-OFFICE, HARDWARE, COMP-ACCOUNTING

-WITH GRAMMAR-
Reading | Writing | Listening | Speaking

பாடநெறி ஆரம்பம்
46th Batch Oct - 15
47th Batch Oct - 29

Weekly 06 Days 8:30 to 4:30

பாடநெறி முடிவில் சர்வதேச ISO தரச் சான்றிதழ் உட்பட 03 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்



## DIPLOMA IN HOTEL MANAGEMENT & HOSPITALITY

4 மாதம் (Full Time)

- Front Office
- Food & Beverages
- Language (French & English)
- International cookery
- Pastry & Bakery
- House Keeping
- IT

பாடநெறி ஆரம்பம் 01st Batch Oct -15

மிகவும் அனுபவம் வாய்ந்த தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களால் கற்கை நெறி நடாத்தப்படும்

உயர்தரமான நட்சத்திர ஹோட்டல்காளில் உறுதியளிக்கப்பட்ட ஆறுமாத கொடுப்பனவுகளுடன் கூடிய தொழில் பயிற்சி வழங்கப்படும்

## Internationally Recognized Teacher Training Program

(Industrial Training Will Be Provided)

AMI | City & Guilds | TVEC

- DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)
- DIPLOMA IN PRE SCHOOL TEACHER TRAINING
- DIPLOMA IN CHILD PSYCHOLOGY
- ENGLISH FOR PROFESSIONAL

6 மாதம் (Week Ends)


பாடநெறி ஆரம்பம் October 18th

பாடநெறி முடிவில் 02 சர்வதேச (UK + India) சான்றிதழ்கள் உட்பட 05 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்.

# GOLDEN COLLEGE CITY CAMPUS

548, Peradeniya Road, Kandy.
126, Kandy Road, Thihariya.

Kandy 0777 222 529 | VAVUNIYA 0777 222 527 | THIHARIYA 0777 222 528



பொது நூலகம்
06 OCT 2015
மாநகர சபை
யாழ்ப்பாணம்

# மலரும் புத்தாண்டில் ஓர் ஒளிக்கீற்று

புதிய வருடத்தில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளை, கடந்த காலத்தை அசைபோடுவதும் எதிர் காலத்திற்கான முன் ஏற்பாடுகளை மேற்கொள்வதும் ஒரு சமூகத்தின் பயணத்தில் இன்றியமையாத ஒன்றாகும்.

எம்மை கடந்து செல்லும் ஆண்டை, எமது நாட்டிலும் முழு உலகிலும் முஸ்லிம் சமூகம் அச்சம் கொண்டு பெரும் இழப்புக்களை சந்தித்த ஒன்றாகவே அடையாளப்படுத்த முடிகின்றது. முஸ்லிம் நாடுகளை படிப்படியாக அடித்து வீழ்த்தி, முஸ்லிம்களை அகதிகளாக் கும் சதித் திட்டம் உலகளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அதேவேளை, முஸ்லிம்கள் சிறுபான்மை யினராக வாழும் நாடுகளில் பெரும்பான்மை யினரை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கும் படலமும் தொடர்கின்றது.

பிரித்தானியா இலங்கைக்கு சுதந்திரமளித்தபோது சிறுபான்மையினருக்கு வழங்கியிருந்த சலுகைகளும் உரிமைகளும் படிப்படியாக பறிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. கடந்த ஆண்டில் சிறுபான்மையினரை தேசியக் கொடியிலிருந்து அகற்றும் முயற்சியும் முடுக்கி விடப்பட்டது. நாடு பயணிக்கும் திசையை இதன் மூலம் நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். இதனை முறியடித்து நாட்டை மீண்டும் நல்லாட்சிப் பாதையில் திசை திருப்பியது முஸ்லிம்களின் ஐக்கியமும் பிரார்த்தனையுமே என்பதில் மிகையில்லை. இவ்வேளை, எமது முஸ்லிம் சமூகம் கடைப்பிடித்த தூரநோக்குடைய வழிமுறைதான் புதிய வருடத்துக்குள் நம்பிக்கை ஒளிக்கீற்றை பாய்ச்சி நிற்கின்றது.

முஸ்லிம்கள் பச்சாதாபப்பட்டு பாவமன்னிப்புக் கோரி அல்லாஹ்வின் பால் மீள்வதும் ஒன்றுபட்டு எமக்கென ஒரு வழிமுறையை ஏற்படுத்தி உறுதியுடன் ஐக்கியத்துடன் அவ்வழியில் நடைபோடுவதும்தான் எம் தலையாய கடமையாக இருக்கின்றது.

கட்சிப் பிரிவினைகள், இயக்கப் பிரிவினைகள், ஊர்ப் பிரிவினைகள்... என அனைத்தையும் மூட்டை கட்டிவைத்துவிட்டு இந்த நாட்டு மக்களின் நலனுக்காக குரல் கொடுக்கக்கூடிய சமூகமாக நாம் மாறுவோம். எமது சிந்தனை வட்டம் எமது சமூகத்தை சுற்றியே இன்னும் சுழன்று கொண்டிருக்கின்றது. இதிலிருந்து விடுபட்டு நம் சிந்தனையைப் பரவலாக்கி இந்நாட்டு மக்களுக்கு எது சிறந்ததோ அதனைக் கொடுக்க நாம் தயங்காது உழைத்திட இப்புதிய வருடத்தில் முன்வருவோம். இதற்கு முன்னோடியாக அல்லாஹுதஆலா ஹஜ்ஜுப் பெருநாளை இம்முறை முழு உலகமும் சேர்ந்து ஒரே நாளில் கொண்டாட வைத்ததன் மூலம் எல்லோரது உள்ளங்களிலும் ஐக்கிய உணர்வை ஊட்டி வைத்துள்ளான்.

அல்லாஹ்வுடைய தீனுக்கு இவ்வுலகில் சான்று பகரும் சமூகமாக நம்மை வாழவைத்துள்ள அல்லாஹ், அவன் ஏவியவற்றை முற்று முழுதாக எடுத்து நடக்க எமக்குத் துணை புரிவானாக! நமக்கு பாரிய இழப்புக்களையும் அச்சத்தையும் ஏற்படுத்தி நம்மை நேர்வழியின் பால் திசை திருப்ப அல்லாஹ் விரும்புகிறான். எனவே, இந்த அச்சத்தையே அச்சாணியாக்கி எமது பயண வண்டியை சரியான பாதையில் ஓட்டிச் செல்வது எம் அனைவரதும் கடமையாகும்.



# தொடரும் வலீத் இப்னு முகீராக்கள்

**அஷ்ஷெய்க் எம்.எச்.எச்.எம். முனீர் அதிபர், இஸ்லாஹிய்யா மகளிர் அரபுக் கல்லூரி, புத்தளம்**

"எக்காளம் ஊதப்பட்டு விட்டாலோ அந்த நாள் மிகக் கடுமையான நாளாக இருக்கும். நிராகரிப்பாளர்களுக்கு இலேசானதாய் இராது. நான் தன்னந்தனியாக படைத்திருக்கின்ற அந்த மனிதனை என்னிடம் விட்டுவிடுவீராக! அவனுக்கு நான் அதிகமான செல்வத்தை வழங்கினேன். அவனுடனேயே இருக்கக்கூடிய புதல்வர்களையும் அளித்தேன். மேலும், அவனுக்கு தலைமை தாங்கும் வழிவகைகளையும் வகுத்துக் கொடுத்தேன். இதன் பிறகு நான் அவனுக்கு இன்னும் அதிகமாக வழங்க வேண்டும் என்று அவன் ஆசைப்படுகின்றான். ஒருபோதும் இல்லை. அவன் நம்முடைய வசனங்களுடன் பகைமை கொண்டவனாக இருக்கின்றான். நான் அவனை அதிவிரைவில் வேதனையின் சிகரத்துக்கு ஏறச் செய்வேன்."

(ஸூரதுல் முத்தஸ்ஸிர்: 8-17)

**வலீத் இப்னு முகீராவின் இயக்கம் அதே இயல்போடும் தன்மையுடனும் புதிய வடிவங்களில், நவீன தோற்றங்களில் அவர்களது அரசியல் பலமும் இராணுவ ஆதிக்கமும் பொருளாதார வளமும் ஊடகவியல் சக்தியும் நிறைந்தவர்களாக இருந்தாலும் இஸ்லாமிய வாதிகளுக்கு அவை திகைப்பை ஏற்படுத்துகின்றவையாகவோ, மானசீக தாக்கத்தை உண்டுபண்ணுகின்றவையாகவோ இருப்பதில்லை.**

ஸூரதுல் முத்தஸ்ஸிரின் ஆரம்ப வசனங்கள் இறங்கி சில மாதங்களுக்குப் பிறகு இவ்வசனங்கள் இறங்கியதாக தப்ஸீர் ஆசிரியர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

"நபியே! அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக! எதிர்நோக்கி வந்து கொண்டிருக்கும் அபாயங்கள், அனர்த்தங்கள் பற்றி முன்னறிவிப்புச் செய்வீராக" என ஆரம்பிக்கும் இந்த ஸூராவின் இரண்டாவது பகுதி, "எக்காளம் ஊதப்பட்டு விட்டால் அந்த நாள் மிகக் கடுமையான நாளாக இருக்கும். இறை நிராகரிப்பாளர்களுக்கு இலேசானதாக இராது" என உணர்வுகளை விழிக்கச் செய்வதோடு, பேச ஆரம்பிக்கிறது. செவிப் புலன்களை அதிரச் செய்யும் அதி உச்சநிலை சப்தத்தை ஏற்படுத்தும் ஊதுகுழல் ஊதப்படுகிறது. மனிதர்கள் சிதறடிக்கப்பட்ட ஈசல்களைப் போல் தமது புதைகுழிகளை விட்டு வெளியேறி மஹ்ஷர் பெருவெளியில் ஒன்று திரட்டப்படவுள்ளார்கள். அதில் பூமியில் வாழ்ந்த எந்த மனிதனும் விட்டு வைக்கப்பட மாட்டான்.

மனிதர்கள் யாவரும் தமக்கிடையே உறவு பாராட்டப்பட முடியாமல், உறவுகள் அனைத்தும் முறிக்கப்பட்ட நிலையில், பதற்றமடைந்து பேதலித்துப் போய் நிற்பார்கள். அது மனித அறிவால், கற்பனையால் புரிந்து கொள்ள முடியாத கஷ்டமான நாளாகும். அது நாளா? நாட்களா? யுகங்களா? நிராகரிப்பாளர்களுக்கு மிகக் கஷ்டமான நாளாக அமையும் என வர்ணிக்கப்படுகிறது. இக்கஷ்டத்துக்குள் இலகு என்பதே இல்லை. இக்கஷ்டத்திலிருந்து விதிவிலக்களிக்க அவர்களுக்கு எந்த விடயமும் கிடையாது. இவ்வசனம் நிராகரிப்பாளர்கள் நெருக்கடிகளையும் கஷ்டங்களையும் அனுபவிப்பார்கள். என்பதை "கைரு யஸீர்" என சுருக்கமாகவும் மறைமுகமாகவும் கூறுகிறது.

பூமியில் தனி மனிதர்களாக, குழுக்களாக பல்வேறுபட்ட காலப் பகுதிகளில், பல்வேறுபட்ட பிரதேசங்களில் தமது வாழ்நாளைக் கழித்தவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக மஹ்ஷர் பெருவெளியில் இறைவன் நிர்ணயித்த காலப் பகுதியைக் கழித்தே ஆக வேண்டும். இவ்வொன்றுகூட்டல் இரு கூறுகளாகப் பிரிக்கப்படுகிறது. அல்லாஹ்வை தமது ஏக இரட்சகனாக ஏற்று, அவனது தூதர்களின் வழிகாட்டல்களை ஏற்று பின்பற்றி வாழ்ந்தோர் அல்லாஹ்வின் பாதுகாப்புக்குரியவர்களாகவும் அல்லாஹ்வையும் அவனது தூதர்களையும் நிராகரித்து எதிராகப் போராடி வாழ்ந்தோர் பாதுகாப்பை இழந்தவர்களாகவும் இருப்பார்கள்.

யுக முடிவு, அதனைத் தொடர்ந்து நடைபெறுபவை பற்றி அல்குர்ஆன்

பேசுகின்றவற்றை தனது மனதால் உள்வாங்கிக் கொண்ட ஒரு மனிதனின் சிந்தனைகள் உயர்ந்தவையாகவும் சீரான வையாகவும் ஆகுவதோடு அவனது நடத்தைகள் போற்றத்தக்கவையாகவும் நீதம் நிறைந்தவையாகவும் ஏனைய மனிதர்களுக்கு பயனளிப் பவையாகவும் மாறி விடுகின்றன. அல்குர்ஆன் தோற்று வித்த உயர்ந்த ஆளுமைகளுக்கும் நாகரிகத்துக்கும் பின்னால் மறைந்திருக்கும் அல்லது இழையோடும் அம்சங்களுள் மஹ்ஷர் சிந்தனை பிரதான மானதாகும்.

பதினோராவது வசனத்திலிருந்து இருபத்தேழாவது வசனம் வரை அல்குர்ஆன் இறங்கிக் கொண்டிருந்த சம கால நிகழ்வொன்றை பின்புலமாகக் கொண்டு உரையாடும் இவ்வசனங்கள் மறுமைநாள் வரும்வரை எத்தகைய தன்மைகள் கொண்ட தனிமனிதர்களும் குழுக்களும் தோன்றிக் கொண்டே இருப்பார்கள் என்ற செய்தியையும் அவர்களை எவ்வாறு கையாள வேண்டும் என்ற வழி காட்டலையும் வழங்குகிறது. இப்பகுதியை நாம் தஃவா முறையியலுக்கான ஒரு பகுதியாய் கொள்வோம்.

முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது அழைப்புப் பணி பகிரங்கமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது முதல் தடவையாக ஹஜ்ஜுக் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அயல் பிரதேசத்தைச் சார்ந்தவர்களை தம்முடன் இணைத்துக் கொள்வார் என அஞ்சிய குறைஷித் தலைவர்கள் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பற்றி தவறான எண்ணங்களை ஏற்படுத்துவதற்காக ஒரு பெரும் பிரசாரத்தை முடுக்கிவிட வேண்டும் எனக் கருதினார்கள். எனவே, குறைஷிகள் ஒரு மாநாட்டைக் கூட்டினர். அதன் பிரதான புள்ளியாக வலீத் இப்னு முகீரா கலந்து கொண்டு தனது தீர்மானத்தை அறிவித்தார். இவரை வன்மையாகக் கண்டித்தே இவ்வசனங்கள் இறங்கின.

"நான் தன்னந்தனியாக படைத்திருக்கின்ற அந்த மனிதனை என்னிடம் விட்டுவிடுவீராக. அவனுக்கு நான் அதிகமான செல்வத்தை வழங்கினேன். அவனுடனே இருக்கக்கூடிய புதல்வர்களையும் அளித்தேன். மேலும் அவனுக்கு தலைமை தாங்கும் வழிவகையையும் வகுத் துக் கொடுத்தேன். இதன் பிறகு நான் அவனுக்கு இன்னும் அதிகமாக வழங்க வேண்டும் என்று அவன் ஆசைப்படுகின்றான். ஒருபோதும் இல்லை அவன் நம்முடைய வசனங்களுடன் பகைமை கொண்டவனாக இருக்கின்றான். நான் அவனை அதிவிரைவில் வேதனையின் சிகரத்திற்கு ஏறச் செய்வேன். அவன் சிந்தித்தான். சில விடயங்களை புனைந்து கூற முயன்றான். இறைவன் அவனை அழிக்கட்டும். அவன் எப்படிப்பட்ட விடயங்களை புனைந்து கூற முற்பட்டுவிட்டான். பிறகு மக்களைப் பார்த்தான். பிறகு புருவத்தை நெரித்தான். பின்னர் முகத்தைச் சுளித்தான். பிறகு திரும்பிச்சென்றான். மேலும் தற்பெருமை கொண்டான். இறுதியில் கூறினான். இது ஒன்றுமில்லை. ஒரு சூனியம் தான். முன்பிருந்தே சொல்லப்பட்டு வருவதுதான். இது ஒரு மனித வாக்கேதான். அதி விரைவில் நான் அவனை நரகில் வீசி எறிவேன்."

வலீத் இப்னு முகீரா அரபு சமூகத்தில் மிகவும் செல்வாக்கு படைத்தவர்; மதிநுட்பம் மிக்கவர்; இலக்கிய புலமை படைத்தவர்; மக்கா, தாயிப் நகருக்கிடையில் மிகப் பெரிய தொழிலதிபர்; தலைமைத்துவ திராணி மிக்கவர்; பிள்ளைப்பேறு நிறையப் பெற்றவர். முஹம்மத் (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஏற்றுக் கொள்ளாத நிலையிலும் அல்குர்ஆனின் ஆகர்ஷ நிலையை தனது இலக்கிய புலத்துடன் வெளிப்படுத்தியவர். "சற்று நேரத்திற்கு முன் முஹம்மதிடம் ஒரு பேச்சைக் கேட்டேன். இறைவன் மீது ஆணையாக அது மனிதர்களினதோ ஜின்களினதோ வார்த்தைகள் அல்ல. அதற்கோர் இனிமையுண்டு. அது வசீகரிக்கும் ஆற்றலைக் கொண்டது. அதன் உயர்ந்த பகுதிகளில் கனிகள் பறிக்கலாம். அதன் தாழ்ந்த பகுதிகள் இன்பமான ஊற்றுக்களை உடையவை. அது அனைத்தையும் மிகைத்துவிடும். அதனை எதுவும் மிகைக்க முடியாது" என அல்குர்ஆன் பற்றிய உண்மையை தனது இலக்கியப் புலத்துடன் பிரகடனப்படுத்திய வலீத் இப்னு முகீராவின் பெருமையும் ஆதிக்கப் போக்கும் உலகை அனுபவிக்கும் தீராத ஆசையும் தான் என்ற மமதையும் பொறாமையும் அல்குர்ஆனுக்கு எதிராக அறிவிப்பு வாசகம் (Statement) தயாரிக்க அவனுக்கு வழிகாட்டியது. இது ஒன்றுமில்லை. ஒரு சூனியம்தான். இது முன்பிருந்தே சொல்லப்பட்டு வருவதுதான். இது ஒரு மனித வார்த்தைதான். முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம்) அவர்கள் சூனியக்காரர் என்றும் அல்குர்ஆனை சூனியம் என்றும் பிரபலப்படுத்தும்படி இறை நிராகரிப்பாளர்களுக்கு ஆலோசனை கூறினான்.

மக்காவில் இஸ்லாமிய இயக்கத்தின் எதிர்த் தரப்பினரை பொதுவாக இரு அணியினராகக்காண முடியும். அபூதாலிபும் அவரை ஒத்தவர்களும். முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது அணிக்குள் இணைந்து கொள்ளாது பாதுகாப்பு வழங்கக்கூடியவர்களாகக் காண்கின்றோம். ஏனையவர்கள் எதிர் அணியினராகவே மக்கா வெற்றி கொள்ளப்படும் வரை காணப்பட்டனர். எதிர் அணியினரை நுட்பமாக அவதானித்தால் அவர்வர்களை மூன்று தன்மை பெற்றோராகக் பரிந்து நோக்க முடியும்.

**1. நல்ல எதிரிகள்:** உண்மை பேசக்கூடிய, கஞ்சத்தன மற்ற, தெளிவாக தனது போக்கை வெளிப்படுத்தக்கூடிய, துணிவும் தைரியமும் மிக்க அபூஜஹ்லும் அவரையொத்தோரும். எனவேதான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உமரை அல்லது அபுல்



PUBLIC LIBRARY
JAFFNA

ஹிகமை இந்த தீனுக்காக தருவாயாக எனப் பிராத்தித்தார்கள்.

**2. மிகக் கெட்டவர்கள்:** அபூலஹபும் அவனை ஒத்த வர்களும். அபூலஹப் பொய் பேசுபவர், கஞ்சன், பொதுச் சொத்துக்களை திருடியவன், பத்ரில் கலந்து கொள்ளாத கோழை.

**3. தமது நலன்களை கருத்திற் கொண்டு செயற்படுவோர்:** வலீத் இப்னு முகீராவும் அவரை ஒத்தவர்களும். எதுவும் நடக்கட்டும். எமது சொந்த நலன்களுக்குப் பாதகமில்லாவிட்டால் போதும் என்ற ஒருவகை நயவஞ்சகப் போக்கு. இம்மூன்று எதிரிகளையும் முறையே ஸூரதுல் அலக், ஸூரதுல் மஸத், ஸூரதுல் முத்தஸ்ஸிர் விபரித்துள்ளது.

ஸூரதுல் முத்தஸ்ஸிர் வலீத் இப்னு முகீரா என்ற எதிர்ச் சக்தியை தோலுரித்துக் காட்டியுள்ளது.

*''நான் தன்னந்தனியாக படைத்திருக்கின்ற அந்த மனிதனை என்னிடம் விட்டுவிடுவீராக!*

*அவனுக்கு நான் அதிகமான செல்வத்தை வழங்கினேன்.*

*அவனுடனேயே இருக்கக்கூடிய புதல்வர்களையும் அளித்தேன்.*

*தலைமை தாங்கக்கூடிய வழிவகைகளையும் வகுத்துக் கொடுத்தேன்.*

*இன்னும் அதிகமாக வழங்கப்பட வேண்டும் என ஆசைப் படுகின்றான்.''*

பிறக்கும்போது வெறுங்கையுடன், ஒரு சாண் துணிக்கும் சொந்தமில்லாத, வெற்று மேனியுடன் மனிதர்கள் அனைவரும் பிறக்கின்றனர். இவ்வுண்மையை மறக்கின்றபோது மனிதன் பெருமை பிடித்தவனாக, ஆணவக் காரனாக மாறிவிடுகின்றான். மிக எளிய வார்த்தையில் சாதாரணமாக விளங்கிக் கொள்ளக்கூடிய சொற்களில் அவன் அகம்பாவம் பிடித்தவன்; அவனை நீங்கள் விட்டு விடுங்கள். அந்தப் பதரை நான் பார்த்துக் கொள்கின்றேன் என அல்குர்ஆன் இறைத்தூதருக்கு ஆறுதலும் அவனுக்கு ஒரு பலமான அடியும் கொடுத்துள்ளது.

வலீத் இப்னு முகீரா மக்கா, தாயிப் நகரங்களுக்கிடையில் காணப்பட்ட அதிகமான விவசாய நிலபுலங்களின் நிலபிரபுவாகவும் அந்த இரு நகரங்களுக்கிடையே காணப்பட்ட கால்நடைகளுக்கு சொந்தக்காரனாகவும் நிறைந்த வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிலதிபராகவும் பதினொரு அல்லது பதின்மூன்று ஆண் பிள்ளைகளின் தந்தையாகவும் இருந்தான். அவர்கள் அவனுடனேயே எப்போதும் இருந்தார்கள். இவனிடம் நிறைய தொழிலாளர்களும் அடிமைகளும் அவனது ஆதி முதலாளித்துவ சக்கரத்தில் சுழன்று கொண்டிருந்தனர். இலக்கிய புலமையும் கருத்துரைக்கும் திராணியும் வேறு பல திறன்களும்

**இவ்வுண்மையை மறக்கின்ற போது மனிதன் பெருமை பிடித்தவனாக, ஆணவக் காரனாக மாறிவிடுகின்றான். மிக எளிய வார்த்தையில் சாதாரணமாக விளங்கிக் கொள்ளக்கூடிய சொற்களில் அவன் அகம்பாவம் பிடித்தவன்; அவனை நீங்கள் விட்டு விடுங்கள். அந்தப் பதரை நான் பார்த்துக் கொள்கின்றேன் என அல்குர்ஆன் இறைத்தூதருக்கு ஆறுதலும் அவனுக்கு ஒரு பலமான அடியும் கொடுத்துள்ளது.**

அவனுக்கு தலைமை வழங்கும் திராணியை வழங்கிக் கொண்டிருந்தது. நுபுவ்வத் தனக்கு கிடைத்திருக்கக் கூடாதா என்ற பொறாமைத் தீயிற்குள் எரிந்து கொண்டிருந்தான். எனவேதான், அல்குர்ஆன் அல்லாஹ்வால் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு இறக்கி வைக்கப்பட்ட வழிகாட்டும் நூல் என்பதை அவனது மனசாட்சி ஏற்றுக் கொண்ட போதிலும் மனச் சாட்சிக்கு எதிராக கருத்துரைத்தான்.

*''அதி விரைவில் நான் அவனை நரகத்தில் வீசி எறிவேன். மேலும் அந்த நரகம் என்னவென்று நீர் அறிவீரா? என்ன? அது இருக்கவும் விடாது. விட்டும் வைக்காது. அது சருமத்தை காத்து விடக்கூடியது.*

அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் எதிராக செயற்படுவோருக்கு இந்தக் கொடூரமான ஸகர் என்ற நரகம் தயார்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. நேரடியாகவும் மறைமுகமாகவும் இஸ்லாமிய பணிக்கும் அதன் பணியாளர்களுக்கும் எதிராக செயற்படுவோர் உணர்வு பெற்றுக் கொள்ளட்டும். நிச்சயமாக கருணைமிக்க அல்லாஹ்வை அஞ்சியோர் படிப்பினை பெறுவார்கள்.

வலீத் இப்னு முகீராவின் இயக்கம் அதே இயல்போடும் தன்மையுடனும் புதிய வடிவங்களில், நவீன தோற்றங்களில் அவர்களது அரசியல் பலமும் இராணுவ ஆதிக்கமும் பொருளாதார வளமும் ஊடகவியல் சக்தியும் நிறைந்தவர்களாக இருந்தாலும் இஸ்லாமியவாதிகளுக்கு அவை திகைப்பை ஏற்படுத்துகின்றவையாகவோ, மானசீக தாக்கத்தை உண்டுபண்ணுகின்றவையாகவோ இருப்பதில்லை. மாறாக, மனபலம் நிறைந்தவர்களாகவும் உறுதியாக நின்று அல்லாஹ்வின் பாதையில் உழைப்பவர்களாகவும் போராடுகின்றவர்களாகவும் இருப்பார்கள். ■

# காலம் வேண்டி நிற்கும் இஸ்லாமிய குற்றவியல் தண்டனைகள்

**குற்றவாளி சமூகத்லிருந்து துடைத்தெறியப்படுவதன் மூலமாக அவனது தீங்கிலிருந்து சமூகத்திற்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமென்றால் அவன் கொலை செய்யப்படுதல் தண்டனையாக அமைதல் அவசியமாகும். அவன் தனது நிலைமையை மறுசீரமைத்து தௌபா செய்யும் வரை சிறையில் அடைக்கப்படுவதே சமூகத்திற்கான பாதுகாப்பாக அமையுமாக இருந்தால் மரணிக்கும் வரை சிறையில் அடைக்கப்படுதல் தண்டனையாக அமைய வேண்டும்.**

அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி), விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா மகளிர் அரபுக் கல்லூரி, புத்தளம்

இம்ரான் இப்னு ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஜுஹைய்னா கோத்திரத்து பெண்மணி விபசாரத்தின் மூலம் கர்ப்பமுற்ற நிலையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! தண்டனைக்குரிய குற்றம் ஒன்றை நான் செய்து விட்டேன். எனக்கு தண்டனையை நிறைவேற்றுங்கள்!" எனக் கூறினாள். அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், அவளது பொறுப்புதாரரை அழைத்து "இவருடன் நீங்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். இவள் பிள்ளையைப் பெற்றெடுத்தவுடன் இவளை என்னிடம் அழைத்து வாருங்கள்" என கட்டளையிட்டார்கள். அவரும் அவ்வாறே செய்தார். பின்னர் நபியவர்கள் அந்தப் பெண்ணிடம் அவளது ஆடையை இறுகக் கட்டிக் கொள்ளுமாறு உத்தரவு பிறப்பித்தார்கள். பிறகு அவளை கல்லெறிந்து கொன்றுவிடுமாறு கட்டளையிட்டார்கள். அவள் கல்லெறிந்து கொலை செய்யப்பட்டாள். பின்னர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவளுக்காக ஜனாஸா தொழுகையை நிறைவேற்றினார்கள். அதன்போது உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் "அல்லாஹ்வின் தூதரே! விபசாரம் புரிந்த ஒரு பெண்ணுக்காக நீங்கள் ஜனாஸா தொழுகையை நிறைவேற்றியுள்ளீர்களா?" எனக் கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "இவள் பாவமன்னிப்புக் கோரி தௌபா செய்து விட்டாள். இவளது தௌபா மதீனாவாசிகளில் எழுபது பேருக்கு மத்தியில் பகிரப்பட்டால் அது அவர்களுக்கு போதுமானதாக அமையும். அல்லாஹுத் தஆலாவுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இந்தப் பெண்ணை விட மிகவும் சிறந்ததொரு பெண்ணை உமரே! நீர் கண்டுள்ளீரா?" எனக் கேட்டார்கள். (ஸஹீஹு முஸ்லிம்)

இஸ்லாமிய குற்றவியல் தண்டனையை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அமுல்நடத்திய பான்மை பற்றி இந்த ஹதீஸ் விளக்குகின்றது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உருவாக்கிய அக்கால உன்னத முஸ்லிம் சமூகத்தில்கூட குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஏனெனில், அவர்கள் மனிதர்கள். மனிதப் பலவீனங்களால் உந்தப்பட்டு ஒரு பெண்மணி விபசாரம் செய்து விடுகின்றாள். அவள் திருமணம் முடித்த பெண்மணி. அவளுக்கு கல்லெறிந்து கொலை செய்யும் தண்டனையை நபிகளார் வழங்கி விடுகிறார்கள். இவ்வாறான விரல் விட்டு எண்ணக் கூடிய சில குற்றங்களே அந்தச் சமூகத்தில் நிகழ்ந்தன. ஒட்டு மொத்த சமூகத்திலும் குற்றங்கள், பாவங்கள் நிரம்பி வழியவில்லை. ஏனென்றால், அந்த சமூகத்தினது இறைவிசுவாசமும் இறையச்சமும் அதனது அடித்தளமாக காணப்பட்டன.

மதீனத்து மண்ணில் இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முதன்மையாக குற்றங்கள் இலகுவில் நிகழாத ஒரு சமூகச் சூழலை வஹியின் ஒளியில் தோற்றுவித்திருந்தார்கள். குற்றம் புரிந்த மனிதன் கூட குற்ற உணர்வுடன் காணப்பட்டான். குறித்த குற்றத்திற்கான தண்டனையை இவ்வுலகில் பெற்றுக் கொண்டு மறு உலகின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்குடன் தானாக முன்வந்து குற்றத்தை ஒப்புக் கொள்கின்ற விழுமியம் பரவலாகக் காணப்பட்டது. எனவேதான், அந்தப் பெண்மணி தானாக முன்வந்து தனக்கு தண்டனையளிக்குமாறு நபிகளாரிடம் வேண்டிக் கொள்கின்றாள்.

இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

அவர்கள் சட்டத்தை மதித்து வாழுகின்ற தனி மனிதர்களை அன்று உருவாக்கினார்கள். இஸ்லாமிய ஷரீஆவின் குறிக்கோள் மனிதர்களுக்கு நலன்களைப் பெற்றுக் கொடுப்பதும், அவர்களை தீமைகள் தீங்குகள் அணுகாது தடுப்பதுமாகும். இவ்வகையில் இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனி மனிதர்களின் மார்க்கம் அவர்களது உயிர், உடமை, மானம், பரம்பரை முதலானவற்றின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் நோக்கில் சட்டங்களை அமுல்படுத்தினார்கள்; தண்டனைகளை வழங்கினார்கள். சமூகத் தளத்தில் மார்க்க உபதேசங்களால் அல்லது உபன்னியாசங்களால் தம்மை மறுசீரமைத்துக் கொள்கின்ற மனிதர்கள் பெரும்பான்மையாக காணப்படுவார்கள். ஆனாலும், உபன்னியாசங்களால் திருந்தாத உள்ளங்களுக்கு சட்டங்களும் தண்டனைகளுமே அருமருந்தாக அமையும். இதனால்தான் உஸ்மான் இப்னு அப்பான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“அல்லாஹ் அல்குர்ஆனின் போதனைகளால் மாற்றியமைக்காததை அதிகாரத்தால் மாற்றுகின்றான்.”

இறைத்தூதர்கள் வெறும் மார்க்க உபன்னியாசிகளாக உலகத்திற்கு அனுப்பப்படவில்லை. அவர்கள் நீதத்தை நிலைநிறுத்தி சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற புரட்சியாளர்களாக அனுப்பப்பட்டார்கள். அவர்கள் ஒரு கரத்தில் வேத நூலையும் மறு கரத்தில் நீதியின் துலாக் கோலையும் சுமந்து வந்தார்கள்.

*“நிச்சயமாக நாம் எமது தூதர்களை தெளிவான அத்தாட்சிகளோடு அனுப்பி வைத்தோம். அவர்களுடன் வேத நூலையும் மனிதர்கள் நீதத்தின் அடிப்படையில் வாழ்வதற்காக நீதத்தின் துலாக் கோலையும் இறக்கி வைத்தோம்...”* (ஸூரா அல்ஹதீத்: 25)

இவ்வகையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீன மாநகரில் சட்டத்தின் ஆட்சியை ஸ்தாபித்தார்கள். குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்கினார்கள். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற சட்டப் பிரகடனத்தை இவ்வாறு தெளிவுபடுத்தினார்கள்.

“உங்களுக்கு முன் வாழ்ந்த சமூகத்தில் உள்ள மேன் மக்கள் குற்றமிழைத்தால் தண்டனைகள் வழங்கப்படாது அவர்கள் விட்டு விடப்படுவார்கள். கீழ்மக்கள் குற்றமிழைத்தால் தண்டிக்கப்பட்டார்கள். இதனால் அவர்கள் அழிந்து போனார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மதின் மகள் பாத்திமா திருடினாலும் அவளது கரத்தைத் துண்டித்து விடுவேன்” என நபியவர்கள் கூறினார்கள்.

நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நீதத்தின் துலாக்கோல் கொண்டு தண்டனையை நிறைவேற்றியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது திருமணம் முடித்து விபசாரம் செய்ததினால் கர்ப்பமுற்ற பெண்ணுக்கு மட்டும் தண்டனை வழங்கினார்கள். கருவறையில் வளர்ந்த பிள்ளைக்கு தண்டனை வழங்கப்படவில்லை. ஏனெனில், அந்தப் பிள்ளை குற்றவாளி அல்ல. எனவே தான், பிள்ளையைப் பெற்றெடுத்ததன் பின்னர் அந்தப் பெண்ணை அழைத்து வருமாறு அவளது பொறுப்புதாரருக்கு அண்ணலார் கட்டளையிட்டார்கள். அவ்வாறே குற்றவாளிகளும் மனிதர்களே! என்ற நபிகளாரின் மனித நேயப் பண்பும் இந்த ஹதீஸில் தெளிவாக சுட்டிக்காட்டப்படுகின்றது. அதாவது, அந்தப் பெண்மணிக்கு தண்டனை வழங்கப்படும் வரை அவளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு அவளது பொறுப்புதாரரை நபியவர்கள் பணித்தார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அமுல்நடத்திய தண்டனைகள் உயர்ந்த நோக்கங்களை பின்புலமாகக் கொண்டுள்ளன. மனிதர்களது நிலைமைகளை சீரமைத்து அவர்களை தீமைகளிலிருந்து பாதுகாத்து அறியாமையிலிருந்து காப்பாற்றி வழிகேட்டிலிருந்து விடுவித்து நேர்வழியின் பால் வழிப்படுத்தி அல்லாஹ்வுக்கு மாறு செய்கின்ற விடயங்களை விட்டும் அவர்களைத் தடுத்து நிறுத்தி அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு வாழ்வதற்கு அவர்களை ஆர்வப்படுத்துவதே குற்றவியல் தண்டனைகளின் நோக்கமாகும். அல்லாஹுத் தஆலா நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை சட்டத்தையும் தண்டனைகளையும் அமுல்படுத்தி மனிதர்களை அடக்கி ஆளுகின்ற ஒருவராக அனுப்பவில்லை. உலகத்தாருக்கு ஓர் அருட்கொடையாகவே அனுப்பினான். எனவே, அவர்கள் அமுல்படுத்திய தண்டனைகள் இரக்க மனப்பான்மையின் விளைவேயன்றி வேறில்லை.

இஸ்லாமிய குற்றவியல் தண்டனைகளின் பின்புலத்தில் உயர்ந்த நோக்கங்கள் இருப்பது போல அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான அடிப்படைகளும் அவற்றுக்கு உண்டு. அவற்றை பின்வருமாறு வகுத்து நோக்க முடியும்:

01. பொதுவாக தண்டனைகள் குற்றங்கள் நிகழ்வதை தடை செய்யக்கூடிய வகையில் வலுவானதாக அமைதல் வேண்டும். அவ்வாறே குற்றங்கள் நிகழ்ந்ததன் பின்னர் குற்றவாளிக்கு ஒழுக்கம் கற்பிக்கக் கூடிய வகையிலும் பிறர் அந்தக் குற்றவாளியைப்போல குற்றம் செய்வதற்கு அஞ்சுகின்ற அளவுக்கு எச்சரிக்கை விடுக்கக் கூடியதாகவும் அமைதல் வேண்டும். எனவேதான், சில சட்ட அறிஞர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்:

தண்டனைகள் குற்றங்கள் நிகழ்வதை தடைசெய்ய வல்லவை. குற்றங்கள் நிழந்த பின்னர் அதற்காக வழங்கப்படும் தண்டனைகள் அவை குறித்து எச்சரிக்கை செய்து மீண்டும் நிகழாதவாறு தடைசெய்யக் கூடியவை.

*02.* தண்டனைகள் சமூகத் தேவையையும் அதனது நலனையும் கருத்திற் கொண்டதாக அமைதல் வேண்டும். தண்டனைகள் கடுமையாக அமைவதை சமூக நலன் வேண்டி நின்றால் தண்டனைகள் கடுமையாக அமைதல் வேண்டும். தண்டனைகள் இலகுவானதாக அமைய வேண்டும் என்பதை சமூக நலன் வேண்டி நின்றால் தண்டனைகள் இலகுவானதாக அமைய வேண்டும். எனவே, தண்டனைகள் சமூகத்தின் தேவையைவிட அதிகமானதாகவோ அல்லது குறைவானதாகவோ அமைய முடியாது.

*03.* குற்றவாளி சமூகத்லிருந்து துடைத்தெறியப்படுவதன் மூலமாக அவனது தீங்கிலிருந்து சமூகத்திற்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமென்றால் அவன் கொலை செய்யப்படுதல் தண்டனையாக அமைதல் அவசியமாகும். அவன் தனது நிலைமையை மறுசீரமைத்து தௌபா செய்யும் வரை சிறையில் அடைக்கப்படுவதே சமூகத்திற்கான பாதுகாப்பாக அமையுமாக இருந்தால் மரணிக்கும் வரை சிறையில் அடைக்கப்படுதல் தண்டனையாக அமைய வேண்டும்.

*04.* தனி மனித சீர்திருத்தத்திற்கும் சமூக பாதுகாப்புக்கும் வழிவகுக்கக்கூடிய அனைத்து தண்டனைகளும் சட்ட ரீதியான தண்டனைகளாகும். ஏனவே, இவற்றில் ஒன்றை விடுத்து அடுத்த சிலவற்றை தண்டனைகளாக வரையறை செய்யக்கூடாது.

*05.* குற்றவாளிக்கு ஒழுக்கம் கற்பித்தல் என்பது அவனைப் பழிவாங்குதல் என்று பொருள் கொள்ளலாகாது. மாறாக, அவனைச் சீர்திருத்துவதை வேண்டி நிற்கும். "தண்டனைகள் அல்லாஹ் தனது அடியார்கள் மீது வைத்திருக்கும் இரக்க மனப்பான்மையின் விளைவாகும். தண்டனைகள் படைப்புக்களின் மீது அவனுக்கு உள்ள அன்பு அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற அவனது நாட்டம் முதலானவற்றில் இருந்து உருவாகின்றன. எனவே, மனிதர்களின் குற்றங்களுக்காக தண்டனை வழங்குவோர், தந்தை பிள்ளைக்கு ஒழுக்கம் கற்பிப்பது போல அல்லது மருத்துவர் நோயாளிக்கு மருத்துவம் செய்வதுபோல அவர்களும் அன்பைப் பரிமாறி அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதை இலக்காகக் கொள்வது அவசியமாகும்." (இக்தியாராது இப்னு தைமிய்யா)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அந்தப் பெண்மணிக்கு தண்டனை வழங்கியதன் பின்னணியில் மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து அடிப்படைகளும் காணப்படுகின்றன. எனவேதான், அந்தப் பெண்மணி தனது குற்றத்திற்காக தௌபா செய்து தன்னைச் சுத்திகரித்துக் கொண்டு சீர்திருந்திய நிலையில் அல்லாஹ்வை சென்றடைந்தாள்.

மனிதருள் மாணிக்கம் மாநபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மனிதர்களுக்கு தண்டனை வழங்குவதில் போரார்வம் கொண்டவர்களாக வாழவில்லை. இயன்றவரை தண்டனைகளில் இருந்து மனிதர்களை விடுவிப்பதையே இலக்காகக் கொண்டிருந்தார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் முடியுமானவரை முஸ்லிம்களுக்கு தண்டனை வழங்குவதைத் தடுத்துக் கொள்ளுங்கள். ஒரு முஸ்லிமை தண்டனையிலிருந்து விடுவிப்பதற்கு உங்களுக்கு ஒரு வழி கிடைத்தால் அவரை அவரது வழியில் விட்டு விடுங்கள். ஏனெனில், சமூகத் தலைவர் மன்னிப்பு அளிப்பதில் தவறிழைப்பதானது தண்டனை வழங்குவதில் தவறிழைப்பதைவிட மேலானதாகும்." (திர்மிதி, பைஹகி)

ஒரு முறை மாயிஸ் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து தான் விபசாரம் செய்து விட்டதாக கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டு தனக்கு தண்டனை வழங்குமாறு வேண்டிக் கொண்டார்கள். ஆனால், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவரின் முகத்தைப் பார்க்காமல் திரும்பினார்கள். "உமக்கென்ன பைத்தியமா?" எனக் கேட்டார்கள். "விபசாரத்திற்கான முன்னேற்பாடான நடவடிக்கைகளில் ஒன்றை செய்து விட்டு விபசாரம் என்று கூறுகின்றீரா?" என்று பலவாறு கேட்டார்கள். பின்னர் அவர் குற்றமிழைத்ததற்கான நான்கு சாட்சிகளைக் கொண்டு வந்ததன் பின்னரே "நீர் திருமணம் முடித்தவரா?" என நபியவர்கள் கேட்டு விட்டு "இவரை அழைத்துச் சென்று கல்லெறிந்து கொலை செய்யுங்கள்" என்று கட்டளையிட்டார்கள்.

(அல்புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒருவருக்கு இறுதிக் கட்டத்திலேயே தண்டனை வழங்கி விடுவார்கள். அவர்கள் வழங்கிய தண்டனைகள் அரபு நாட்டுக்குச் சொந்தமானது என்று பொதுவாகப் பேசப்பட்டாலும் அவை எல்லாப் பிரதேசத்திற்கும் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமானதாகும். அவை அரபு நாட்டுச் சட்டங்களல்ல. அவை இஸ்லாமிய குற்றவியல் சட்டங்களும் தண்டனைகளுமாகும். இவற்றின் சொந்தக்காரனாக அல்லாஹ் இருக்கிறான். அல்லாஹ் படைப்பாளன். படைப்புக்களின் இயல்புகளையும் சுபாவங்களையும் பலவீனத்தையும் பலத்தையும் மிகவும் அறிந்தவன் அவனே! அவனே சட்டமியற்றினான். இறைவனது சட்டத் தீர்ப்புக்களை ஏற்று அங்கீகரிக்கும் இயற்கைத் தன்மை (பித்ரா) மனிதனுக்குள் என்றும் அழியாமல் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டே இருக்கும்.

நாம் வாழும் தேசத்தில் குற்றச் செயல்கள் முன்னெப் போதுமில்லாதவாறு அதிகரித்துச் செல்கின்றன. ஆனாலும், எமது தேசத்தில் மத நம்பிக்கை கொண்ட மூவின மக்கள்

**இஸ்லாமிய குற்றவியல் தண்டனைகள் காலத்தின் தேவையாக அமைந்து விட்டன. அவை காலம் கடந்தவையுமல்ல; குரூரமானவையுமல்ல. படுமோசமான குற்றச் செயல்களை தடுத்து நிறுத்துகின்ற அளவுக்கு மனித சட்டங்கள் வலுவானதாக இல்லை. அவை குற்றவாளியை பரிதாபகரமானவனாகவும் நோயாளிகளாகவும் நோக்கி அவனை சட்டத்தின் பிடியிலிருந்து விடுவிக்கக் கூடிய ஏற்பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ளன.**

வாழ்கின்றனர். அவர்களது சமயம், பண்பாடு மற்றும் ஒழுக்கம் முதலானவற்றை நெறிப்படுத்த வல்ல மதகுருமார்கள், அறிஞர் பெருமக்கள் அதிகம் வாழும் நாடு இது. மதத்தை தனியாக போதிக்கும் பாடசாலைகளும் அறநெறி பாடசாலைகளும் தாராளமாக உள்ள தேசம். மார்க்க உபன்னியாசங்களுக்கும் குறைவில்லை. ஆனாலும், நாளை மலரும் மொட்டுக்களை இன்றே கசக்கி வீசி விடுகின்ற காமுகர்களை எம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்தத் தேசத்தை பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுத்த முப்படையால் சிறுவர் உலகத்தைப் பாதுகாக்க முடியவில்லை. இப்போது பித்ரா என்னும் இயல்புத் தன்மை மெல்ல பேசத் துவங்கியுள்ளது. அதாவது "மரண தண்டனையை அமுல்படுத்துங்கள்" என்ற கோஷம் மேலெழுந்து வருகின்றது.

எனவே, இஸ்லாமிய குற்றவியல் தண்டனைகள் காலத்தின் தேவையாக அமைந்து விட்டன. அவை காலம் கடந்தவையுமல்ல; குரூரமானவையுமல்ல. படுமோசமான குற்றச் செயல்களை தடுத்து நிறுத்துகின்ற அளவுக்கு மனித சட்டங்கள் வலுவானதாக இல்லை. அவை குற்றவாளியை பரிதாபகரமானவனாகவும் நோயாளிகளாகவும் நோக்கி அவனை சட்டத்தின் பிடியிலிருந்து விடுவிக்கக் கூடிய ஏற்பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ளன. இஸ்லாமிய குற்றவியல் சட்டங்கள் பாதிக்கப்பட்டவர்களின் பக்கம் நின்று குற்றவாளிக்கு தகுந்த தண்டனையைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளன.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உருவாக்கிய தூய இஸ்லாமிய சமூகச் சூழலில் நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பில் அவர்கள் பராமுகமாக இருந்ததில்லை. அவை தொடர்பாக துல்லியமான விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்குரிய தண்டனையை வழங்கி சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஆன்மிக வாழ்வுக்கு மட்டும் முன்மாதிரியாக இருந்ததில்லை. சமூக வாழ்வுக்கும் அழகிய முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். இவ்வகையில் குற்றவாளிகளுக்கு தண்டனைகளை வழங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு அருட் கொடையாக அமைந்தார்கள். ஆரோக்கியமான சமூக வாழ்வு என்பது மழை பொழிந்து பூமி வளம் பெறுவதில் மட்டுமல்ல, தண்டனைகள் பூமியில் நிலை நாட்டப்படுவதிலும் தங்கியுள்ளது என்பதை அண்ணலார் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்:

"பூமியில் ஒரு தண்டனை நிறைவேற்றப்படுவது மனிதர்களுக்கு நாற்பது நாட்கள் மழை பொழிவதைவிட சிறந்ததாகும்." (நஸாஈ, அஹ்மத்)

ஆகவே, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நிறைவேற்றிய குற்றவியல் தண்டனைகள் மனிதர்களை வாழ்வாங்கு வாழவைக்கும் பண்பியல்பு கொண்டவை.

*"புத்திஜீவிகளே! பழிக்குப் பழி வாங்கும் தண்டனையில் உங்களுக்கு வாழ்வு இருக்கின்றது. நீங்கள் இறையச்சம் உள்ளவர்களாகலாம்."* (ஸூரதுல் பகரா: 179) ■



**"இஸ்லாம் வித்தியாசமான கலாசாரங்களை அங்கீகரிக்கின்றது. ஆபிரிக்க, ஆசிய, மேற்கத்தேய கலாசாரங்களுக்கு அது ஒரு போதும் முரண்படுவதில்லை. மேற்கில் வசிக்கும் முஸ்லிம்கள் அரேபிய கலாசாரத்தை பின்பற்ற வேண்டியதில்லை. இவ்வாறு கலந்து வாழ முற்படும்போது இஸ்லாத்தில் மாறாத் தன்மை கொண்ட பகுதிகள், மாறும் தன்மை கொண்ட பகுதிகள் பற்றிய ஆழமான அறிவு இருக்க வேண்டும். இப்பின்னணியில் மாறும் பகுதியில் கலந்து வாழ்வதற்கான அனைத்து வாயில்களும் திறந்து கொடுக்கப்படுவதற்கான இஜ்திஹாத்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்."**

**-பேராசிரியர் தாரிக் ரமழான்-**


# அண்டை வீட்டுத் தோழனுக்கு ஓர் அழகிய உபதேசம்

■ இஸட்.ஏ.எம். பவாஸ்
சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், மலேசியா

ஸூரதுல் கஹ்ஃபில் குகைத் தோழர்களின் வரலாற்றை விவரித்து விட்டு அல்லாஹ் அண்டை வீட்டுத் தோழர்களான இருவரின் சரிதையை ஆரம்பிக்கிறான். அந்த ஸூரா அழகுற விளக்கும் நான்கு சரிதைகளில் இது இரண்டாவதாகும். குகைவாசிகளின் வரலாறோ நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான் மீட்டப்படலாம். ஆனால், தற்போது நாம் படிக்கவிருக்கும் கதை நம் அன்றாட வாழ்வில் எப்போதும் நிகழக் கூடியதாகும்.

**இரு தோட்டங்களின் சொந்தக்கார னும் சடவாத சித்தாந்தமும்**

இதற்கு முன் அல்லாஹ் இணை வைப்பாளர்களைப் பற்றி குறிப்பிட் டான். அவர்கள் நலிந்த ஏழை முஸ் லிம்களுடன் சமமாக அமர்வதைக் கேவலமாகக் கருதினர். செல்வத்தா



திராட்சை தோட்டங்கள் பலமான பேரீத்த மரங்களால் பாதுகாக்கப் பட்டன. மேலும், அவ்விரு தோட் டங்களுக்கிடையில் வேறு பயிர்களை முளைப்பிப்பதற்கு ஏற்றவாறு ஒரு பெரும் விவசாய நிலமும் இருந்தது.

*“அவ்விரு தோட்டங்களும் அவற் றின் பலனை எவ்வித குறையுமின்றி வழங்கிக் கொண்டிருந்தன.” (18: 33)*

பொதுவாக விவசாயிகள் விதையை விளைச்சல் நிலத்தில் தூவிய நாள் முதல் பெரும் நெருக்கடிகளுக்கும் பேராபத்துக்களுக்கும் மத்தியில் நிம் மதியிழந்து வாழ்கிறார்கள். வெள்ளம், புயற்காற்று, கோடை, அளவு கடந்த மழை, கிருமிகளின் பாதிப்பு முதலான அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால், இந்த மனிதனின் இரு தோட்டங்களும் இத்தகைய எந்தப் பிரச்சினையையும் எதிர்நோக் கவில்லை. “جَنَّتَيْنِ” என்றால் இரு தோட்டங்கள் என்று பொருள். “كِلْتَا الْجَنَّتَيْنِ” என்ற பிரயோகம் முழுத்

லும் குடும்ப பாரம்பரியத்தாலும் அந்த முஸ்லிம்களைவிட தாங்கள் உயர்ந் தவர்கள் என்று தற்பெருமை கொண் டனர். இங்கு அந்த இணைவைப் பாளர்களுக்கு இரு மனிதர்களை எடுத்துக்காட்டாகக் கூறுகிறான். அவர்களில் ஒருவருக்கு பாக்கியம் பொருந்திய இரு தோட்டங்கள் இருந்தன. அல்லாஹ் நல்லடியார்க ளுக்காக சித்தம் செய்து வைத்திருக் கும் நிலையான சுவனத் தோப்புக்கள் பற்றி கூறிவிட்டு அடுத்த வசனத்தி லிருந்து இந்த நிலையற்ற தோட் டங்களையுடைய சொந்தக்காரனின் கதையை துவங்குகிறான்.

*“இரு மனிதர்களை உதாரணமாக அவர்களுக்கு நீர் கூறுவீராக! அவர்களில் ஒருவருக்கு இரு திராட்சைத் தோட் டங்களை நாம் ஏற்படுத்தினோம். பேரீத்த மரங்களால் அவ்விரண்டையும் சூழச் செய்தோம். மேலும், அவ்விரண் டுக்குமிடையில் பயிர்களையும் ஏற்ப டுத்தினோம்.” (18: 32)*

எல்லா வகையிலும் நற்பாக்கியம் பெற்று அல்லாஹ்வின் அருள்களை அனுபவித்துக் கொண்டிருந்த ஒரு மனிதனின் கதை இது. இன்பத்துக் கும் மகிழ்வுக்கும் உரிய அனைத்து சாதனங்களும் அவனிடம் இருந்தன. புயல் காற்று வீசும்போது திராட்சைத் தோட்டங்கள் பாதிப்படையாதவாறு அல்லாஹ் பேரீத்த மரங்களை ஏற்ப டுத்தியிருந்தான். இந்த வசனத்தில் ‘ضَرَبَ’ என்ற சொல் நாலா புறங்க ளிலும் பேரீத்த மரங்கள் சூழ இருந்ததை சுட்டுகிறது. எனவே, பலவீனமான

தோட்டமும் ஒட்டுமொத்தமாக அவற்றிலுள்ள ஒவ்வொரு பயிரும் அவற்றிலுள்ள ஒவ்வொரு கிளையும் கனிகளை வெளிப்படுத்தியது என் பதை ஆணித் தரமாக எடுத்தியம்பப் பயன்படுத் தப்பட்டுள்ளது. அவை நூறு சதவீத விளைச்சலைக் கொடுத் தன.

*“அவ்விரண்டுக்குமிடையில் ஓர் ஆற்றையும் ஓடச் செய்தோம்.” (18: 33)*

நீர்ப்பாசனம் பற்றி அவன் அலட்டிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. கோடை காலத்தில் அவன் மழை வேண்டிப் பிரார்த்திக்க வேண்டிய தேவையில்லை. இரண்டு தோட் டங்களுக்கு இடையிலும் பீறிட்டுப் பாயும் ஆறு அவற்றுக்கு மென்மேலும்

**உலகத்தின் செல்வங்களும் வளங்களும் நிரந்தரமானவையல்ல. சிலருக்கு அதிகமாகவும் மற்றும் சிலருக்கு குறைவாகவும் வழங்கப்படும். இந்தப் பங்கீடு மாறாத ஒன்றல்ல. இயற்கைக் காரணிகளின் கடிவாளமும் இவ்வுலகை ஆளுகின்ற அதிகாரமும் வல்லமை மிக்க அல்லாஹ்வின் கையி லிருந்து நழுவக்கூடியதல்ல.**

அழகு சேர்க்கிறது.

*"இன்னும் அவனுக்கு வேறு கனிகளும் இருந்தன." (18: 34)*

இங்கு கனிகள் என்பதைக் குறிக்க மூலத்தில் "ثَمَرٌ" எனும் சொல் கையாளப்பட்டுள்ளது. அவ்வாறெனில், இவற்றுக்கப்பால் தங்கம், வெள்ளி, குதிரைகள் முதலான வேறு செல்வங்களையும் அவன் கொடுக்கப் பெற்றிருந்தான்.

ஒரு நாள் இந்தச் செல்வந்தன் தன் பக்கத்து வீட்டு ஏழைத் தோழரோடு உரையாடிக் கொண்டிருக்கிறான்.

*"அவன் தன்து தோழனுடன் உரையாடிக் கொண்டிருக் கும்போது 'நான் உன்னைவிட செல்வத்தால் அதிகமானவனும் ஆள் பலத்தால் மிகைத்தவனுமாவேன்' என்று அவனிடம் கூறினான்." (18: 34)*

இந்த வசனத்தில் "وَهُوَ يُحَاوِرُهُ" என்பது முக்கியமானது. அதாவது அவர்கள் இருவரும் வேறு அம் சங்களைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கும்போதுதான் அந்த செல்வச் சீமான் தனது சொத்துக்கள் பற்றி பெருமை யடிக்க பேசுபொருளை மாற்றுகிறான். இவ்வாறு அவன் சடவாதியாக மாறுகிறான். அவனது செல்வச் செழிப்பு அவனுடைய உள்ளத்தை ஆட்கொண்டு விடுகிறது. நாளை அழிந்துபோகும் உலகப் பொருட்களில் மோகம் கொண்டு, அவற்றில் தான் தங்கி வாழ்வதாகக் கருதுகிறான். இவை யாவும் தனது சொந்த ஆற்றல்கள் மூலமாக கிடைத்ததாக வும் அவற்றை உரிமை கொள்வதற்கு தான் மிகவும் அருக தையுடையவன் என்றும் நம்புகிறான். மூஸா (அலைஹிஸ் ஸலாம்) அவர்களின் எதிரி காரூனும் இப்படித்தான் கருதினான்:

*"இது எனக்கு வழங்கப்பட்டதெல்லாம் என்னிடமுள்ள அறிவின் மூலமேயாகும்." (28: 78)*

இதற்கு முந்தைய வசனங்களில் அவன் பெற்றுள்ள செல்வங்கள் யாவும் அல்லாஹ்வால் கொடுக்கப்பட்டவை என்றே அல்லாஹ் கூறினான்.

*"நாம் ஏற்படுத்தினோம்... நாம் சூழச் செய்தோம்..." (18: 32)*

ஒரு தடவை அந்தச் சீமான் தனது செல்வச் செழிப்பின் பிறப்பிடமும் அதிகார பலத்தின் உறைவிடமுமான தன் இரு தோட்டங்களையும் பார்வையிட்டு கண்குளிர்ச்சி அடையச் சென்றான். தன்னையும் தன் இறைவனையும் மறந்து, தனக்கும் தனது உள்ளத்துக்கும் இடையில் குறுக்கீடு செய்யும் இறைவனின் பேராற்றலையும் மறந்து கர்வத்துடன் அதில் நுழைகிறான்.

*"தனக்குத்தானே அவன் அநீதி இழைத்துக் கொண்ட நிலையில் தனது தோட்டத்தில் நுழைந்து 'இது ஒருபோதும் அழியும் என நான் நினைக்கவில்லை' என்று கூறினான்." (18: 35)*

18: 33 ஆம் வசனத்தில் இரு தோட்டங்களும் நூறு வீத விளைச்சலை எவ்விதக் குறைவுமின்றிக் கொடுத்தன என்பதைச் சுட்டிக்காட்ட "தோட்டங்கள் அவனுக்கு அநீதி இழைக்கவில்லை" என்று அல்லாஹ் குறிப்பிடுகின்றான். இங்கு அதே தோட்டத்தில் அந்த மனிதன் தனக்குத் தானே அநீதி இழைத்துக் கொண்டு நுழைவதாகக் கூறுகிறான். இரண்டு வசனங்களிலும் "ظُلْمٌ" அநீதி) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

*"மறுமை நிகழும் என்றும் நான் நினைக்கவில்லை. என் இறைவனிடத்தில் நான் மீட்டப்பட்டாலும் இதை விடச் சிறந்ததொரு மீளுமிடத்தை நான் நிச்சயமாகப் பெறுவேன் என்றும் கூறினான்." (18: 36)*

### ஞானமும் நளினமும் நிறைந்த நல்லுபதேசம்

அந்தச் செல்வந்தனுக்கு இறை நம்பிக்கையாளரான ஓர் ஏழை நண்பர் இருந்தார். அவருடைய சொத்து செல்வங்கள் அல்லது உடைமைகள் பற்றி அல்லாஹ் எதுவும் கூறவில்லை. ஏழையாக இருந்தாலும் அவரிடம் அறிவு, ஞானம், இறை நம்பிக்கை முதலான அழியாத செல்வங்கள் இருந்தன. இந்தப் பேரண்டத்தை நிருவ கிப்பவனும், இயற்கைக் காரணிகளைத் தீர்மானிப்ப வனும் கொடுப்பவனும் தடுப்பவனுமாகிய அல்லாஹ்வை அவர் நன்கு அறிந்து வைத்திருந்தார். தான் இத்தகைய சடவாத சிந்தனையிலிருந்து விலகி, ஈமானிய சிந்தனை யிலிருந்து அனைத்தையும் நோக்குவதாக தன் நண்பனி டம் எடுத்துரைக்கிறார். அல்லாஹ் தனக்கு அருளிய வற்றுக்கு நன்றிக்கடன் உள்ளவனாக மனிதன் திகழ வேண்டும் என்று தன் வாதத்தை நளினமாக முன்வைக் கிறார். தன் அண்டை வீட்டான் மூலம் தான் தனிப்பட்ட ரீதியில் இழிவுபடுத்தப்பட்டபோது அவர் வாய் திறந்து ஒரு வார்த்தைகூட பேசவில்லை என்பதை இதுவரை நோட்டமிட்டோம். ஆனால், அல்லாஹ்வையும் அவனது பேராற்றல்களையும் மறந்து, மறுமையை நிராகரித்து மார்க்க விடயத்தில் சர்ச்சை வந்தபோதுதான் தான் இனியும் மௌனமாக இருக்க முடியாது என்று தீர்மா னிக்கிறார்.

*"நம்பிக்கையாளரான அவனது தோழர் இவனுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது 'உன்னை மண்ணாலும்,*

பின்னர் இந்திரியத் துளியாலும் படைத்து பின்னர் உன்னை மனிதனாக ஒழுங்குற அமைத்தவனையா நீ நிராகரிக்கிறாய்?' என இவனிடம் கேட்டார்.'' (18: 37)

அல்குர்ஆனில் ''كَفَرَ'' என்ற சொல் ஈமான், ஷுக்ர் ஆகிய இரண்டு சொற்களுக்கும் எதிர்ச் சொல்லாகப் பயன் படுத்தப்படுகிறது. எனவே ''أَكَفَرْتَ'' என்பது 'நீ நிராகரிக் கலாமா?' அல்லது 'நீ நன்றி கெட்டவனாக மாற முடியுமா?' என்ற இரு பொருள்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'எதுவுமே இல்லாத நிலையில் இருந்த யாரும் அருவருக்கக் கூடிய அற்ப இந்திரியத் துளியால் அல்லாஹ் உன்னைப் படைத்தான்' என்று கூறுகிறார். ''எனினும் அல்லாஹ்வே எனது இறைவன். என் இறைவனுக்கு ஒருவனையும் நான் இணை யாக்க மாட்டேன்.'' (18: 38) 'நீ இணைவைக்காதே' என்று கூறாமல் 'நான் இணைவைக்க மாட்டேன்' என்று தன் உள்ளத்திலுள்ள ஏகத்துவ நம்பிக்கையை வெளியிடுகிறார்.

''நீ உன் தோட்டத்தில் நுழைந்தபோது 'மாஷா அல்லாஹ் லா குவ்வத இல்லா பில்லாஹ்' (அல்லாஹ் நாடியதே நடக்கும். பலம் அனைத்தும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் இல்லை) என்று கூறியிருக்கக் கூடாதா?'' (18: 39)

இந்தத் தோழரின் இத்தகைய நல்லுபதேசமானது இதற்கு முந்தைய வசனங்களில் அல்லாஹ் தன் தூதருக்கு வழங்கிய அறிவுரையாகும். ''நபியே! எந்த விடயத்தையும் 'நிச்சயமாக நான் நாளை செய்வேன்' என்று நீர் கூற வேண்டாம். 'அல்லாஹ் நாடினாலே தவிர' என்று கூறுங்கள்.'' (18: 23-24)

அல்லாஹ் நாடியதுதான் எப்போதும் நடைபெறும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுள்ள ஒருவர் எவ்வாறு உலகத்தின் சாதனங்களில் தங்கியிருப்பார்?

''உன்னைவிட என்னை பொருட் செல்வத்திலும், பிள்ளைச் செல்வத்திலும் குறைந்தவன் என நீ கருதிய போதிலும் என் இறைவன் உனது தோட்டத்தைவிட சிறந்ததை எனக்குத் தரவும் அத்துடன் வானத்திலிருந்து தண்டனையை அதற்கு அனுப்பவும் போதுமானவன். அதனால் அது வழுக்கக்கூடிய வெட்ட வெளியாக ஆகிவிடும் அல்லது அதன் நீர் வற்றியதாக மாறி, அதனை நீ தேடிக் கண்டுகொள்ள சக்தி பெறாமல் ஆகி விடுவாய்.'' (18: 39-41)

உலகத்தின் செல்வங்களும் வளங்களும் நிரந்தர மான வையல்ல. சிலருக்கு அதிகமாகவும் மற்றும் சிலருக்கு குறைவாகவும் வழங்கப்படும். இந்தப் பங்கீடு மாறாத ஒன்றல்ல. இயற்கைக் காரணிகளின் கடிவாளமும் இவ்வுலகை ஆளு கின்ற அதிகாரமும் வல்லமை மிக்க அல்லாஹ்வின் கையி லிருந்து நழுவக்கூடியதல்ல.

**இவ்வளவுதான் உலக வாழ்க்கை!**

இறுதியில் அவ்வாறே நடைபெற்றது. ஆழ்ந்த உறக்கத் திலிருந்த அந்த மனிதன் விழித்தெழுகிறான்.

''அவனது பலன்கள் அழிக்கப்பட்டன. அத்தோட்ட மானது வேரோடு சாய்ந்து தலைகீழாகக் கிடக்க அதற்கா கத் தான் செலவிட்டதை எண்ணி தனது இரு கைகளைப் பிசைந்தவனாக 'என் இறைவனுக்கு நான் ஒருவனையும் இணையாக்காது இருந்திருக்கக் கூடாதா?' என்று கூறி னான்.'' (18: 42)

செல்வச் செழிப்பிலும் ஆடம்பரத்திலும் இருந்த அவனது தோட்டங்கள் அனர்த்தத்தையும் அழிவையும் நோக்கி கொண்டு செல்லப்பட்டன. அவனது தோட் டங்களின் கவர்ச்சியை வர்ணிக்க நான்கு வசனங்களைப் பயன்படுத்திய அல்லாஹ் அதன் அழிவை ''وَأُحِيطَ بِثَمَرِهِ'' என்ற இரண்டே இரண்டு சொற்களுடன் கூறி முடித்தான். ஆட்பலத்தை வைத்தும் பெருமையடித்த அவனுக்கு என்ன நடந்தது?

''அல்லாஹ்வையன்றி அவனுக்கு உதவி செய்வதற்கு எந்தவொரு கூட்டமும் இருக்கவில்லை. அவன் தன்னைத் தற்காத்துக் கொள்பவனாகவும் இருக்கவில்லை.'' (18: 43)

கண்கவரும் அந்தத் தோட்டங்கள் அழிக்கப்பட்ட தைக் கூறிவிட்டு, மனித குலத்துக்கு அல்லாஹ் உலக வாழ்வின் யதார்த்தத்தைக் கற்றுத் தருகிறான்.

''இவ்வுலக வாழ்க்கையின் உதாரணத்தை அவர்களுக்கு நீர் கூறுவீராக. அது வானத்திலிருந்து நாம் இறக்கிய நீரைப் போன்றது. பின்னர் பூமியின் தாவரங்கள் அதனுடன் இரண்டறக் கலந்து செழித்தன. பின்னர் அது காற்றடித்துச் செல்லும் காய்ந்த சருகுகளாக மாறின.'' (18: 45)

உலக வாழ்வின் நிலையற்ற தன்மையையும் மரணத் துக்குப் பின்னுள்ள நித்திய, அழியாத வாழ்வையும் அதற்காக உழைத்து, அர்ப்பணங்கள் புரிவதன் முக்கியத்து வத்தையும் அல்குர்ஆன் விலாவாரியாக விவரித்துள்ளது.

பார்க்க (6:32), (9:98), (10:24), (11:15-16), (14: 3), (28:60), (29: 64), (30: 7) ■



**சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி கோரல்**


இல: 863, சாலிகா அரிசி ஆலை வீதி, சாய்ந்தமருது - 15 எனும் முகவரியில் வசித்து வரும் வயது வந்த ஒரு பெண் பிள்ளையின் தந்தையான எஸ்.ஏ. தௌபீக் என்பவர் நீரிழிவு நோய் காரணமாக தனது இரு கண்களினதும் பார்வையை முழுமையாக இழந்துள்ளார் எனவும் சத்திர சிகிச்சை மூலம் இவருக்கு மீண்டும் பார்வை கிடைக்கச் செய்ய முடியும் எனவும் கொழும்பு Vasan Eye Care கண் வைத்திய நிபுணர் டாக்டர் பீ. ஸ்ரீஹரநாதன் உறுதிப்படுத்தி யுள்ளார். எவ்வித வருமானமுமற்ற நிலையில் சத்திர சிகிச்சைக்குத் தேவைப்படும் ரூபா 250,000 நிதியை இரக்க சிந்தனை கொண்ட தனவந்தர்களிடம் வேண்டி நிற் கிறார்.


தொடர்புகளுக்கு : 077 6449053
கணக்கு இல : 064-2001-700-41384
மக்கள் வங்கி, சம்மாந்துறை

**ஆப்கான் முஜாஹித்களின் தியாகத்தையும் இரத்தத்தையும் வியர்வையையும் தங்களது அரசி யல் இலக்குகளுக்கு முதலீடாகக் கொள்வதனையும் அவர்கள் எதிர்த்தனர். என்றாலும்கூட, தூய நோக்கத் துடன் களத்தில் குதித்த ஆப்கான் இஸ்லாமியப் போராளிகளை தங்களது புவி அரசியல் நலன்களுக்கு இரையாக் கிக் கொள்வதற்காக அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர்கள் வரைந்த ஆப்கான் யுத்தத்தை சர்வதேசமயப் படுத்தும் திட்டம் இறுதியில் வெற்றி பெற்றது. இதுவே படிப்படியாக இஸ்லாத்தின் பெயரிலான ஒழுங்குபடுத்தப்பட்ட சர்வதேச வன்முறைக் குழுக் களின் (So-called Islamic transnational violent organiza tions) உருவாக்கத்திற்கும் வித்திட்டது.**

முஹம்மத் ஸகி பவுஸ் (நளீமி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை,
E-mail: zackymfm@gmail.com



# அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையும் இஸ்லாமிய அரசு இயக்கத்தின் எழுச்சியும்

## American Foreign Policy and the rise of Islamic State

**அரபுலகில்** வேகமாக ஆதிக்கம் செலுத்தும் வன்முறைக் குழுவான இஸ்லாமிய அரசு இயக்கத்தின் எழுச்சியின் பின்னணி என்ன? என்பது தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் வெளிவந்து விட்டன. இஸ்லாத்தின் கோட்பாடுகளே அதனைத் தூண்டுவதாக என சில ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இத்தகைய வன்முறைத் தன்மை மற்றும் மனித விழுமியங்களை குழிதோண்டிப் புதைக்கும் குழுவை இஸ்லாத்தின் ஜிஹாத் என்ற சித்தாந்தமே வழிநடத்துகிறது என்பதே அவர்களின் ஆய்வுச் சுருக்க மாகும்.

குறிப்பாக, சமீபத்தில் த அட்லான்டிக் (The Atlantic) சஞ்சிகையில் வெளிவந்த "What ISIS really wants?" என்ற கட்டுரையில் அதன் ஆசிரியரான அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை பேராசிரியர் கிரஹேம் வுட் "The Islamic State is Islamic, very Islamic" (இஸ்லாமிய தேசம் இயக்கம் இஸ்லாத்தில் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. அது முழுமையாக இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு அமையவே தொழிற்படுகிறது) எனக் குறிப்பிடுகிறார். வேறு சில ஆய்வுகள் மற்றொரு கோணத்தில் விடயத்தை அலசுகின்றன. அதாவது, இஸ்லாமிய அரசு இயக்கத்தின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் அதன் பரவலிலும் மத்திய கிழக்கின் சர்வாதிகார மன்னராட்சிகளின் அடக்குமுறைகளும் ஒடுக்குதல்களுமே காரணமாகும் என அவை வாதிக்கின்றன. குறிப்பாக, அதிகரித்த மனித உரிமை மீறல்கள், நல்லாட்சியின்மை, ஜனநாயகமின்மை மற்றும் ஊழல்மோசடிகள் போன்றன வன்முறைக் குழுக்களின் எழுச்சியில் பொதுவாகவும் இஸ்லாமிய அரசு இயக்கத்தின் உருவாக்கத்தில் குறிப்பாகவும் பங்களித்துள்ளது. மறுபுறம், கடந்த மூன்று தசாப்தத்திற்கும் மேற்பட்ட காலமாகத் தொடரும் சஊதி அரேபியாவுக்கும் ஈரானுக்குமிடையிலான பிராந்தியப் போட்டியும் அதனையொட்டி வீறுகொண்டெழுந்த ஷீயா-ஸுன்னி மோதலுமே இஸ்லாமிய அரசு போன்ற வன்முறைக் குழுக்களின் தோற்றத்திற்கு அடிப்படையாகும் என்பது மூன்றாவது வகை ஆய்வுகள் முன்வைக்கும் கருத்தாகும். நான்காவதாக, இது அமெரிக்காவினதும்

மேற்கு நாடுகளினதும் சதித்திட்டம் (Conspiracy) என வேறு சில ஆய்வுகள் வியாக்கியானம் அளிக்கின்றன.

இஸ்லாமிய அரசு இயக்கத்தின் தோற்றத்தில் பங்களித்த மேற்குறிப்பிட்ட காரணிகளுள் எது சரியானது? என்பதனை உறுதியாகச் சொல்ல முடியாது. மேற்சொன்ன ஒவ்வொன்றுக்கும் பின்னால் நியாயங்களும் பிரதிவாதங்களும் நிறையவே எழுதப்பட்டு விட்டன. ஆனால், இவையனைத்திற்கும் அப்பால், மத்திய கிழக்கரசியல் விற்பன்னர் மர்வான் பிரஷாரா சதித் திட்டமோ, மதக் கோட்பாடுகளோ அல்லது மன்னராட்சியின் கெடுபிடிகளோ இஸ்லாமிய அரசு இயக்கத்தின் எழுச்சியில் பங்களித்ததை விடவும், அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை பங்களித்திருக்கிறது என்கிறார். அதனையே ஆய்வாளர் பிஷாரா "There is no American cons piracies in the Middle East, but only its policies created all the problems" (மத்திய கிழக்கரசியலில் அமெரிக்காவின் சூழ்ச்சிக் கோட்பாடுகள் அல்ல; அதன் கொள்கைகளே அனைத்துப் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளன) என எழுதுகிறார்.

*1980*கள் முதல் *2015* வரையான மத்திய கிழக்கரசியலை எவ்வாறு அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகள் மற்றும் அதன் கோட்பாடுகள் அணுகியது என்பதனை மிக நுணுக்கமாக அவதானிக்கும் பட்சத்தில், ஆய்வாளர் மர்வான் பிஷாராவின் கருத்தில் பல்வேறு உண்மைகள் இருப்பதனை அவதானிக்க முடியும்.

**ஆப்கான்- ரஷ்ய யுத்தமும் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையும்**

*1980* முதல் *1990* வரை பனிப் போர் சூழல் உச்ச கட்டத்தில் காணப்பட்ட காலமது. ஆப்கான் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு ஆரம்பித்தது. தெற்காசியா மற்றும் தென் மேற்காசிய (மத்திய கிழக்கு) பிராந்தியங்களில் கம்யூனிஸ ரஷ்யாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஆப்கான் இஸ்லாமிய விடுதலைப் போராளிகளுக்கு அமெரிக்கா மறைமுகமாக ஆதரவளித்தது. அமெரிக்கா மற்றும் இஸ்லாமியப் போராளிகளுக்கு மத்தியிலான கொடுக்கல் வாங்கல்களுக்கு மத்தியஸ்தம் வகிக்க பிராந்தியத்தின் மத்திய வங்கியான சஊதி அரேபியாவை வொஷிங்டன் தூண்டிக் கொண்டே இருந்தன. இத்தரகர் தொழிலுக்காக சஊதி அரேபியாவை வொஷிங்டன் தெரிவு செய்ததன் பின்புலத்தில் மூன்று பிரதான காரணிகள் இருக்கின்றன.

*01.* ஆப்கான் ஒரு பெரும்பான்மை முஸ்லிம் நாடு என்பதால், இஸ்லாமியப் போராளிகளுக்கும் மற்றும் அமெரிக்காவுக்குமிடையிலான கொடுக்கல்- வாங்கல்களை ஒரு முஸ்லிம் நாடு மத்தியஸ்தம் வகிப்பது நலம். ஏனெனில், ஆப்கான் இஸ்லாமியப் போராளிகள் மேற்குலக எதிர்ப்பு மனப்பான்மையைக் கொண்டவர்கள். எனவே, அவர்களுடனான கணக்கு வழக்குகளில் அமெரிக்கா தொடர்புபடுகிறது என்பதனை முழுமையாக அவர்களிடமிருந்து மறைப்பதே வெள்ளை மாளிகையின் இலக்காக இருந்தது. இவ் விருட்டறை அரசியல் திட்டமிடலுக்கு சஊதி அரேபியா மத்தியஸ்தம் வகித்தால் அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள் காட்சியிலிருந்து மறைந்து விடுவர்.

*02.* அன்று இஸ்லாமிய உலகில் மார்க்க ரீதியான தலைமைத்துவத்தை பணபலத்தின் மூலம் சஊதி அரேபியா தக்கவைத்துக் கொண்டிருந்தது. விளைவாக, சஊதி அரேபியா அறிவிக்கும் மார்க்க வழிகாட்டல்கள் பெரும்பாலான முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளில் செல்வாக்குச் செலுத்தின. இக்கருத்து இஸ்லாமிய மார்க்க அடிப்படையில் பிழையானது. ஆனாலும், முஸ்லிம்களின் பொது உளவியல் சஊதி அரேபியாவை இஸ்லாத்தின் பாதுகாவலராக ஏற்றுக் கொண்டிருந்தன. இப்பின்புலத்திலேயே மொஸ்கோவுக்கு எதிரான போரில் வெறுமனே அரசியல் ரீதியாக மாத்திரமன்றி, ஆப்கான் இஸ்லாமியப் போராளிகளை மார்க்க ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் தூண்டுமாறும், அதற்கு சார்பாக முஸ்லிம் உலகின் பொதுக் கருத்தை ஏற்படுத்துமாறும் மன்னர் பஹ்தின் அரண்மனைக்கு வெள்ளை மாளிகை உத்தரவிட்டது.

*03.* ஆப்கான் போராளிகளுக்கான முழுமையான செலவினங்களை அமெரிக்கா தனியாக சுமந்து கொள்ளாமல், சஊதி அரேபியாவுடன் பகிர்ந்து கொள்ள முடியும். காரணம், இப்போரில் எதிர்த்தரப்பான ரஷ்யாவுக்கு சார்பாக சிரியாவும் தெஹ்ரானும் நிழல் போராளிகளாக களமிறங்கினர். இதனை ஆதாரம் காட்டி ரியாதை தம்பக்கம் இணைத்துக் கொண்டது வொஷிங்டன்.

இச் சூழமைப் பின்புலத்தில், முடியுமான முஸ்லிம் இளைஞர்கள் (இஸ்லாத்தின் எதிரியான) ரஷ்யாவுக்கு எதிரான போரில் கலந்து கொள்ள வேண்டும் என சஊதி அரேபியாவின் மார்க்க அறிஞர்கள் மார்க்க ரீதியான தீர்ப்பு வழங்கினர். இதனால், மத்தியாசியா, ஆபிரிக்கா, தெற்காசியா, தென்கிழக்காசியா மற்றும் மத்திய கிழக்கின் அரபு நாடுகளிலிருந்து முஸ்லிம் இளைஞர்கள் அள்ளுண்டு சென்றனர். சர்வதேசத்தின் பல கோணங்களிலிருந்தும் அலையலையாய் வரும் உணர்ச்சிவசப்பட்ட இளைஞர்களுக்கு தேவையான நிதி மற்றும் பயணச் செலவினங்களை வழங்கும் பொறுப்பையும் ரியாத் ஏற்றுக் கொண்டது. ரஷ்யாவுக்கெதிரான ஆப்கான் ஆக்கிரமிப்பை ஆப்கான் மக்களும் அதன் போராளிகளும் எதிர்க்க வேண்டும் என்ற கருத்து நிலை மாற்றம் கண்டு, முஸ்லிம் உலகிலுள்ள அனைவரும் கலந்து கொள்ள வேண்டிய பொதுப் பிரச்சினையே ஆப்கான் பிரச்சினை என்ற கருத்து பொதுத் தோற்றப்பாடாக மாற்றம் பெற்றன. இவ்வாறு ஆப்கான் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம்

சர்வதேசமயப்படுவதனை அமெரிக்கா மௌனமாக ரசித்துக் கொண்டிருந்தது.

பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்கள் ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தை எதிர்ப்பது ஆப்கானிய மக்களின் கடமை என்ற வரையறையுடன் நின்று கொண்டனர். மறுபுறம், ஆப்கான் முஜாஹித்களின் தியாகத்தையும் இரத்தத்தையும் வியர்வையையும் தங்களது அரசியல் இலக்குகளுக்கு முதலீடாகக் கொள்வதனையும் அவர்கள் எதிர்த்தனர். என்றாலும்கூட, தூய நோக்கத்துடன் களத்தில் குதித்த ஆப்கான் இஸ்லாமியப் போராளிகளை தங்களது புவி அரசியல் நலன்களுக்கு இரையாக்கிக் கொள்வதற்காக அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர்கள் வரைந்த ஆப்கான் யுத்தத்தை சர்வதேசமயப்படுத்தும் திட்டம் இறுதியில் வெற்றி பெற்றது. இதுவே படிப்படியாக இஸ்லாத்தின் பெயரிலான ஒழுங்குபடுத்தப்பட்ட சர்வதேச வன்முறைக் குழுக்களின் (So-called Islamic transnational violent organizations) உருவாக்கத்திற்கும் வித்திட்டது.

### தலிபான் அரசும் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையும்

1990களின் பின்னர் ரஷ்ய ஆக்கிரமிப்புப் போராட்டத்திற்கு எதிராகப் போராடிய ஆப்கான் ஆயுதக் குழுக்கள் தலிபான் இஸ்லாமிய அரசை அறிவித்தனர். இவ்வரசாங்கத்தை பகிரங்கமாக அங்கீகரித்த முதல் நாடு சஊதி அரேபியா மற்றும் மறைமுகமாக அங்கீகரித்த நாடு அமெரிக்கா எனலாம். இந்த அங்கீகாரத்தின் பின்னால் பாரிய பொருளாதார மற்றும் அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்கு தலிபான்கள் உதவி செய்ய வேண்டும் என வொஷிங்டன் எதிர்பார்த்தது. உதாரணமாக, மத்தியாசியாவின் எண்ணெய் மற்றும் வாயு வளங்களை ஆப்கான் ஊடாக ஏற்றுமதி செய்யும் முகாமைத்துவப் பொறுப்பை தலிபான்கள் ஏற்க வேண்டும் என்பது அதில் பிரதானமானது. இந்த மறைமுக ஒப்பந்தத்திற்கு பகரமாக தலிபான்களின் அரசாங்கத்தை அமெரிக்கா அலட்டிக் கொள்ளவில்லை. மார்க்கத்தின் பெயரால் தீவிரமான சட்டங்கள் மற்றும் கோட்பாடுகளை தலிபான்கள் ஆப்கானில் அமுல்படுத்தினர். கிட்டத்தட்ட 1990 முதல் 1998 வரை ஆப்கான் தலிபான்களின் கடும்போக்கு அரசாங்கத்தை அமெரிக்கா நிதானமாகக் கையாண்டது. அதேவேளை, தலிபான்களின் அரசாங்கத்தை முன்மாதிரி இஸ்லாமிய அரசாங்கம் என அடையாளப்படுத்த முடியாது என்பதே நடுநிலை இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தாகும். ஆனால், அதனை பொதுக் கருத்தாக மேலெழச் செய்வதற்கான சந்தர்ப்பத்தை அமெரிக்கா வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர்கள் வழங்கவில்லை.

ஐ.எஸ்.ஐ.எஸ். இஸ்லாமிய தேசப் பிரகடனம் செய்வதற்கு இரண்டு தசாப்தத்திற்கு முன்னரே, தலிபான்களும் அல்காயிதாவும் ஆப்கானிஸ்தானை இஸ்லாமிய தேசம் எனப் பிரகடனம் செய்து விட்டன. ஆனால், தனது பொருளாதார மற்றும் அரசியல் இராஜதந்திர நலனுக்காக தலிபான்களின் போலி இஸ்லாமிய அரசாங்கத்தை அமெரிக்கா அலட்டிக் கொள்ளவில்லை; அதனை பேசுபொருளாக மாற்றவுமில்லை. இதனை ஆழமாக நோக்கும்போது பின்வரும் அவதானத்தை குறிப்பிட முடியும்:

அதாவது ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பிலான வன்முறை இயக்கங்களை தேச கட்டமைப்பிற்குள் உட்புகுவதற்கு அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர்களின் மறைமுக அங்கீகாரம் காணப்பட்டுள்ளது என்பதாகும். 1998 முதல் 2001 வரையான காலப்பகுதியில் புவியரசியல் முரண்பாடுகள் அமெரிக்காவுக்கும் தலிபான்களுக்குமிடையில் தோற்றம் பெறுகின்றன. குறிப்பாக, மத்தியாசியாவின் வாயு ஏற்றுமதி மற்றும் குழாய்கள் விவகாரத்தில் ஆப்கானின் தலிபான் அரசு அமெரிக்காவுடன் மோதிக் கொண்டது. இதனைத் தொடர்ந்து இஸ்லாமிய அரசாங்கம் என்ற தலிபான்களின் ஆப்கான் அரசை 'தீவிரவாதிகளின் அரசாங்கம்' என பெயர் சூட்டி அழைத்தனர் அமெரிக்கா வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர்கள். பின்னர், தலிபான்களின் அரசை முழுமையாக சுருட்டி வீசுவதற்கான நியாயமாக ஜோர்ஜ் புஷ்ஷின் அரசாங்கம் செப்டம்பர் 11 தாக்குதல்களை பயன்படுத்திக் கொள்கிறது. 2001 முதல் 2014 வரை தலிபான்களையும் அதன் கட்டமைப்பையும் தீவிரவாதமாக அமெரிக்க தொடர்ச்சியாகச் சித்தரித்து வந்தது.

ஆச்சரியம் என்னவென்றால், ஐ.எஸ். அமைப்பின் தோற்றம் மற்றும் ஆப்கானை ஜனநாயகமயமாக்கல் செயற்திட்டத்தின் தோல்வி என்பன ஒன்றிணைந்து மீண்டும் தலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் மற்றும் பொது அரசியல் நீரோட்டத்திற்கு அவர்களை அழைத்து வரவேண்டும் என அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்ளை ஆய்வாளர்கள் பேசி வருகின்றனர். குறிப்பாக "How to talk to Al Qaida" மற்றும் "How to talk to Thaliban" போன்ற தலைப்புகளே அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை பேசும் சஞ்சிகைகளில் அதிகம் தென்படுகின்றன. இதற்கான பிரதான நியாயம் என்னவென்றால், ஐ.எஸ், ஜப்ஹதுந் நுஸ்ரா, அஹ்ராருஸ் ஷாம் போன்ற ஆயுதக் குழுக்களின் பரவல் மற்றும் ஆப்கானில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு வெளிநாட்டுக் கொள்கையின் தோல்வி என்பன அமெரிக்கா பற்றிய சாதகமான பொதுக் கருத்தை (Positive public opinion) பாதித்துள்ளதாக வொஷிங்டன் உணர்கிறது. எனவே, தனது தோல்வியை மூடி மறைப்பதற்காக அனைத்து சர்வதேச சட்டங்களையும் தாண்டி ஒரு தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு இன்னொரு வன்முறைக் குழுவை பயன்படுத்துதல் எனும் பேசுபொருளை (Discourse) நோக்கி சர்வதேசத்தை அழைத்துச் செல்வதற்கு அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை பகுப்பாய்வாளர்கள் முயற்சிக்கின்றனர்.

**இஸ்லாமிய தேசம் இயக்கமும் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையும்**

2010களில் தோற்றம் பெற்ற இஸ்லாமிய தேசம் இயக்கத்தினுடைய (ஐ.எஸ்) தோற்றத்தின் பின்னாலும் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை நேரடியாகப் பங்களித்துள்ளது. குறிப்பாக, 2003 ஆம் ஆண்டு ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பின் பின்விளைவே இஸ்லாமிய தேசம் இயக்கத்தின் தோற்றமாகும். ஆப்கான் ஆக்கிரமிப்பினையடுத்து இரண்டு வருடங்களில் ஈராக் மீதான ஆக்கிரமிப்பு இடம்பெற்றது. தலிபான்கள், அல்காயிதா உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டுப் போராளிகள் என பலரும் ஆப்கான் மீதான ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து தலைமறைவாகினர். இவர்களுக்கு சுதந்திரமாக தொழிற்படுவதற்கான வாய்ப்பினை ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு ஏற்படுத்திக் கொடுத்தது. அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைக்கெதிரான கிளர்ச்சிகள் ஈராக்கின் ஸுன்னிப் பெரும்பான்மைப் பகுதிகளில் அதிகரிக்கவே இதனை அல்காயிதா மற்றும் ஏனைய ஆயுதக் குழு உறுப்பினர்கள் தகுந்த களமாகப் பயன்படுத்திக் கொண்டனர். ஏற்கனவே, அமெரிக்க மற்றும் ரஷ்ய படைகளுக்கு எதிராகப் போரடிய அனுபவம் மற்றும் ஆற்றல் மிக்கவர்களாக இவ்வாயுதக் குழுக்கள் இருந்ததன் காரணமாக, அவை ஈராக் கிளர்ச்சியை வழிநடத்தும் தகுதியை குறுகிய காலத்தில் பெற்றுக் கொண்டன. இன்னும், இது அவ்வாயுதக் குழுக்களுக்கான மக்களாதரவையும் பெற்றுக் கொடுத்தன. உண்மையில், ஆப்கானில் இடம்பெற்ற தலிபான்களின் ஆட்சிக் காலப் பிரிவில் இருந்ததைவிட பல மடங்கு அதிகமான மக்களாதரவை ஆயுதக் குழுக்களுக்கு ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு பெற்றுக் கொடுத்துள்ளது.

ஆக்கிரமிப்பின் கொடூரங்கள் ஒரு புறமிருக்க, சதாமிற்குப் பிற்பட்ட ஈராக்கை நிர்வகித்தல் தொடர்பாக அமெரிக்கா கையாண்ட அனைத்துக் கொள்கைகளும் கூட, ஆயுதக் குழுக்களுக்கான மக்களாதரவை பலப்படுத்தியது. அதில் முதலாவது, அனைத்து மதப் பிரிவுகளையும் இனப்பிரிவுகளையும் உள்ளடக்கிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு பதிலாக, ஈரான் சார்பு நூர் மாலிகியை ஜனாதிபதியாக அமெரிக்கா நியமித்தது. கட்டம் கட்டமாக ஈராக்கில் வாழும் ஸுன்னி அரசியல்வாதிகளை ஓரங்கட்டுவதும் ஈரானின் பிராந்திய செல்வாக்கிற்கு பச்சைக் கொடி காட்டுவதுமே நூர் மாலிகியின் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த இலக்காக இருந்தன. நூர் மாலிகியின் இனத்துவ மற்றும் மதத்துவ அரசியல் ஏஜண்டாவை அமெரிக்கா கண்டும் காணாதது போல் புறக்கணிப்பு மனோநிலையுடன் நடந்து கொண்டது. எனவே, ஈராக்கை ஜனநாயகமாக்கல் என்ற மகுடத்தில் பக்தாதை ஆக்கிரமித்த அமெரிக்கப் படை, ஸுன்னி சர்வாதிகாரி சதாமிடருந்து ஷீயா சர்வாதிகாரி நூர் மாலிகியிடம் அதிகாரத்தை கைமாற்றியதைத் தவிர, வேறு எந்த காத்திரமான அரசியல் அடைவையும் சாதிக்கவில்லை என உறுதியாகக் கூறலாம். இவ்வாறு அமெரிக்க ஆதரவுச் சர்வாதிகாரத்தால் அரசியல் ரீதியாக ஓரங்கட்டப்பட்ட ஸுன்னி முஸ்லிம்கள் ஆயுதக் குழுக்களுக்கான ஆதரவை வழங்கத் துவங்கினர்.


இரண்டாவது, ஏற்கனவே மூன்று தசாப்த காலம் ஈராக்கின் அரசியல், பொருளாதார மற்றும் சமூகக் கட்டமைப்பில் அதிகாரம் செலுத்திய சதாம் ஹுசைனின் பாத் கட்சி இராணுவ ஜெனரல்கள் ஒரேயடியில் பதவிநீக்கம் செய்யப்பட்டனர். இதனை பாத் சிந்தனையை துவம்சம் செய்யும் நிகழ்ச்சி நிரல் (De-Baathification) என அழைப்பர். புதிய அரசாங்கத்தின் எத்தகைய பதவியிலும் சதாம் ஆட்சியில் அரசாங்க பதவி வகித்த எவரும் இருக்கக் கூடாது என்பதே டீ பாதிபிகேஷன் நிகழ்ச்சி நிரல் முன்வைத்த சிந்தனையாகும். இந்நிகழ்ச்சி நிரலை நூர் மாலிகி அரசாங்கம் முன்னெடுத்த போதிலும்கூட, அமெரிக்காவினதும் ஈரானினதும் பூரணமான ஒத்துழைப்பு பின்புலத்தில் காணப்பட்டது. இங்கு பாத் கட்சி உறுப்பினர்களின் தோளில் நின்று ஈராக்கிய ஸுன்னி முஸ்லிம்கள் அரசியல் சக்தியாக மீண்டும் பரிணாமம் பெறக் கூடாது என்பதே இந்நிகழ்ச்சி நிரலின் உள்நோக்கம் என்பதனையும் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு பதவி நீக்கப்படும் பாத் கட்சி உறுப்பினர்களை என்ன செய்வது? என்ற கேள்வியை முழுமையாக புறக்கணித்த நிலையில், அத்திட்டத்திற்கு அமெரிக்கா ஆதரவளித்தது. விளைவாக அரச, இராணுவ மற்றும் பொருளாதார முகாமைத்துவத்தில் அனுபவம் பெற்ற, சதாம் ஆட்சிக்கால இராணுவ ஜெனரல்களில் பலர், ஸுன்னி முஸ்லிம் பிராந்தியத்தில் தொழிற்படும் ஆயுதக் குழுக்களுடன் இணைந்து கொண்டனர். இஸ்லாமிய தேசம் இயக்கம் பலமான கட்டமைப்புடன் இயங்குவதற்கு, சதாம் ஆட்சிக் கால பாதிக்கப்பட்ட இராணுவ ஜெனரல்கள் அவ்வியக்கத்தை திசைப்படுத்துவதே காரணமாகும்.

அடுத்து, ஆப்கான், ஈராக் ஆக்கிரமிப்புப் போர் மற்றும் போரின் பின்னரான தேசத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம் போலவே, அரபு வசந்தத்தை அமெரிக்கா கையாண்ட முறைமையும் வன்முறைக் கலாசாரத்தை மத்திய கிழக்கில் எரியூட்டியது. எத்தகைய கொடூரமான சர்வாதிகாரமாக இருந்தாலும், சாத்வீகப் போராட்டமே அரசியல் மாற்றத்திற்கான எமது வழிமுறை என்ற ஆழமான அரசியல் தத்துவமொன்றை அரபு வசந்தத்திற்கு ஊடாக அரபு மக்கள் முன்வைத்தனர். இதனை வார்த்தையளவில் அமெரிக்கா அங்கீகரித்தாலும்கூட, சிரிய சர்வாதிகாரி பஷார் அல்அஸத் மற்றும் எகிப்தின் இராணுவச் சர்வாதிகாரி அப்துல் பத்தாஹ் ஸிஸி விடயத்தில் அதன் இரட்டை நிலைப்பாடு தெளிவாகவே வெளிப்பட்டது.

(59ஆம் பக்கம் பார்க்க)

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சமகால இஸ்லாமிய கற்கைகள் துறை பேராசிரியராக கடமையாற்றும் அறிஞர் தாரிக் ரமழான், 30க் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவர் பன்மைத்துவம், இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையின் வாழ்வொழுங்கு தொடர்பாக ஆழமான கலந்துரையாடல்களை நடத்தி வருகிறார். அல்இஃவானுல் முஸ்லிமூன் அமைப்பின் பிரபல செயற்பாட்டாளர் ஸஈத் ரமழானுடைய மகனும் இமாம் ஹஸனுல் பன்னா (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் பேரனுமாகிய பேராசிரியர் தாரிக் ரமழான். சமீபத்தில் இலங்கை வந்திருந்தபோது, இலங்கை முஸ்லிம்களின் பணியும் பங்களிப்பும் எவ்வாறு சிந்திக்கப்பட வேண்டும்? என்ற தொனிப் பொருளில் அல்ஹஸனாத் சஞ்சிகை நேர்காணலொன்றை மேற்கொண்டது.

அதன் சுருக்கத்தை அல்ஹஸனாத் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.



# “இலங்கை முஸ்லிம் சமூகம் தேசத்துடன் கலந்து வாழ்தல் என்பதிலிருந்த தேசத்திற்கு பங்களிப்புச் செய்தல் என்ற தளத்தை நோக்கி நகர வேண்டும்”

## பேராசிரியர் தாரிக் ரமழான்

**நேர்கண்டவர்கள்:**

- அஷ்ஷெய்க் ஸகி பவ்ஸ் (நளீமி), விரிவுரையாளர்- இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி
- அஷ்ஷெய்க் ஹஸ்ஸான் ஸுலைமான் (நளீமி), உதவி நூலகர்- ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

**அல்ஹஸனாத்:** இலங்கையில் சிறுபான்மையினராக வாழ்ந்து வரும் முஸ்லிம் சமூகம் தனது தனித்துவத்தை இழந்து விடாத நிலையிலும் கரைந்து செல்லாமலும் ஏனைய சமூகங்களுடன் கலந்து வாழ வேண்டும் என்ற கோணத்திலேயே சமகால இலங்கைச் சூழலில் இஸ்லாத்தின் தனித்துவம் பற்றிய கருத்தாடல் விவாதிக்கப் படுகிறது. அதேவேளை, இவ்வாறு கலந்து வாழும்போது, இஸ்லாத்தின் எத்தகைய அடையாளங்களை முஸ்லிம் சமூகம் இறுக்கமாக பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும், எவற்றை விட்டுக் கொடுக்கலாம், என்பது தொடர்பாக உங்களது அபிப்பிராயம் என்ன?

**பேராசிரியர் தாரிக் ரமழான்:** குறித்த விவகாரத்தை மூன்று கோணங்களில் ஆராய வேண்டும் என நினைக் கிறேன். முதலாவது, சிறுபான்மை அல்லது கலந்து வாழ்தல் போன்ற சொற்கள் எமக்கு மத்தியில் எதிர்மறை உளவியலை ஏற்படுத்தி விடக் கூடியன. ஏனெனில், இலங்கை முஸ்லிம்கள் பல்லாண்டு காலமாக இலங்கை சமூகத்தில் பின்னிப் பிணைந்து வாழ்ந்து வருகின்றனர். இலங்கை முஸ்லிம்கள் இன்று நேற்று வந்தவர்களல்லர். அவர்கள் பரம்பரை பரம் பரையாக இலங்கைப் பிரஜைகளாகவே இங்கு வாழ்ந்து வருகின்றனர். எனவே, மிக நீண்ட காலமாக சொந்த நாட் டில் வாழ்பவர்களை ‘கலந்து வாழ்தல்’ என்ற சொல்லாடல்

மூலம் குறிப்பது பொருத்தமற்றது. இலங்கை, முஸ்லிம்களி னதும் தேசம். முஸ்லிம்களும் இந்நாட்டுப் பிரஜைகள். இப்பின்புலத்தில், கலந்து வாழ்தல் என்பதனைவிட பங்களிப்புச் செய்தல் என்ற விவகாரத்தை நோக்கி இலங்கை முஸ்லிம்களின் கலந்துரையாடல்கள் திசைப்படுத்தப்பட வேண்டும் என நினைக்கிறேன்.

அடுத்து, முஸ்லிம் சிறுபான்மை என்ற பதப் பிரயோகமும் எதிர்மறை உளவியலை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது. இலங்கை முஸ்லிம்கள் மதரீதியில் மாத்திரமே சிறுபான் மையினர். ஆனால், இலங்கைப் பிரஜை என்று வரும்போது, ஏனையவர்களைப் போன்றே நாட்டின் மீதான கடமையும் உரிமையும் இலங்கை முஸ்லிம்களுக்கும் இருக்கின்றன. இன்னும், முஸ்லிம் சிறுபான்மையினர் ஏனைய பரந்த சமூகத்துடன் கலந்து வாழ்தல் என்ற விவாதமானது இது எமது தேசமல்ல, இது பெரும்பான்மையினரின் தேசம் என்ற உட்பொருளை சுட்டிக்காட்டுவதாக அமைந்து விடுகிறது. இந்த நோக்கு பிழையானது. சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பிரிகோடுகளுக்கு அப்பால் இந்நாட்டின் சகல பிரஜைகளுக்குமான தேசமே இலங்கை.

இக்கருத்தை நான் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகி றேன். மேலும், இக்கருத்தில் பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்களும் உடன்பட்டுள்ளனர். எனவேதான், சிறுபான்மை முஸ்லிம்களுக்கான பிக்ஹ் என்பதனை விட பிரஜாவுரிமைக் கோட்பாடும் இஸ்லாமிய சட்டவியலும் என்ற புதிய கோட்பாட்டைப் பற்றி இஸ்லாமிய அறிஞர்கள் சமகா லத்தில் வாதித்து வருகின்றனர்.

இவ்வாறு இலங்கை பிரஜை என்ற அடிப்படையில் முஸ்லிம்கள் வாழும்போது, அவர்களது தனித்துவம் அச்சு றுத்தப்படுகிறதா? என்பதே இரண்டாவது மிக முக்கியமான விடயமாகும். உண்மையில், முதலில் முஸ்லிம்களின் தனித் துவம் என்றால் என்ன என்பதனை வரையறை செய்ய வேண்டும். அதனை இவ்வாறு இலகுவாக முன்வைக்கலாம். அதாவது, எங்கும் எப்போதும் எச்சூழலிலும் ஒரு முஸ்லிமினால் விட்டுக் கொடுக்க முடியாத இஸ்லாத்தின் அடிப்படைகள் யாவை? என்பதே தனித்துவம் பற்றிய கலந்துரையாடலுடன் தொடர்புபடும் நேரடியான கேள்வியாகும்.

அதில் முதலாவது, இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைக் கோட்பாடுகளை விட்டும் முஸ்லிம் சமூகம் தூரமாக முடி யாது. அவை தவ்ஹீத்... நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பற்றிய நம்பிக்கை... என நீண்டு செல்கின்றன. இரண்டாவது, தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் என்ற இஸ்லாத்தின் தூண்களை விட்டும் முஸ்லிம் சமூகம் தூரமாக முடியாது. மூன்றாவதாக, முஸ்லிம்களின் வாழ்வியல் விவகாரங்களை நிர்வகிப்பதற்கென்று சில வரையறைகளையும் கடமைகளையும் இஸ்லாம் விதித்தி ருக்கிறது. உதாரணமாக, உணவு உட்கொள்வதில் ஹலால்-

**முஸ்லிம் சமூகத்தை கல்வியூட்டல் (Education) மற்றும் அடுத்த சமூகங்களுடனான கலந்துரையாடல் (Commu nication) என்பனவே ஏனைய மதங்களுக்கு மத்தியிலான பார்வை மோதல்களை (Clash of Perceptions) முகாமை செய்வதற்கு சிறந்த வழிமுறைகளாகும்.**

ஹராம் வரையறைகள், ஆடை அணிவதில் வரையறைகள் முதலானவற்றை குறிப்பிடலாம். மறுபுறம், மேற்குறிப்பிட் டவற்றில் இதனைத்தான் நீங்கள் பின்பற்ற வேண்டும்? இதனை நீங்கள் பின்பற்றக் கூடாது? என்று கட்ட ளையிட எந்த நாட்டின் அதிகார பீடத்தினாலும் முடியாது. இஸ்லாத்தில் எது அடிப்படை என்பதனை தீர்மானிக்கும் உரிமை மார்க்க தலைமைகளுக்கே சொந்தமானது. அதனை விட தமது மத அடிப்படை களைப் பேணி வாழ்வதற்கான உரிமையையும் சட்ட பூர்வத்தன்மையையும் இலங்கையின் சட்ட யாப்பு சகல பிரஜைகளுக்கும் அளித்துள்ளது. எனவே, இலங் கைப் பிரஜை என்ற கலந்துரையாடல் ஒருபோதும் இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளை பாதிப்ப தாகவோ அல்லது அச்சுறுத்துவதாகவோ அமைய மாட்டாது.

ஆனால், தனித்துவம் என்ற தொனிப்பொருளில் வேறொரு நாட்டின் கலாசாரத்தை, மொழியை அல்லது பண்பாடுகளை இங்கு இறக்குமதி செய்வதனை விட்டும் தவிர்ந்து கொள்ள வேண்டும். இலங்கை முஸ்லிம்களின் கலாசாரம், மொழி, மரபுரிமைகள், வழக்காறுகள் என் பவற்றை இலங்கையின் பொதுக் கலாசாரத்திலிருந்து பிரித்து பார்க்க முடியாது; பிரித்துப் பார்க்கவும் கூடாது. இதுவே நடுநிலையான பார்வையாகும்.

தேசத்துடன் கலந்து வாழ்தல் என்பதிலிருந்து தேசத்திற்கு பங்களிப்புச் செய்தல் என்ற தளத்தை நோக்கி தமது கலந்துரையாடல்களை இலங்கை முஸ்லிம் சமூகம் திசைப்படுத்த வேண்டும்.

**அல்ஹஸனாத்:** முஸ்லிம்கள் ஹிஜாபை பெண்களின் ஆடைக் கலாசாரத்தின் அடிப்படையாக நோக்கும் அதேவேளை, அதனை இலங்கைக் கலாசாரத்திற்கு எதிரானதாக சில பெரும்பான்மை சமூகத்தினர் நோக்க

**தேசத்துடன் கலந்து வாழ்தல் என்பதிலிருந்து தேசத்திற்கு பங்களிப்புச் செய்தல் என்ற தளத்தை நோக்கி தமது கலந்துரையாடல்களை இலங்கை முஸ்லிம் சமூகம் திசைப்படுத்த வேண்டும்.**

முறப்படுகின்றனர். இம்முரண்பாட்டை எவ்வாறு கையாள்வது?

**பேராசிரியர் தாரிக் ரமழான்:** ஆம். ஹிஜாப், பெண்களின் ஆடையொழுங்கில் இஸ்லாம் போதிக்கும் மிக முக்கியமான வரையறையாகும். என்றாலும்கூட, எந்தவோர் இஸ்லாமிய அடிப்படையையும் யாரின் மீதும் வலுக்கட்டாயமாக திணிக்கும் உரிமையை இஸ்லாம் வழங்கவில்லை. அவ்வாறு நடந்து கொள்வது இஸ்லாமிய அடிப்படைகளுக்கு முரணானதாகும். அதேபோன்று ஒருவர் சுயமாக விரும்பி பின்பற்றும் அடிப்படையை வலுக்கட்டமயாக நிறுத்தவும் முடியாது. ஏனெனில், அதுவும் இஸ்லாத்திற்கு முரணானதாகும். ஒரு மனிதன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வது முதல் அதனை செயற்படுத்தும் பல்வேறு தளங்கள் வரை யாரையும் எதிலும் நிர்ப்பந்திக்கும் உரிமையை இஸ்லாம் யாருக்கும் வழங்கவில்லை.

அடுத்து, இலங்கைச் சூழலில் 'ஹிஜாப்' என்பதனை விட 'நிகாப்' என்ற விவகாரமே சூடாக விவாதிக்கப்படுகிறது. குறித்த கலந்துரையாடலை முகாமை செய்வதற்கு இரண்டு வழிமுறைகள் இருக்கின்றன.

*01.* நிகாப் இஸ்லாத்தின் அடிப்படையா, இல்லையா? என்பது குறித்து முஸ்லிம் சமூகம் கலந்துரையாட வேண்டும். இது தொடர்பாக முஸ்லிம் சமூகத்தை அறிவூட்ட வேண்டும். இது குறித்து இஸ்லாமிய அறிஞர்கள், இமாம்கள் முன்வைத்து வரும் நிலைப்பாடுகள் குறித்து கலந்துரையாட வேண்டும்.

*02.* இஸ்லாமிய ஆடை ஒழுங்கு பற்றிய தெளிவான புரிதலொன்றை வழங்கும் வகையில் அடுத்த சமூகங்களுடன் உரையாட வேண்டும். மேலும், இஸ்லாமிய ஆடை ஒழுங்கு என்பது வாழ்வியல் ஒழுங்கில் ஒரு பகுதி என்பதனையும் அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். முஸ்லிம் சமூகத்தை கல்வியூட்டல் (Education) மற்றும் அடுத்த சமூகங்களுடனான கலந்துரையாடல் (Communication) என்பனவே ஏனைய மதங்களுக்கு மத்தியிலான பார்வை மோதல்களை (Clash of Perceptions) முகாமை செய்வதற்கு சிறந்த வழிமுறைகளாகும்.

**அல்ஹஸனாத்:** இலங்கைச் சூழலில் தேசத்திற்கு பங்களிப்புச் செய்வதனை நோக்கி முஸ்லிம் சமூகத்தை நகர்த்தும் பணியில் இஸ்லாமிய இயக்கங்கள், நிறுவனங்களின் முன்னுரிமைகள் எவையென நீங்கள் கருதுகிறீர்கள்?

**பேராசிரியர் தாரிக் ரமழான்:** இஸ்லாமிய இயக்கங்களின் பணியும் பங்களிப்பும் ஆன்மிகம், சிந்தனை, செயற்பாடு முதலான மூன்று தளங்களிலும் சரிசமமாக இடம்பெற வேண்டும். சிந்தனைத் தளத்தில் நாம் இந்த நாட்டின் சொந்தங்கள்; இந்த நாட்டில் வாழும் சகலரும் எமது சகோதரர்கள்; இதனை கட்டியெழுப்புவது எமது கடமை என்ற மனப்பாங்கை முஸ்லிம் சமூகத்தில் வளர்ப்பதற்கான சிந்தனையை இஸ்லாமிய இயக்கங்கள் கட்டமைக்க வேண்டும். இந்த வகையிலேயே சிறுபான்மை, பெரும்பான்மை என்ற இரட்டை பார்வையை கருத்தாடலுக்கு அப்பால் சகலரும் நாட்டின் பிரஜைகள் என்ற விவாதத்தை (Narrative) மையநிலைக்கு அழைத்து வருவதில் இஸ்லாமிய இயக்கங்கள் பங்களிப்புச் செய்யலாம்.

அடுத்த செயற்பாட்டுத் தளத்தில், இந்த நாட்டின் பொதுவான தேசியப் பிரச்சினைகளை தீர்ப்பதிலும் அது பற்றிய சிந்தனையை முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் கொண்டு செல்வதிலும் இஸ்லாமிய இயக்கங்கள் தொழிற்பட வேண்டும். சமூக நீதி, நுகர்வுக் கலாசாரம், வறுமை, கல்வி மேம்பாடு என்பன அவற்றில் சிலவாகும். பொதுவாக முஸ்லிம்களை காணக் கிடைக்காத இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்லும் பணியை இஸ்லாமிய இயக்கங்கள், நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, எல்லாவற்றுக்கும் மேலால் இவ் விவகாரத்தில் இஸ்லாமிய இயக்கங்கள், நிறுவனங்களுக்கு ஆன்மிகப் பங்களிப்பொன்றும் இருக்கின்றது. அதாவது, தேசத்தைக் கட்டியெழுப்புதல், அதற்கு பங்களிப்புச் செய்தல், அதன் பொதுப் பிரச்சினைகளில் கூட்டாக செயற்படல் என்பன ஆன்மிக பலத்துடன் தொடர்புபட்டவை என்பதனையும் முஸ்லிம் சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும். குறித்த வேலைத் திட்டங்களுக்கான இஸ்லாமிய ஆன்மிகப் பெறுமானங்களை இணைப்பதில் இஸ்லாமிய இயக்கங்கள் செயற்பட வேண்டும். இவை அவற்றின் மீதுள்ள பொறுப்புகள் என்றும் கூறலாம்.

**அல்ஹஸனாத்:** மத்திய கிழக்கில் தூண்டப்பட்டுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற கருத்தியல்களால் பல இளைஞர்கள் கவரப்படும் நிலை ஆங்காங்கே தென்படுகிறது. இது தொடர்பாக இலங்கை வாழ் இளைஞர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது?

**பேராசிரியர் தாரிக் ரமழான்:** முதலாவதாக, குறித்த பிரச்சினையின் இஸ்லாமிய சட்டவியல் பின்புலத்தை இலங்கைவாழ் இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

(26ஆம் பக்கம் பார்க்க)

மலையாள மூலம்: ஷெய்க் முஹம்மத் காரக்குன்னு ▸ தமிழில்: ஜே. இஸ்ஹாக்



# இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றனவா?

பிரபலமான எல்லா ஹதீஸ் கிரந்தங்களிலும் ஆண் அறிவிப்பாளர்களைப் போலவே பெண்கள் அறிவிக்கும் ஏராளமான ஹதீஸ்கள் இருக்கின்றன. இஸ்லாமிய அடிப்படைகள் குறித்த விடயங்களைப் பற்றி சாட்சியமளிக்கும் காரியத்தில் ஆண்களுக்குரிய அதே அந்தஸ்தில் பெண்களையும் நோக்கியுள்ளது என்பது தெட்டத் தெளிவானதாகும்.

## பெண்களுக்கு பாதி சொத்தா?

**கேள்வி: இஸ்லாம் ஆண்களுக்குக் கொடுப்பதில் பாதி சொத்தை அல்லவா பெண்களுக்கு வழங்குகின்றது. இது பெருத்த அநீதியும் பாரபட்சமுமல்லவா?**

மறுமொழி: இஸ்லாமிய சட்டங்களைப் பொறுத்தவரையில் பெண்களுக்கு பொருளாதார கடமைகள் எதுவும் கிடையாது. அவர்களுக்கு பொருளாதார உரிமைகள் மாத்திரமே உள்ளன. ஆயினும், ஆண்கள் மீது எல்லா சந்தர்ப்பங்களிலும் சகல பொருளாதாரக் கடமைகளும் சுமத்தப்பட்டுள்ளன. திருமணத்தின்போது மணமகளினதும் மணமகனினதும் ஆடைகள் உட்பட எல்லாவித செலவுகளையும் மணமகனே பொறுப்பேற்க வேண்டியவனாக இருக்கின்றான். இதற்கு மேலதிகமாக மணமகளுக்கு கட்டாயமாக மஹர் எனப்படும் சன்மானத்தையும் வழங்க வேண்டும். தொடர்ந்து மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்படக்கூடிய எல்லாவித செலவுகளையும் அவனே பொறுப்பேற்க வேண்டும். பெண் கணவனைப் போலவே தொழில் வகையில் ஒரு வைத்தியராகவோ அல்லது ஓர் ஆசிரியராகவோ இருப்பினும்கூட அவள் தான் சம்பாதித்ததை தனக்கோ பிள்ளைகளுக்கோ செலவழிக்க வேண்டும் என்ற எந்த நிர்ப்பந்தமும் இஸ்லாத்தில் கிடையாது. தொழில் செய்யக்கூடிய பெண்ணாயிருந்தாலும் சரி அவளுடைய உணவு, உடை, மருத்துவம் உட்பட அத்தனை செலவுகளையும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு கணவனுக்கே இருக்கின்றது.

ஒரு பெண்ணின் கணவன் எந்த சொத்துமின்றி மரணமடைய நேர்ந்தால் அவனது அநாதைப் பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு கணவனின் தந்தைக்கு அல்லது சகோதரர்களுக்கு அல்லது சகோதரர்களின் ஆண் மக்களுக்குக் கடமையாகின்றது. அதாவது, இறந்தவருக்கு சொத்திருந்து, அவருக்கு பிள்ளைகள் இல்லாத நிலையில் வாரிசுரிமை யார் யாருக்கு உரித்தாகின்றதோ அவர்கள் மீதே மேற்படி அநாதைப் பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டிய கடமையும் ஏற்படுகின்றது. திருமணமான பெண்ணைக் கணவனும் திருமணமாகாத பெண்ணை தந்தையும் தந்தை இறந்து விட்டால் சகோதரர்களும் பராமரிக்க வேண்டியது கடமையாகும். தாயைப் பராமரிக்கும் கடமை புதல்வர்கள் மீதுள்ளது. இந்த வகையில் எந்த சந்தர்ப்பத்திலும் பொருளாதார ரீதியாக எந்தக் கடமையோ பொறுப்போ சட்டரீதியாக பெண்கள் மீது சுமத்தப்படவில்லை. அவள் விரும்பி பரஸ்பர அன்பினால் இது விடயத்தில் செலவழிப்பது வேறு விடயம். அதேவேளை, அவளுக்கு வாரிசு சொத்தில் பங்கும் மஹர் எனும் திருமண சன்மானத்தையும் நிர்ணயித்தது அவளின் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் உறுதி செய்வதற்காகும். தனது சொத்தை அபிவிருத்தி செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் சேமிப்பதற்கும் அவள் பூரண சுதந்திரம் உள்ளவளாக இருக்கின்றாள். தாய் என்ற நிலையிலும் தாரம் என்ற நிலையிலும் மகள் என்ற நிலையிலும் சகோதரி என்ற நிலையிலும் அவளின் பூரண பாதுகாப்பை உறுதி செய்து அவளுக்கு வாரிசுரிமை தேவையற்றதாக இருப்பினும், அவளுக்கும் குறிப்பிட்டளவு சொத்தில் பங்குள்ளது என்பதை இஸ்லாம் உறுதி செய்துள்ளது.

## பெண்களின் சம்மதமில்லாது அவர்களை திருமணம் செய்ய இஸ்லாம் வற்புறுத்துகின்றதா?

**கேள்வி: பெண்களின் விருப்பமோ சம்மதமோ இல்லாமல் அவர்களைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு அவளது**

**பாதுகாப்பாளர்களுக்கு இஸ்லாம் உரிமையளித்துள்ளது என்பது சரியா?**

<u>மறுமொழி:</u> இல்லை. இது தவறான கருத்தாகும். பெண்ணின் விருப்பமோ அல்லது சம்மதமோ இன்றி அவர்களை மணமுடித்துக் கொடுப்பதை இஸ்லாம் தடுத்துள்ளது. அவ்வாறு நிர்ப்பந்தமாக செய்யப்பட்ட திருமண ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாமல் விடுவதற்கு இஸ்லாம் பெண்களுக்கு சுதந்திரம் நல்கியுள்ளது.

நபியவர்கள் நவின்றார்கள்: "பருவ வயதையடைந்த பெண்ணைப் பொறுத்தவரையில் தனது திருமணத்தைப் பற்றி முடிவு செய்யும் உரிமை அவளது பாதுகாவலரை விட அவளுக்கே இருக்கின்றது. அவளது திருமணம் குறித்து அவளது சம்மதம் பெறப்பட வேண்டும். அவள் மௌனமாக இருப்பது அவளது சம்மதத்தின் அறிகுறியாகும்." (முஸ்லிம், திர்மிதி, அபூதாவூத், நஸாயி, இப்னுமாஜா)

ஒருமுறை ஓர் இளம் பெண் நபியவர்களிடம் வந்து தனது தந்தை தன்னை நிர்ப்பந்தமாக திருமணம் முடித்து வைக்க முயல்வதாக முறையிட்டாள். நபியவர்கள் அவளுக்கு விருப்பமெனில் ஏற்றுக் கொள்ளவும் விருப்பமில்லாவிட்டால் அதிலிருந்து விலகிக் கொள்ளவும் முடியும் என்று தீர்ப்பளித்தார்கள்.

இன்னொரு தடவை ஒரு பெண் தன்னை தனது தந்தை அவரது சகோதரன் மகனுக்கு திருமணம்செய்து கொடுத்து விட்டார் என்றும், இதன் மூலம் தனக்கு நலன் கிடைக்கும் என அவர் எதிர்பார்க்கிறார் என்றும் நபியவர்களிடம் எடுத்துரைத்தாள். நபியவர்கள் சொன்னார்கள்: "நீ விரும்பினால் மணவிலக்குப் பெற்றுக் கொள்ள முடியும்." அப்போது அவள் சொன்னாள்: நான் எனது தந்தையின் முடிவை ஏற்றுக் கொள்கின்றேன். ஆயினும், தந்தையர் மீது இது விடயத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்பதை பெண்களுக்கு தெளிவுபடுத்த விரும்பினேன்."

திருமண விடயத்தில் தீர்மானம் எடுக்கும் உரிமை இஸ்லாத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

**இரு பெண்களின் சாட்சியம் ஏன்?**

**<u>கேள்வி:</u> சாட்சியமளிக்கும்போது ஓர் ஆணுக்கு பகரமாக இரண்டு பெண்களின் சாட்சியம் அவசியமாகும் என்பது இஸ்லாமிய சட்டம் அல்லவா? இது பாரபட்சமும் அநீதியும் ஆணாதிக்கப் போக்கையும்தானே காட்டுகின்றது?**

<u>மறுமொழி:</u> இது பொருளாதார கொடுக்கல்- வாங்கல்களின்போது மட்டும் எல்லைப்படுத்தப்பட்டுள்ள ஒரு சட்டமாகும். தவிர ஒரு பொது சட்டமல்ல. பெண்கள் பொதுவாக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதிகளவில் கொடுக்கல்- வாங்கலில் ஈடுபடுவதில்லை. எனவே, கொடுக்கல்- வாங்கல்களில் தவறு நடைபெறாமல் இருப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையே தவிர பெண்களை இழிவுபடுத்தவோ அநீதி இழைக்கவோ அல்ல.

பரஸ்பர பாலியல் குற்றச்சாட்டின்போது ஆண் பெண் இருவருக்கும் ஒரே மாதிரி சத்தியம் செய்வதையே அல்குர்ஆன் சந்தேகமற்ற முறையில் தெளிவாக எடுத்துரைக்கின்றது. (பார்க்க 24: 6-9)

ஏனைய விடயங்களிலும் இவ்வாறுதான். ஆண்களாக இருப்பினும்கூட இரு சாட்சியங்கள் தேவை என்று வலியுறுத்துகின்றது. எடுத்துக்காட்டாக விவாக விலக்கின் போது நேர்மை மிக்க இருவரை சாட்சியாக்கிக் கொள்ளுமாறு அல்குர்ஆன் பணிக்கின்றது.

*"மேலும், உங்களில் நேர்மை மிக்க இருவரை சாட்சிகளாக்கிக் கொள்ளுங்கள். மேலும் (சாட்சி சொல்பவர்களே) அல்லாஹ்வுக்காக சரியான முறையில் சாட்சியம் வழங்குங்கள்."* (65: 2)

மரண சாசனம் எனும் வஸிய்யத் விடயத்திலும் அல்குர்ஆன் இவ்வாறே குறிப்பிடுகின்றது.

*"இறை நம்பிக்கை கொண்டவர்களே! உங்களில் எவருக்கேனும் மரணவேளை நெருங்கி விட்டால், அவர் வஸிய்யத் (மரண சாசனம்) தரும் நேரத்தில் அதைப் பற்றி சாட்சியம் அளிப்பதற்கான விதிமுறை இதுவே. உங்களிடையே நீதமுள்ள இருவர் சாட்சிகளாக்கப்பட வேண்டும் அல்லது நீங்கள் பயணம் செய்து கொண்டிருக்கும்போது மரண வேதனை உங்களுக்கு வந்து விட்டால் உங்களைத் தவிர வேறு இருவரை சாட்சிகளாய் ஆக்கிக் கொள்ள வேண்டும்."* (5: 106)

பெண்கள் தொடர்பான விடயங்களான மாதவிடாய், பிரசவம் போன்ற விடயங்களில் பெண்களின் சாட்சியம் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதில் இஸ்லாமிய சட்டவியல் அறிஞர்கள் ஒரே கருத்தைக் கொண்டுள்ளனர்.

பொருளாதாரம், சமூகவியல், அரசியலில் தொடங்கி அனைத்து இஸ்லாமிய சட்டங்களுக்கும் முக்கிய மூலாதாரங்களில் ஒன்றாக நபியவர்களின் நடைமுறைகளும் வார்த்தைகளுமான ஹதீஸ்கள் விளங்குகின்றன. ஆண் ஸஹாபாக்களைப் போலவே பெண் ஸஹாபிய்யாக்களும் ஹதீஸ்களை அறிவிக்கின்றார்கள். அவை ஒரே தரத்தில் வைத்தே நோக்கப்படுகின்றன. ஆண், பெண் வேறுபாடு எங்குமே கருத்திற் கொள்ளப்படவே இல்லை. பிரபலமான எல்லா ஹதீஸ் கிரந்தங்களிலும் ஆண் அறிவிப்பாளர்களைப் போலவே பெண்கள் அறிவிக்கும் ஏராளமான ஹதீஸ்கள் இருக்கின்றன. இஸ்லாமிய அடிப்படைகள் குறித்த விடயங்களைப் பற்றி சாட்சியமளிக்கும் காரியத்தில் ஆண்களுக்குரிய அதே அந்தஸ்தில் பெண்களையும் நோக்கியுள்ளது என்பது தெட்டத் தெளிவானதாகும்.

(57ஆம் பக்கம் பார்க்க)



## ஸுமைய்யா பின்த் கய்யாத் (ரழியல்லாஹூ அன்ஹா)

# இஸ்லாத்தின் முதல் உயிர்த் தியாகி

பாத்திமா ஸைனப் பின்த் பவாஸ்

யாஸிர், ஹாரித், மாலிக் ஆகிய மூன்று சகோதரர்களும் யெமனிலிருந்து மக்கா செல்ல தீர்மானித்தனர். மக்கா நகரம் பற்றி அறிந்து கொண்ட அவர்கள் அங்கு சென்று சமூக விவகாரங்களில் ஈடுபட விரும்பினர். யாஸிர் மக்காவில் நிரந்தரமாகத் தங்கியிருக்க முடிவு செய்தார். ஆனால், மற்ற இருவரும் யெமனுக்குத் திரும்பி விட்டனர். யாஸிர், பனூ மக்ஸூம் கோத்திரத்தைச் சேர்ந்த அபூஹுதைஃபா இப்னு அப்துல்லாஹ் என்பவருடன் தோழமை கொண்டார். அபூ ஹுதைஃபாவிடம் மிகவும் புத்திக் கூர்மையுள்ள ஓர் அடிமைப் பெண் இருந்தார். அவரது பெயர் ஸுமைய்யா பின்த் கய்யாத். காலப்போக்கில் அவர் யாஸிரைத் திருமணம் புரிந்தார். மகிழ்ச்சிகரமான இல்லற வாழ்வைக் கண்ட அத்தம்பதியினருக்கு அம்மார் என்ற குழந்தை கிடைத்தது. கொடை வள்ளலும் கருணையுள்ளம் கொண்டவருமான அபூ ஹுதைஃபா அச்சிறிய குடும்பத்தை விடுதலை செய்தார்.

ஸுமைய்யா (ரழியல்லாஹு அன்ஹா) முதன்முதலாக இஸ்லாத்தை ஏற்ற 7 பேர்களுள் ஒருவர். முன்வரிசையில் நின்று சத்தியத்துக்காக சான்றுபகர வீறு கொண்டெழுந்த அல்லாஹ்வுடைய நெருக்கத்துக்குரிய அந்த முகர்ரபூன்கள் பின்வரும் கிரம ஒழுங்கில் இஸ்லாத்தை ஏற்றனர்.

01. அபூபக்ர் ஸித்தீக் (ரழியல்லாஹு அன்ஹு)
02. அலீ இப்னு அபீ தாலிப் (ரழியல்லாஹு அன்ஹு)
03. கதீஜா பின்த் குவைலித் (ரழியல்லாஹு அன்ஹா)
04. ஸைத் இப்னு ஹாரிதா (ரழியல்லாஹு அன்ஹு)
05. ஸுமைய்யா பின்த் கய்யாத் (ரழியல்லாஹு அன்ஹா)
06. அம்மார் இப்னு யாஸிர் (ரழியல்லாஹு அன்ஹு)
07. பிலால் இப்னு அபீரபாஹ் (ரழியல்லாஹு அன்ஹு)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மக்கா வாழ்வின் ஆரம்ப காலப் பகுதியில் பகிரங்கப் பிரசாரப் பணியை துவங்கிய முதல் நாளிலிருந்து கடுமையான எதிர்ப்பலைகள் கிளர்ந்தெழுந்த போதிலும் அன்னாரின் சிறிய தந்தை அபூதாலிப் அவர்களின் அந்தஸ்து, அதிகாரம் முதலானவற்றால் அன்னாருக்கு இன்னல்கள் கொடுக்க முடியவில்லை. அவ்வாறே அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தனது கோத்திரத்தின் பக்கபலம் மூலமும் தனது சுயமான செல்வாக்கின் மூலமும் சித்திரவதைகளுக்கு உட்படவில்லை. ஆனால், கோத்திர ரீதியாக எவ்விதப் பக்கபலம் அற்றவர்களும் பலவீனமான ஏழைகளும் மனித கற்பனைக்கே எட்டாத சித்திரவதைகளிலிருந்து தப்ப முடியவில்லை. இத்தகைய இன்னல்களுக்கு இலக்கானவர்களுள் ஸுமைய்யா, அம்மார், யாஸிர் (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகியோர் முக்கியமானவர்கள். மூவரும் கட்டிப் பிணைக்கப்பட்டு செல்லொணாத் துயரங்களுக்கு ஆளாயினர்.

அபூஜஹ்லின் தலைமையில் ஒரு கூட்டம் மூவரையும் 'அப்தஹ்' என்ற இடத்துக்கு அழைத்துச் சென்று மதிய வேளையில் சுடு மணலில் கிடத்தி கடுமையாக சித்திரவதை செய்தனர். இதனைக் கண்ட நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "யாஸிரின் குடும்பத்தாரே! பொறுமையைக் கைக்கொள்ளுங்கள். உங்களுக்கு சுவர்க்கம் வாக்களிக்கப்பட்டுள்ளது" என்று ஆறுதல் கூறினார்கள். (ஸீரது இப்னு ஹிஷாம்)

தான் ஏற்றுள்ள மார்க்கத்தை விட்டு விடுமாறு அபூஜஹ்ல் ஸுமைய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை வற்புறுத்தி முழு அழுத்தத்தைப் பிரயோகித்தும் அவர் சற்றேனும் உடன்படவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் யாஸிர், ஸுமைய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கும் அபூஜஹ்லுக்கும் இடையில் ஓர் உரையாடல் பின்வருமாறு அமைந்

திருந்தது:

**அபூஜஹ்ல்:** நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வாக்குறுதியை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?

*ஸுமைய்யா:* அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் சொல்பவை யாவும் சத்தியமானதே!

**அபூஜஹ்ல்:** நீங்கள் சித்திரவதையிலிருந்து விடுபட வேண்டுமானால் முஹம்மதை இகழ்ந்து சபிப்பதற்கும் எங்களுடைய தெய்வங்களைப் புகழ்வதற்கும் தயாரா? இல்லையானால் கடுமையாக வேதனை செய்யப்படுவீர்கள்.

*யாஸிர்:* நாங்கள் எதிர்கொள்ள வேண்டிய சிரமங்கள் அனைத்தும் அல்லாஹ்வுடையதும் அவனுடைய தூதருடையதும் வாக்குறுதிக்கேற்பவே அமையும்.

*ஸுமைய்யா:* அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் சொல்பவை யாவும் சத்தியமானதே!

**அபூஜஹ்ல்:** சித்திரவதையா? அல்லது அதிலிருந்து மீட்சியா? என்ற இரு தெரிவுகளுக்கு மத்தியில் உங்களை நான் விடுகிறேன். புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளுமாறும் பொய்யரையும் உங்களுக்கும் மக்ஸூம் குலத்தாருக்கும் அபசகுணத்தைக் கொண்டு வந்தவரையும் பின்பற்றாமல் இருக்குமாறும் நான் அறிவுரை பகர்கிறேன்.

*யாஸிர்:* நடைபெற்றவை யாவும் அல்லாஹ்வுடையதும் அவனுடைய தூதருடையதும் வாக்குறுதிக்கேற்பவே ஆகும்.

*ஸுமைய்யா:* அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் சொல்பவை யாவும் சத்தியமானதே!

பிறகு அபூஜஹ்ல் அவனுடைய அடிமைகளிடம் ''கெட்டுப்போன உணவை அவர்களுக்கு சுவைக்கச் செய்யுங்கள். பின்னர் மூவரும் வேதனையை அனுபவிப்பதற்காக அம்மார் (ரழியல்லாஹு அன்ஹு) சிறைப்படுத்தப்பட்டிருக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்றான். அபூஜஹ்லின் அடிமைகள் காட்டுமிராண்டித்தனமாக இருவரும் நிலத்தில் உருள இழுத்துச் சென்றனர். அவர்களது அழுகுரல்கள் எதிரொலித்தன. மூவரும் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்ததும் தம் புதல்வரிடம், "அம்மார்! நீ எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டனர். அப்போது அவர் "என்னுடையதும் உங்களுடையதும் ஈமானில் சிறிதளவும் பலவீனம் ஏற்படவில்லையெனில் நான் நலமாக இருக்கிறேன்" என்று பதிலளித்தார். நபித்துவத்தின் 5 ஆம் அல்லது 6 ஆம் வருடத்தில் அருளப்பட்ட ஸூரா அல் அன்கபூத்தில் இவர்களைப் போன்ற ஆரம்பகால முஸ்லிம்களைப் பற்றி அல்லாஹ் இப்படிக் கேட்கிறான்:

*''நாங்கள் ஈமான் கொண்டு விட்டோம் என்று மனிதர்கள் கூறியதால் மட்டும் அவர்கள் சோதிக்கப்படாமல் விட்டு விடப்படுவார்கள் என்று எண்ணிக் கொண்டனரா? நிச்சயமாக இவர்களுக்கு முன்பிருந்தவர்களையும் நாம் சோதித்துள்ளோம். அல்லாஹ் உண்மை உரைத்தவர்களையும் நன்கறிவான்; மேலும் பொய்யுரைத்தவர்களையும் நன்கறிவான்.'' (29:2-3)*

நிராகரிப்பாளர்களின் வேதனையாலேயே யாஸிர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இறந்து விட்டார்கள். வயது முதிர்ந்து இயலாதவராக இருந்த ஸுமைய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் பெண்ணுறுப்பில் ஈட்டியால் குத்திக் கொலை செய்தான் கொடியவன் அபூஜஹ்ல். இவரே இஸ்லாத்துக்காக உயிர்நீத்த முதல் பெண்மணியாவார். (ஸீரது இப்னு ஹிஷாம்)

முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சியைக் கண்டு மகிழ ஸுமைய்யா (ரழியல்லாஹு அன்ஹா) நீண்டகாலம் உயிர் வாழாவிட்டாலும் அன்றிருந்த விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில முஸ்லிம்களுக்கு ஈமானில் வைராக்கியத்தையும் வாழ்வில் குறிக்கோளையும் கற்றுக் கொள்வதற்கு முன்னோடியாகத் திகழ்ந்து மறைந்தார்.

உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை அம்மார் (ரழியல்லாஹு அன்ஹு) கொடுமைகளிலிருந்து தப்பி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து "அப்பாவி முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் இந்த இன்னல்கள் எப்போது முடிவுக்கு வரும்? அவர்கள் எப்போது நிம்மதிப் பெருமூச்சுவிட முடியும்?" என்று கேட்டார். அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் யாஸிரின் குடும்பத்தாரை நரக நெருப்பிலிருந்து பாதுகாக்குமாறு பிரார்த்தித்தார்கள். அம்மாரின் கேள்வியானது முன்னைய நபிமார்களை ஈமான் கொண்ட மனிதர்கள் அவர்களின் தூதர்களிடம் கேட்டது போன்றுள்ளது.

*''உங்களுக்கு முன் சென்றவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் போன்று உங்களுக்கும் வராமல் நீங்கள் இலகுவாக சுவர்க்கம் நுழையலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? அவர்களை வறுமையும் துன்பமும் பீடித்தன. மேலும், அத்தூதரும் அவருடன் ஈமான் கொண்டோரும் அல்லாஹ்வின் உதவி எப்போது வரும்? என்று கூறுமளவுக்கு அவர்கள் ஆட்டி வைக்கப்பட்டனர்.'' (2: 214)*

அம்மார் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை பாலைவனச் சுடுமணலில் கிடத்தி நெஞ்சின் மீது பாறாங் கல்லை வைத்தும், நினைவிழக்கும் வரை தண்ணீரில் மூழ்கடித்தும் சித்திரவதை செய்தனர். "முஹம்மதை திட்ட வேண்டும் அல்லது லாத், உஸ்ஸாவைப் புகழ வேண்டும். அப்போதுதான் உம்மை இந்தத் தண்டனையிலிருந்து விடுவிப்போம்'' என்றும் கூறினர். வேதனை தாளாத அம்மார் (ரழியல்லாஹு அன்ஹு) நிராகரிப்பாளர்களின் கட்டளைக்கு இணங்கி விட்டார். அதற்குப் பின் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து அழுது மன்னிப்புக் கோரினார். அப்போது அல்லாஹ் பின் வரும் வசனத்தை இறக்கினான்: (ஸீரத் இப்னு ஹிஷாம்)

*''எவர் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட பின் அவரின் உள்ளம் நம்பிக்கையால் அமைதி பெற்ற நிலையில், அவர் நிர்ப்பந்திக்கப்பட்டதன் காரணமாக அவனை வாயளவில் நிராகரிக்கிறாரோ அவர் மீது குற்றமில்லை.'' (16: 106)*

# பாத்திமா ஸஹ்ரா மகளிர் அரபுக் கல்லூரி

M.P.C.S. வீதி, ஓட்டமாவடி

## ஷரீஆ கற்கைகள் பிரிவு மற்றும் குர்ஆன் மனனப் பிரிவுகளுக்கான புதிய மாணவியர் அனுமதி– 2016

### ➤ அல்குர்ஆன் மனனப் பிரிவு

இப்பிரிவில் குர்ஆனை மனனமிடுவதற்கு மாணவிகள் பயிற்றுவிக்கப்படுவதுடன் பாடசாலை பாடங்களுக்குரிய வகுப்புக்களும் நடத்தப்படும்.

### விண்ணப்பத்திற்கான தகைமைகள்

- அல்குர்ஆனை நன்றாக ஓதத் தெரிந்து இருத்தல்.
- 2016 இல் தரம் 06 இல் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றிருத்தல்.
- 31.12.2015அன்று 11 வயதிற்கு மேற்படாது இருத்தல்.
- உடல் ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல்.

### ➤ ஷரீஆ கற்கை பிரிவு

6 வருட கற்கை காலத்தை உடைய இப்பிரிவின் பாடத்திட்டத்தில் அரபு மொழி மற்றும் ஷரீஆ துறை சார்ந்த கலைகளும் அரச பாடத்திட்டத்திற்கமைய கலைத்துறையில் உயர்தரத்திற்கு தோற்றுவதற்கு தேவையான பாடங்களும் சமாந்தரமாக கற்பிக்கப்படுகின்றன.

### விண்ணப்பத்திற்கான தகைமைகள்

- அல்குர்ஆனை நன்றாக ஓதத் தெரிந்து இருத்தல்.
- 2015 இல் தரம் 09 இல் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றிருத்தல்.
- 31.12.2014 அன்று 14 வயதிற்கு மேற்படாது இருத்தல்.
- உடல் ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல்.

### இக்கற்கை நெறி முடிவில் மாணவிகள் பின்வருவனவற்றை அடைந்து கொள்வர்

1. அரபு மொழி மற்றும் ஷரீஆத் துறைகளில் உயர் Diploma சான்றிதழ்.
2. கலைத்துறையில் (க.பொ.த) உயர் தரப் பரீட்சையில் தோற்றும் வாய்ப்பு.
3. உயர் தரப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகின்ற சம காலத்தில் கல்லூரியின் ஏனைய கற்கைகளும் பூரணமடைவதால் கற்கையை இடையில் விடாமலே கல்வியல் கல்லூரிகளுக்கு அல்லது பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கின்ற சந்தர்ப்பம்.
4. பின்வரும் அரச அங்கீகாரமுள்ள ஷரீஆ சான்றிதழ்களுக்கான பரீட்சைகளுக்கு மாணவிகள் தோற்றச் செய்யப்படுவர்:
   - அஹதியா பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை
   - தீனிய்யாத் (தர்மசார்ய) சான்றிதழ் பரீட்சை
   - அல்ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ் பரீட்சை
   - அல்ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ் பரீட்சை.
5. TVEC அங்கீகாரமுள்ள கணனிக் கற்கை நெறி
6. அரச அங்கீகாரமுள்ள தையல் சான்றிதழ் பயிற்சி.
7. முதலுதவி பயிற்சி, சுருக்கெழுத்து பயிற்சி போன்றவற்றிற்காக அங்கீகாரமுள்ள நிறுவனங்களின் பயிற்சி பட்டறைகள் நடத்தப்படுவதுடன் அவற்றிற்கான கல்லூரியின் பிரத்தியேக சான்றிதழும் வழங்கப்படும்.

### தெரிவு முறை

விண்ணப்பதாரிகள் கல்லூரியில் நடத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கூடாக கற்கைகளுக்காக தெரிவு செய்யப்படுவர்.

### விண்ணப்பப்படிவமும் விண்ணப்ப முடிவுத் திகதியும்

- விண்ணப்ப படிவங்களை கல்லூரிக் காரியாலயத்தில் நேரடியாகவோ தபால் மூலமாகவோ 25.10.2015 க்கு முன்னர் பெற்றுக் கொள்ள முடியும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 15.11.2015 இற்கு முன்னர் நேரடியாகவோ தபால் மூலமாகவோ கல்லூரிக் காரியாலயத்திற்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

### தொடர்புகளுக்கு:-

**T.P.No:- 0652257130, 0653649437**

**E-Mail:- fzlacollege@gmail.com MPCS.** வீதி , ஓட்டமாவடி.

(20ஆம் பக்கத் தொடர்...)

**இஸ்லாமிய இயக்கங்கள், நிறுவனங்களுக்கு ஆன்மிகப் பங்களிப்பொன்றும் இருக்கின்றது. அதாவது, தேசத்தைக் கட்டியெழுப்புதல், அதற்கு பங்களிப்புச் செய்தல், அதன் பொதுப் பிரச்சினைகளில் கூட்டாக செயற்படல் என்பன ஆன்மிக பலத்துடன் தொடர்புபட்டவை என்பதனையும் முஸ்லிம் சமூகத்திற்கு தெளிவு படுத்த வேண்டும். குறித்த வேலைத் திட்டங்களுக்கான இஸ்லாமிய ஆன்மிகப் பெறுமானங்களை இணைப்பதில் இஸ்லாமிய இயக்கங்கள் செயற்பட வேண்டும். இவை அவற்றின் மீதுள்ள பொறுப்புகள் என்றும் கூறலாம்.**

இஸ்லாத்தின் பெரும்பாலான சட்ட வசனங்கள் மற்றும் வழிகாட்டல்கள் பல்வேறு விளக்கங்களுக்கு உட்படக் கூடியன. இதனை இஸ்லாம் அங்கீகரிக்கின்றது. ஆனால், அதற்கான எல்லைகளையும் இஸ்லாமிய அறிஞர்கள் வகுத்துள்ளனர். குறிப்பாக, இஸ்லாமிய கிலாபத் அல்லது இஸ்லாமிய ஆட்சி என்பது அவ்வாறு பல்வேறு விளக்கங்களுக்கு உட்பட்ட விவகாரமா கும். ஆனால், இன்று ஐ.எஸ். அமைப்பினர் முன்வைக்கும் விளக்கம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை தாண்டிய விளக்கமாகும். ஏனெனில், கண்மூடித்தனமாக மனிதர்களைக் கொல்வது, சித்திரவதை செய்வது, மனித வரலாற்றின் மரபுரிமைகளைத் தகர்த்தெறிவது என்பவற்றுக்கு 'இஸ்லாமிய ஆட்சி' என விளக்கம் கொடுப்பது அபத்தமாகும். இதனை சர்வதேச அறிஞர்கள் அனைவரும் மறுக்கின்றனர். மாத்திரமன்றி, குறித்த கருத்தியல்களை பரப்புபவர்களின் அறிவுத் தரம், ஆய்வுப் பலம், அறிவுப் பின்னணி பற்றியும் பல்வேறு கேள்விகள் தொக்கி நிற்கின்றன.

திரைக்குப் பின்னால் ஒழிந்திருந்து உணர்வூட்டும் கருத்தியல்களை பரப்பும் நபர்கள் மிகவும் திறமையானவர்கள். அவர்கள் இளைஞர்களின் உணர்வுகளுடன், மனோநிலையுடன் மற்றும் வேகத்துடன் திறமையாக விளையாடுகின்றனர்.

திரைக்குப் பின்னால் இருக்கும் நபர்கள் திரைக்கு முன்னால் இருக்கும் இளைஞர்களை சிந்திக்க விடாமல், உணர்ச்சியில் இயக்குவதற்கே முற்படுகின்றனர். இது மிக முக்கியமான விடயமாகும். இதனைப் புரிந்து கொள்ளும் திரைக்கு முன்னால் இருக்கும் இளைஞர்கள் சொற்பமானவர்களே. எனவே, பேஸ்புக், டுவிட்டர் மற்றும் யூடியூப் முதலான சமூக வலைத் தளங்களைக் கையாள்வது பற்றி இளைஞர்கள் விழிப்பாக இருக்க வேண்டும். அவர்கள் இது குறித்து விழிப்புணர்வூட்டப்பட வேண்டும்.

இளைஞர்கள் ஏன் குறித்த இயக்கங்களில் இணைந்து கொள்கின்றனர்? என்பதனை சமூகவியல் கண்ணோட்டத்திலும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, அவர்கள் குறித்த நாடுகளில் புறக்கணிக்கப்படும்போது, அவமதிக்கப்படும்போது அல்லது வாய்ப்புக்கள் மறுக் கப்படும்போது இளைஞர்கள் நீதி தேடிச் செல்லும் பயணத்திலேயே வேறு நாடுகளுக்குச் செல்கின்றனர். உண்மையில், பிரச்சினையின் ஆழத்தை ஆய்வோமானால், குறித்த பிரச்சினைக்கான தீர்வு வெளிநாட்டிற்குச் சென்று போராடுவதில் இல்லை. மாறாக, தனது சொந்த நாட்டில் சமத்துவத்தை, சகவாழ்வை, அபிவிருத்தியை மற்றும் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புதிலேயே தங்கியுள்ளது என்பதனையும் இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வேறு ஏதோ ஒரு நாட்டில் சென்று மரணிப்பதனை விட, சொந்த நாட்டில் மேற்குறிப்பிட்ட மாற்றத்திற்காக உழைத்து வாழ்வதே இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் சரியானது. ■

## வெறுப்புக்குரிய 3 விடயங்கள்

**அபூஹுரைரா (ரழி) அறிவிக்கிறார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொன்னார்கள்:**

**நீங்கள் மூன்று விடயங்களில் ஈடுபடுவதை அல்லாஹ் வெறுக்கிறான்:**

**01. சொன்னான், சொல்லப்பட்டது என்று கூறல்.**

**02. அதிக கேள்விகள் கேட்டல்.**

**03. செல்வத்தை பயனற்றதாக வீணடித்தல்.**

**(முஸ்லிம்)**

# ஐந்து வருட சந்தாவில் அழகிய தருமம் அல்ஹஸனாத் வழங்கும் அரிய சந்தர்ப்பம்!

## புரவலர் சந்தாவில் இணைந்து கொள்ளுங்கள் நிலையான தர்மத்தின் பயன்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்

### புரவலர் சந்தா

ஊடகத்துறையில் கால்பதித்துள்ள இதழ்கள் கைக் கொள்ளும் பரஸ்பர ஊக்குவிப்புத் திட்டமே 'புரவலர் சந்தா' ஆகும். இதன் மூலம் குறித்த இதழ் பொருளாதார நன்மைகளை அடைவதோடு வாசகர்களும் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

### நோக்கம்

அல்ஹஸனாத் அதன் பொருளாதார ஸ்திரப்பாடு கருதி முதலீடு ஒன்றுக்கான நிதியீட்டத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது. அதன் ஒரு வழிமுறையாக ரூபா. 8000/- பெறுமதியான ஒரு தொகைப் புரவலர் சந்தாக்களுக்கான விண்ணப்பத்தைக் கோருகிறது.

### நிபந்தனைகள்

- ஒரு புரவலர் சந்தா ஐந்து வருடங்களைக் கொண்டது.
- 5 வருடங்களுக்குமான சந்தா 8000.00 ரூபா மட்டுமே.
- 5 வருடங்களிலும் சந்தா விலையில் மாற்றங்கள் இல்லை.
- இலங்கை முகவரிக்கு மட்டுமே புரவலர் சந்தா பெறப்பட முடியும்

### புரவலர் சந்தாவினால் பயன்பெறுவோர்

இலங்கையிலுள்ள....

- உங்களது உறவினர்கள்
- நண்பர்கள்
- நீங்கள் விரும்பும் ஷரீஆ மற்றும் கல்வி நிறுவனங்கள்
- நூலகங்கள்
- மத்ரஸா மாணவர்கள்
- தேடலில் ஆர்வமுள்ள, வசதி குறைந்தவர்கள்
- அநாதை இல்லங்கள்
- அல்ஹஸனாத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்று நீங்கள் கருதுபவர்கள்
- முஸ்லிமல்லாத சகோதர சகோதரிகள்
- புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்கள்

### தொடர்புகளுக்கு:

சகோதரர் ஆர். அப்துல்லாஹ் அஸ்ஸாம்
TP: +94 777 874 984
Email:rabdullahazzam@gmail.com

2010 முதல் 2014 வரை அமுல் செய்யப்பட்ட இத்திட்டம் வெற்றியளித்தது, அல்ஹம்துலில்லாஹ். வாசகர்கள் அத்திட்டத்திற்கு அளித்த ஒத்துழைப்புக்கு ஜஸாகுமுல்லாஹு கைரன். தொடர்ந்தும் அல்ஹஸனாத் வளர்ச்சியில் தோள்கொடுத்து ஈருலக நன்மைகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்! புரவலர் சந்தா ஒன்றை அன்பளிப்புச் செய்யுங்கள். அது சிறந்த நிலைத்த தருமம்.

### புரவலர் சந்தா படிவம்

(ஆங்கிலத்தில் பூரணப்படுத்துவது சிறந்தது)

பெயர் : ..............................................................................................................

முகவரி : ..............................................................................................................

தொலைபேசி : ........................................ இத்துடன் 8,000 ரூபா பெறுமதியான காசோலை இணைத்துள்ளேன். பின்வரும் முகவரிக்கு அல்ஹஸனாத் புரவலர் சந்தா அனுப்பி வைக்கவும்.

..............................................................................................................


..............................................................................................................

..............................................................................................................

காசோலைகள் Islamic Publication Centre, Hatton National Bank (Central Colombo Branch), Acc No: 007010281356 அல்லது SLJI (Alhasanath), Commercial Bank, Maradana, Acc No: 1320013515 என்ற பெயருக்கு எழுதப்பட வேண்டும்.

**"PURAVALAR SANDHA", ALHASANATH, 77, DEMATAGODA ROAD, COLOMBO-09, SRI LANKA**

## திருந்தாமல்...



மண்ணளவும் இறை
எண்ணமதை
மனதிலே உணராமல்
திருந்தாமல்
இன்னமும்தான் சமூகத்தை
இழிவுபடுத்துது
இந்தப் பெண்ணினத்தின் சில!

பண்பு மறந்து
பாதையிலே கூடியமர்ந்து
மற்றவர் குறை அலசி
மாமிசம் புசிக்கின்றனர்!

நல்லொழுக்க நற்பண்புகள்
நடுத்தெருவில்
நசுங்கித் துடிக்க
பூகம்பங்களான
சிரிப்பொலிகளுக்குள்
புதையுண்டு போகுது
பெண்மையின் இலக்கணங்கள்!

மார்க்க நெறி தவறிய
மங்கையர்க்கரசிகளின்
மதிகெட்ட மாநாடும்
தலை மறந்து போன
தாவணித் துண்டுகளுமாய்
நாலு சுவர் சம்பந்தப்பட்டவை
நடுத்தெருவில் நாற்றமெடுக்க
நாழிகைகளை நகர்த்திக்
கொண்டிருக்கின்றனர் படைத்த
நாயனை மறந்தவர்களாய்...

கொடும் பாவங்களில்
கோபுரமமைத்து
கடும் வேதனையறியாது
கற்பனையில் மிதக்கின்றனர்
இருட்டறை பூட்டிய
இறையச்சங்களோடு!


ஒழுக்கமுள்ள சமூகம்
செதுக்கப்பட வேண்டிய
உளியதனை
தம் கையில் வைத்துக் கொண்டு
சன்மார்க்கச் சுவரதனை
சரித்து விடப் பார்க்கின்றனர்
சதத்திற்கும் பெறுமதி அற்றவராய்!

மாஜிதா அப்துல் கையூம் - மருதமுனை

## என்றென்றும் போதுமானவன்

அகிலம்
அறியாத பல ஞானங்களை
அறிவுக்குள் புதைத்து வைத்தவன்...
தெரியாதவற்றையெல்லாம்
தெரிந்து கொள்ள வைத்தவன்...

நவீனத்தை உருவாக்கும்
ஆற்றலைக் கொடுத்தவன்...
அவற்றின் பாதைகளையும் செவ்வனே
அமைத்தளித்தவன்...



கட்டுமானப் பணிகளையும்
கற்றுத் தந்தவன்...
அறியாமைக்கால மக்களின்
ஆபத்தான நேரங்களிலும்
அவலங்களை நீக்கியவன்...

நித்திய ஜீவனாய்
என்றென்றும் உயிரோடுள்ள
வல்லவன், தூய்மையானவன்
ஏகன் அல்லாஹ்வே
என்றென்றும் போதுமானவன்...!


ஹனானா வதூர்
ஜாமிஆ ஆயிஷா ஸித்தீக்கா

## இன்றைய நாள் மட்டுமே...

தோல்விகளைக் கண்டு துவண்டு விடாதே
அதுதான் வெற்றிப் பாடம் சொல்லும் ஆசான்
அனுபவங்களை கற்றுக்கொள்
அவற்றிலே புதுமையான அறிவுண்டு
உலகம் போற்றும் வெற்றி மாந்தர்களின்
வரலாறுகளைப் புரட்டு அவற்றில் வெற்றியின்
இரகசியங்களைக் கண்டுகொள்வாய்
திட்டமிட பழகிக் கொள்
திட்டமிட தவறுபவன் தவறுவிட திட்டமிடுவான்
திட உறுதியுடன் இரு
உன்னை நீயே ஒருபோதும் தாழ்த்திவிடாதே
கோபம் தவிர்ந்து நட பண்பாளனாவாய்
நிகழ்காலத்தில் வாழ்
இழந்ததற்காக கவலைப்படாதே
எதிர்காலத்தை நோக்கி அஞ்சாதே
ஏனெனில் இன்றைய நாள் மட்டுமே உனக்குரியது!

ஹிமாயா அஹ்மத், நாவலப்பிட்டி

# இறக்கையிலிருந்து இறக்கத் துடிக்கும் ஓர் இறகு



கண்ணிலிருந்து மண்ணுக்கு விழுந்தது கண்ணீர்
விண்ணிலிருந்து மண்ணுக்கு விழுந்தது மழை நீர்
பிறப்புக்கும் இறப்புக்கும் பிரபஞ்சமே ஒரே இடம்
சிறப்பிக்க வந்தோரும் தியாகித்த ஒரே இடம்

பாயவேண்டியது இஸ்லாம் எனும் பள்ளத்தாக்கில்
பாய்வதோ பாவம் எனும் பாதாளத்தில்
ஏகனுக்காய் ஆற்றுவதோ சில
ஏசுவதற்காய் ஆற்றுவதுதான் பல

ஏழை கைகளை ஏந்தியது அல்லாஹ்வுக்காக
கோழை கைகளை ஒதுக்கியது இயலாமைக்காக
பார்ப்போர் புகழவேண்டும் என்பது பெருமைக்காரன்
இகழ்வோரை காக்க வேண்டும் என்பது
பொறுமைக்காரன்

சேர்ப்போம் தர்மங்களை நன்மைக்காக
சேர்வோம் அந்நாளில் வலக்கையில் வாங்குவதற்காக
நாம் பார்ப்பது பல பார்வைகளாக இருந்தாலும்
ஏகன் ஏற்பது நல்ல பார்வையைத்தான்

ஷஹீதுக்காய் துடிக்கிறது என் இதயம்
சுவனத்திற்காய் சம்பாதி! என்கிறது என் உலக வாழ்வு

நான் இமைக்கும் நொடிகள்
இஸ்லாத்திற்கான ஒவ்வொரு அடிகளாக
மாறக்கூடாது

இஸ்லாத்திற்கு ஒளி வழங்கி
மெழுகுவர்த்தியாக முடங்கிட ஆசைப்பட்டவளாய்
ஏந்துகிறேன் இரு கரத்தூண்களையும்
அல்லாஹ்விடம்

**மின்ஹா மும்தாஸ்**

# எழுத்தென்ற நாமம்...


அறியாமை களையும்
அற்புத விளக்கே!
அகிலம் வியந்திடும்
அதிசயம் நீயே!

உதிரம் உறைந்திடும்
உள்ளொளிக் கீற்றே!
அகரம் ஏந்திய
ஆதியும் நீயே

ஏட்டிலே உறங்கும்
எழுச்சிப் பெண்ணே!
பாட்டிலே மிதந்து
பயன் கொடுப்பாயே!

இலக்கியக் கலைகளின்
இமையானவளே!
எழுத்தென நாமம்
சூடி நின்றாயே!

இறைவனின் கட்டளை
இகத்துள் வைத்தாயே!
இணையில்லாப் பெருமைக்கு
உரித்துடையாளே!



**இராணி பௌசியா, கதுருவல**

# குர்ஆனியக் காதல்

அவன் மொழி என் கையில்
தவழ்கையில்...
தகைமையற்ற அடியான் எனை
தத்தெடுப்பதாய் ஓருணர்வு...

விடியற் காலையில் என்றும்
அவன் எழுத்துக்களின் தரிசனம்...
எனக்கோர் உதய தரிசனம்...
அற்புதங்கள் தாங்கிய அதிசயம்...

அவன் மொழிகளை ஓத
என் செவிகள் அதைக் கேட்க...
உள்ளம் உணர...
ஈமானிய சுவாசம் என் இருதயத்தில் கரைய...
ஈரமாகிய இமையோரம்...

பக்கம் பக்கமாய்ப் பார்க்கையில்
பார்போல்
நன்மைகள் வந்து சேரும்
அவன் பரிவால்
அல்ஹம்துலில்லாஹ்

அவன் மொழிப் பூக்களை
குர்ஆனியப் பாக்களை
நான் மொய்க்கையிலே...
என் உயிர் சாய
பிரியமாய் நானும்...
இறைவன் மொழி மேல்
கொள்ளும் ஈமானிய காதல்...

இது குர்ஆனிய காதல்...
சுவனத்திற்கான வாயில்...



**நுஸ்ரா நஜார்டீன்**
**இயற்கை விஞ்ஞான பீடம்**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

# உயர்தரப் பரீட்சை முடிந்ததா...? அடுத்தது என்ன???

கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையை எழுதி முடித்துவிட்டீர்களா நீங்கள் உங்களின் எதிர்கால பரீட்சை பெறுபேற்றிற்காக காத்திருக்கும் நீங்கள் முதலில் ஓர் உண்மையை உணர்ந்தே ஆகவேண்டும். இலங்கையில் கல்விப் பொதுத்தராதரப் உயர்தரப் பரீட்சையை எழுதி முடித்த எல்லா மாணவர்களில் **10% - 15%** இடைப்பட்டவர்களுக்கே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுகின்றது இதுவே இலங்கை கல்வி கட்டமைப்பில் இருக்கின்ற பாரிய குறைபாடு ஆகும். ஏனைய மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினை பெற்று இருந்தபோதிலும் இக் கட்டமைப்பின் காரணமாக பல்கலைக்கழக வாய்ப்புக்களை இழக்கின்றனர்.


இன்றைய நவீனயுகத்தை எடுத்துக்கொள்ளும் போது இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் தனியார் கல்விதுறையினரின் பங்களிப்பு **80%** அதிகமாக காணப்படுகின்றது. திறமையான மாணவர்கள் தமது திறமைக்கு ஏற்றவாறு சிறந்த கற்கை நெறிகளை தெரிவு செய்து மீண்டும் ஓர் முறை தமது திறமைகளை நீரூபனம் செய்து வருகின்றார்கள் என்பது வரலாற்று உண்மையாகும். கால, சமூக, தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சியினாலும், மாற்றத்தினாலும் அதிகமான நிகழ்தகவுகள் தனியார் துறையில் கல்விகற்றவர்கள் மிகப்பிரதான பொறுப்பில் இருக்கிறார்கள். அப் பொறுப்பின் கீழ் இயங்குவதற்காக வேண்டி பல்கலைக்கழகங்களில் கற்றவர்கள் கூட தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களை நாம் காணக்கூடியதாக உள்ளது.

மாணவர்களாகிய நீங்கள் முதலில் உங்கள் திறன்களை மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். இன்றைய சமூகத்தில் காணப்படுகின்ற மாணவர்கள் சமூகத்தில் யார் மிக உயர்ந்த அந்தஸ்த்தில் இருக்கின்றாறோ அவரை நாடிசென்று அறிவுரைகளை கேட்டுக் கொள்கின்றனர். பெரும்பாலான மாணவர்கள் தங்கள் நண்பர்கள் கற்கின்ற கற்கைநெறியினை கற்றல் **or** அவர்களின் சகோதரர்கள் கற்கின்ற கற்கையை கற்றல் போன்ற தொடர்வழிகாட்டலை பின்பற்றுகிறார்கள். ஆனால் அவ்வாறான பாதையினை தெரிவு செய்யும்போது தனது திறமைத் தொடர்பாக சிந்தித்து முடிவு எடுப்பது மாணவர்களாகிய உங்களது கட்டாயக்கடமை.


உயர் கல்வியானது பெரும்பாலும் இரண்டாம் நிலை மொழியிலேயே நடாத்தப்படும் அதாவது ஆங்கில மொழி மூலம். இலங்கையின் பெரும்பாலான மாணவர்கள் தமது முதல் நிலை மற்றும் இடைநிலை கற்கைகளை தமக்கே உரிய தாய்மொழியிலேயே கற்கின்றனர். ஆனால் உயர்நிலை கல்வியானது ஆங்கில மொழியில் கற்பிக்கப்படுவதினால் நீங்கள் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி உள்ளது.

மேற்கூறப்பட்ட அடிப்படை பிரச்சினைகளுக்கு கடந்த **13** வருடகாலமாக தீர்வினை வழங்கியதோடு மட்டும் அல்லாது **18,000**ற்கும் அதிகமான நெட்வேர்க்துறை வல்லுனர்களை இலங்கையின் தொழிற்ச்சந்தைக்கு மட்டும் அன்றி வெளிநாட்டு தொழிற்ச்சந்தைக்கும் அறிமுகம் செய்துவைத்தவர்கள் **WinSYS** நிறுவனத்தினர் என்பதில் பெருமிதம் அடைகின்றது.அதிகமான தொழில்நுட்பத்துறை தொடர்பான கற்கைநெறிகள் ஆங்கில மொழியை தழுவிய-தாக இருப்பினும் எங்களது **WinSYS** நிறுவனத்தில் நடாத்தப்படும் விரிவுரையானது தாய் மொழிமூலம் மிகத்துள்ளியமாக தெழிவுபடுத்தப்படுவதினால் மொழி தொடர்பான அச்சத்தை தவிர்த்து மாணவர்களாகிய நீங்கள் உங்கள் கற்கைநெறியில் கவனம் செலுத்தலாம்.


இலங்கையில் தனியார் கல்விசேவையினை வழங்கும் ஏனைய கல்விநிறுவனங்களை விடவும் **WinSYS** நிறுவனம் சேவையினை மையமாகக்கொண்டு மாணவர்களிடம் குறைந்த அளவிலான கட்டணத்தை மாத்திரம் அறவீடு செய்கின்றனர். இக்கட்டணத்தை மாணவர்கள் தவணைமுறையிலும், கழிவுமுறையிலும் செலுத்தமுடியும். கற்கைநெறி கற்பிக்கப்படுகின்ற காலப்பகுதியினுள் தனது திறமையை சிறப்பாக வெளிக்காட்டும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் முற்றிலும் இலவசமாக கற்கை நெறியினை கற்றுக்கெள்ளக்கூடிய வாய்ப்புக்கள் எம்மிடம் உண்டு."இளமையிற் கல்வி சிலை மேல் எழுத்து" என்ற பழமொழிக்கு அமைவாக உங்களின் இவ் இளமைக்காலத்தை வீணாகக்கழிக்காமல் சரியான பாதையை தெரிவு செய்யுங்கள். நீங்கள் உங்கள் இலக்கை அடையும்வரைக்கும் நாங்கள் உங்களுடன் இருந்து சரியான பாதையில் வழிநடாத்துவோம்.பதிவுகளுக்கு அழைக்கவும் **076-6485760**




S. Anantheesan
CCNA
1000/1000




Osadi Dulanga
CCNA
1000/972




Fazil Jisthi
CCNA
1000/945



Amila Weeratunga
MCSA 411
1000/910



M.A. Muhammdh
MCSA 412
1000/781


A/L
பரீட்சையின் பின்பு
CISCO
php MySQL
CITRIX
Microsoft
vmware
கணினி நெட்வேர்க்துறையில் பொறியியளாளர் ஆவதற்கு எம்முடன் இணையுங்கள்
Why WinSYS ?
100% பயிற்சியுடன் கூடிய கற்கைநெறி
• எந்தவிதமான வயது எல்லைகளும் கிடையாது.
• CCIE கற்கைநெறியை நிறைவு செய்தவர்களில் 33% WinSYS இல் கற்றவர்கள்.
• இலங்கையில் CISCO CCNA ஐ நிறைவு செய்தவர்களில் 44% WinSYS ஐ சேர்ந்தவர்கள்.
• Microsoft பாடநெறியை கற்கும் மாணவர்களுக்கு பயிற்சி நெறிக்காக மடிக்கணினிகள் (Laptops) வழங்கப்படும்.
12 YEARS EXPERIENCE
B.Sc (Hons)
Computer Systems & Networking
CISCO
CCNA | CCNP | CCIE
Microsoft
MCSA 410 411 412
MCSE 413 414
Linux
Advanced Administration
Advanced Security
Certificate in Hardware
Certificate in Networking
CCTV one day Workshop
CCTV 4 days Workshop
Android Apps Development
CITRIX
vmware
Microsoft Hyper-V
Server Virtualizations
vmware
VMware vSphere 6.0
php MySQL
PHP & MySQL
Web Engineering
Magento eCommerce
WinSYS NETWORKS
The network security training provider of the nation
#14, Schofield Place, Kollupitiya, Colombo-03
Tel : 011-2589567 | 011-2589568
www.winsys.lk | info@winsys.lk
Colombo : 0777-259927
Kandy : 0777-047708
Batticaloa : 0777-832871
Jaffna : 0777-825789
TVEC
மூன்றாம் நிலைக்கல்வீகி தொழிற்கல்வி ஆணைக்குழு
TVEC REG NO : P01-/0402



ஒக்டோபர்-06 ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

ஜாமிஆ நளீமிய்யாவின் பிரதிப் பணிப்பாளரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பிரதித் தலைவருமான அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) அவர்களின் விரிவுரையிலிருந்து தொகுக்கப்பட்டது.

-ஜே.எம். அஸீம்-

# சுவனத்துக்கு அழைத்துச் செல்லும் ஆசிரியர் பணி!

**கற்பித்தல் என்பது ஒரு தொழிலல்ல; புனிதமான பணி**

கற்பித்தல் என்பது ஒரு தொழிலல்ல. அது ஒரு புனிதமான பணி; நபிமார்களின் பணி. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தன்னை அறிமுகப் படுத்தும்போது கூறினார்கள்:

"நான் இந்த உலகத்திற்கு ஓர் ஆசிரியனாக அனுப்பப்பட்டுள்ளேன்."

அல்லாஹுத் தஆலா நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை அறிமுகப்படுத்தும்போது, "மக்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் போதிப்பவர்; கற்றுக் கொடுப்பவர்" (அல்ஜுமுஆ: 2) என்று அறிமுகப்படுத்துகின்றான்.

உலகத்தில் தோன்றிய எல்லா நபிமார்களும் ஆசான்களாகத் திகழ்ந்தனர். அத்த கைய இறைத்தூதர்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள்தான் ஆசிரியர்கள். இவ்வாறு ஆசான்களாக வந்த இறைத்தூதர்கள் இரண்டு செய்திகளைச் சொன்னார்கள்.

01. அல்லாஹ்வுக்கு மாத்திரம் இபாதத் செய்யுங்கள். அவனைத் தவிர வணங்கி வழிபடுவதற்கு வேறு இலாஹ் இல்லை. அவனுக்குக் கட்டுப்பட்டு வழிப்படுங்கள்.

02. இந்தப் போதனையைப் புரிவதற்காக எங்களுக்கு எந்தவோர் ஊதியத்தையோ சம்பளத்தையோ கூலியையோ உங்களிடம் நாம் கேட்கவில்லை. நாம் உங்களுக்கு கற்பிக்கிறோம். சத்தியத்தை எடுத்துச் சொல்கிறோம். சரி, பிழையை பிரித்துக் காட்டுகிறோம். இதற்கான கூலியை உங்களிடம் நாம் எதிர்பார்க்கவில்லை. இதற்கான கூலி அல்லாஹ்விடம் இருக்கிறது.

கற்பித்தல் மாத்திரமல்ல, வேறு எந்தத் தொழிலாக இருந்தாலும் வெறும் பணத் திற்காக மாத்திரம் தொழில் புரியக் கூடாது. தொழில், உழைப்பு என்பது பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வழியேயன்றி அதுதான் எமது இலட்சியம் அல்ல. எமது இலட்சியம் சுவனமும் இறைதிருப்தியுமே ஆகும். மக்களுக்கு சேவை செய்கின்ற வர்களாகவும் அல்லாஹ்வின் திருப்தியை நாடியவர்களாகவும் பணியாற்ற வேண்டும். எமது வாழ்வாதாரத்திற்காக நாம் செய்யும் அந்த சேவைக்கு சிறிது ஊதியம் எதிர் பார்க்கின்றோம் என்ற மனோநிலையில்தான் நாம் உழைப்பில் ஈடுபட வேண்டும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: 'மனிதர்க ளுக்கு நல்ல விடயங்களை சொல்லிக் கொடுப்பவர்களுக்கு மலக்குகள் எந்நேரமும் துஆ செய்து கொண்டிருக்கின்றனர்."

நல்ல விடயங்களைக் கற்றுக் கொடுப்பது என்பதன் அர்த்தம், இஸ்லாத்தைக் கற்பிப்பது மாத் திரமல்ல. புவியியல், கணிதம், விஞ்ஞானம் போன்ற ஏனைய விடயங்களைக் கற்பிப்பதும் நல்ல விடயங்கள்தான். அதனை முறை யாக கற்பித்தால் அவர்களுக்கு அல்லாஹ்வின் கூலி கிடைக்கும். செய்யும் தொழிலுக்கூடாக சுவ னம் செல்ல வேண்டுமென்றால் இந்தப் பார்வை அவசியம். ஏனெ னில், செய்யும் தொழில் அமானத் ஆகும். ஓர் ஆசிரியர் மாத்திர மல்ல, எந்தத் தொழில் செய்ப வராக இருந்தாலும் தொழில் ஓர் அமானத் என்ற உணர்வுடன் பணியாற்ற வேண்டும்.

**அர்ப்பணமும் தியாகமும்**

தொழிலில் அர்ப்பணமும் தியாகமும் இருக்க வேண்டும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இஸ்லாத்

தைப் போதிக்க வந்தவர்கள்; மார்க்கத்தைக் கற்றுக் கொடுக்க வந்தவர்கள். எனவே, அவர்களிடத்தில் இந்த ஆசிரியப் பணிக்கான அழகிய முன்மாதிரிகளைக் காண லாம். இறைதூதரைப் பற்றி அல்குர்ஆன் இப்படிக் கூறு கிறது:

*“(விசுவாசிகளே!) நிச்சயமாக உங்களிலிருந்து ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கிறார். நீங்கள் கஷ்டத்துக்குள்ளாகி விட்டால் (அது) அவருக்கு மிகவும் வருத்தமாகவே இருக் கும். அன்றி, உங்களை பெரிதும் விரும்புகின்றவராகவும் விசுவாசிகள் மீது மிகவும் அன்பும் கிருபையும் உடைய வராகவும் இருக்கின்றார்.” (9: 28)*

இத்தகைய அர்ப்பணம் ஆசிரியர்களிடம் அவசியம் இருக்க வேண்டும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தன்னுடைய நபித் தோழர்களைப் பார்த்து கூறினார்கள்:

“நிச்சயமாக ஒருவருக்கு அவருடைய தந்தையைப் போல உங்களைப் பொறுத்தவரையில் நான் இருக்கிறேன்.” (அபூதாவூத், அந்நஸாஈ, இப்னு மாஜா)

ஒரு தந்தை தனது பிள்ளைகளுடன் எந்தளவு அன்பாக, அக்கறையாக இருக்கின்றாரோ அந்தளவுக்கு அல்லது அதைவிட அதிக அக்கறையுள்ளவனாக நான் உங்கள் விடயத்தில் இருக்கிறேன் என நபியவர்கள் கூறினார்கள்.

ஆசிரியர்கள் தமது மாணவர்கள் விடயத்தில் கரிசனை செலுத்த வேண்டும். தங்கள் மீது தமது ஆசிரியர்கள் எந் தளவு தூரம் அக்கறையாக இருக்கின்றார்கள் என்பதை மாணவர்கள் உணர வேண்டும். ஆசிரியர்கள் தமது கற் பித்தல், கரிசனைமிக்க பார்வை, மாணவர்கள் கூறும் விடயங்களை செவிதாழ்த்திக் கேட்டல், அவர்களது விடயத்தில் ஆர்வமும் ஈடுபாடும் காட்டுதல் என்பவற்றின் மூலம் ஆசிரியர்கள் தமது விவகாரங்களில் அக்கறையுடன் நடந்து கொள்கின்றார்கள் என்பதை மாணவர்களுக்கு மனப்பூர்வமாக உணரச் செய்ய வேண்டும். ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு சொல்லால், செயலால், நடத் தையால் இவற்றைக் காண்பிக்க வேண்டியிருக்கிறது.

எமது பிள்ளைகள் விடயத்தில் அக்கறையுடன் செயற் படும் நாம், எம்மிடம் கற்கும் எமது மாணவர்கள் விடயத் தில் அத்தகைய ஆர்வத்தோடு செயற்படுகிறோமா என்பது குறித்து சற்று சிந்திக்க வேண்டும். இது குறித்து மறுமை யில் நாம் பதில் சொல்லியாக வேண்டும்.

## கற்பித்தல் பணியில் இமாம்களின் முன்மாதிரி

நபிமார்களின் வாரிசுகளான எமது முன்னைய இமாம் கள், ஸலபுஸ் ஸாலிஹீன்கள் இந்த அறிவுப் பணிக்கு எத்த கைய பங்காற்றி இருக்கிறார்கள் என்பதை நாம் வரலாற்றில் காணலாம்.

ஹதீஸ் துறைப் பேராசிரியரான இமாம் ஸுப்யான் அஸ்ஸவ்ரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

“எனது மாணவர்கள் கற்பதற்காக என்னைத் தேடி வராதபோது நான் அவர்களைத் தேடி அவர்களது வீடுக ளுக்குப் போய் பாடம் கற்பித்துக் கொடுக்க விரும்புகின் றேன்.” (இப்னு அப்தில் பர், கிதாபுல் இல்ம்)

இமாம் ஷாபி (ரஹிமஹுல்லாஹ்) மற்றொரு முக்கி யமான ஆசிரியர். அவர் தனது மாணவரான ரபீஃ என்ப வரை அழைத்து அவரிடம் கூறுவார்:

“ரபீஃ! உனக்கு அறிவைத் தர வேண்டுமென்பதில் நான் எந்தளவுக்கு தீவிர ஆசை, ஆர்வம், வேட்கை கொண் டுள்ளேன் என்றால், அறிவை உணவுக் கவளமாகப் பிசைந்து உனக்கு ஊட்ட முடியும் என்றிருந்தால் அப்படியும் செய் வேன்.” (இப்னு அப்தில் பர்)

இத்தகைய அர்ப்பணமும் தியாகமும் இருந்தால் அத்தகைய ஆசிரியர் சுவனத்தை ஆசிக்கலாம். இந்தப் பார்வை, நோக்கு, சிந்தனைப் பாங்கு என்பன ஓர் ஆசிரியரின் அணிகலன்களாக திகழ வேண்டும்.

## அன்பும் பணிவும்

எம்மோடு பணி செய்கின்றவர்களுடன் நாம் அன்பா கவும் பண்பாகவும் நடந்து கொள்ள வேண்டும். நபியவர் களைப் பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுகின்றபோது,

*“நபியே! அல்லாஹ்வின் அருளின் காரணமாகவே நீங் கள் அவர்களோடு நளினமாக, நயமாக, அன்பாக நடந்து கொண்டீர்கள். நீங்கள் கடுகடுப்பானவராகவும் கடின உள்ளம் படைத்தவராகவும் இருந்திருந்தால் அவர்கள் உங்களை விட்டும் விரண்டோடியிருப்பார்கள்.” (ஆலுஇம்ரான் : 159)*

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களி டமிருந்த உன்னதமான பண்பே அன்புதான். மக்களோடு, மற்றவர்களோடு அன்பாக இருத்தல் எனும் உயரிய பண் பைப் பெற்றிருந்தார்கள் நபியவர்கள். தன்னோடு பணி யாற்றிய எவரையும் எச்சந்தர்ப்பத்திலும் நபியவர்கள் தண்டித்ததில்லை.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களி டம் 10 வருடங்கள் பணியாளராக சேவை புரிந்த அனஸ் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறி னார்கள்:

“அந்த பத்து வருடங்களில் ஒரு நாளாவது நபியவர்கள் நான் ஒரு வேலையைச் செய்ததற்காக ஏன் செய்தீர்கள் என்றோ ஒன்றை செய்யாமல் விட்டதற்காக ஏன் இதனைச் செய்யவில்லை என்றோ கேட்டதில்லை.”

7ஆம் நூற்றாண்டில் மனிதர்கள் நாகரிகமற்று, பண்பா டற்று இருந்த காலத்தில் இத்தகைய உயர்ந்த நாகரிகத்தை

யும் பண்பாடுகளையுமே நபியவர்கள் கற்றுத் தந்தார்கள்.

## அனுதாபம் காட்டுதல்

ஆசிரியர்கள் மாணவர்கள் மீது அன்பு செலுத்துவது போலவே தவறு செய்கின்ற, குற்றமிழைக்கின்ற மாணவர்கள் மீது அனுதாபம் காட்ட வேண்டும். இதுவும் ஓர் இஸ்லாமிய ஆசிரிய, ஆசிரியையிடம் இருக்க வேண்டிய பண்பு.

ஒருநாள் காட்டுப்புற அரபி ஒருவர் மஸ்ஜிதுந் நபவியில் சிறுநீர் கழித்து விடுகின்றார். அப்போது ஸஹாபாக்கள் கோபமடைந்து அவரைத் தாக்க முனைகிறார்கள். நபியவர்கள் அவரை விட்டுவிடுமாறு கூறி அவரை அழைத்து அவருக்கு உபதேசித்து விட்டு ஸஹாபாக்களிடம், "ஒரு வாளி நீரைக் கொண்டுவந்து இங்கே ஊற்றுங்கள்" என்று கூறிவிட்டு, "மனிதர்களுக்கு எதையும் இலகுபடுத்துபவர்களாகவே நீங்கள் அனுப்பப்பட்டுள்ளீர்களே தவிர எதையும் கஷ்டப்படுத்தி, சிரமப்படுத்தி கடினமாக்குபவர்களாக நீங்கள் அனுப்பப்படவில்லை" என ஸஹாபாக்களுக்கு போதனை செய்தார்கள். (முஸ்லிம்)

நபிகளாரின் போதனா முறையை, கற்பித்தல் அணுகுமுறையை சற்று அவதானித்துப் பாருங்கள். பாடசாலை வருகின்ற மாணவர்களின் பின்னணிகள் வேறுபட்டதாக இருக்கும். அவர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்கின்ற சூழல் வித்தியாசமானதாயிருக்கும். அவர்களின் பெற்றோரின் பின்னணி, சூழல் என்பவற்றுக்கேற்ப வேறுபாடுகள் இருக்கும். அப்போது அந்த மாணவர்களை அனுதாபத்தோடு பார்த்து அவர்களைத் திருத்தும் அளவுக்கு எம்மிடம் பொறுமை இருக்க வேண்டும். மாணவர்கள் தவறிழைக்கின்றபோது பொறுமையுடன் அணுகி அவர்களைத் திருத்த முயற்சிக்க வேண்டும். இந்தத் தகுதி, திறமை இல்லா விட்டால் அந்தப் புனிதமான பணியை செவ்வனே செய்ய முடியாது.

அன்பு காட்டுவது மாத்திரமல்ல, தவறுசெய்கின்ற மாணவர்களை அரவணைக்க வேண்டும். அன்பின் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் அரவணைத்து, தவறுகளைத் திருத்தி, அவர்களை நெறிப்படுத்துவது. அந்தளவுக்குப் பக்குவமும் பொறுமையும் சகிப்புத்தன்மையும் ஓர் ஆசிரியரிடம் இருக்க வேண்டும்.

நாம் இயந்திரங்களோடு பணியாற்றுபவர்களல்ல; மாறாக மாணவர்களோடு, பிஞ்சு உள்ளங்களோடு உறவாடுபவர்கள். அந்தக் குழந்தைகளின் எதிர்காலம் ஆசிரியர்களின் கைகளில்தான் இருக்கிறது. ஆசிரியர்கள் தட்டிக் கொடுக்கலாம் அல்லது தட்டி விடலாம். ஆசிரியர்களின் ஒவ்வொரு வார்த்தையும் அந்த மாணவர்களின் நனவிலி மனதில் பதியும். சில ஆசிரியர்கள் மாணவர்களைப் பார்த்து தவறான, கடுமையான, பிழையான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துகிறார்கள். இவ்வாறான வார்த்தைகளால் பிள்ளைகளின் மனது பாதிப்படைகிறது. அதனால் நாம் ஏசுகின்ற, திட்டுகின்ற வார்த்தை அவர்களது உள்ளங்களைப் பாதிப்படையச் செய்து அவர்களை அவ்வாறே மாற்றி விடுகின்றது. இதற்கெல்லாம் நாம் பொறுப்புக் கூறியாக வேண்டும்.

## ஊக்குவித்தல்

செய்யும் தொழிலின் ஊடாக இறைதிருப்தியைப் பெற நாடினால் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்; அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்; நம்பிக்கையூட்டும் நல்ல வார்த்தைகளைக் கூற வேண்டும்.

உதாரணமாக, சில மாணவர்கள் அதிக திறமை படைத்தவர்களாக இருப்பார்கள். அவர்களை பாராட்டி ஊக்குவிக்க வேண்டுமே தவிர, அவர்களை மட்டம் தட்டி விடக் கூடாது. மாணவர்களைத் தரக்குறைவாகப் பேசுவதனால் அவர்கள் சோர்வடைந்து மனந்தளர்ந்து போய்விடுவார்கள். இதனால் அவர்களின் திறமைகள் மங்கிப் போவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இது குறித்தும் நாம் மறுமையில் விசாரிக்கப்படுவோம்.

எனவே, இத்தகைய மாணவர்களைப் பாராட்டி, ஊக்குவித்து, ஆர்வமூட்டுவதுடன் அந்த மாணவர்களுக்காக பிரார்த்திக்க வேண்டும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தனது ஸஹாபாக்களை ஊக்கப்படுத்துபவர்களாக இருந்தார்கள்.

அபூ மூஸா அல்அஷ்அரி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அருமையாக அல்குர்ஆனை ஓதக்கூடியவர். நபியவர்கள் அவரை அழைத்து "அபூ மூஸாவே! அல்குர்ஆனைக் கொஞ்சம் ஓதுங்கள். நீங்கள் ஓதுவதை நான் செவியேற்க விரும்புகிறேன்" எனக் கூறுவார்கள். "தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய புல்லாங்குழல்" என்று அவரை வர்ணிப்பார்கள். அபூமூஸா அல்அஷ்அரி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் நபியவர்களின் வேண்டுகோளை ஏற்று சந்தோஷமாக ஓதுவார்கள்.

அபூபக்ர், உமர், உஸ்மான், அலி (ரழியல்லாஹு அன்ஹும்) போன்றோரை 'அஸ்ஸித்தீக்' உண்மையாளர் என்றும் அபூ உபைதா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை 'இந்த சமூகத்தின் நம்பிக்கைக்குரியவர்' என்றும் பாராட்டினார்கள்; பட்டம் சூட்டினார்கள்.

## அறிவுச் செருக்கிலிருந்து தவிர்ந்திருத்தலும் கண்ணியம் பேணலும்

எந்த ஆசிரியரிடமும் அறிவுச் செருக்கு வரக் கூடாது. மாறாக, அவர்களிடம் பணிவும் அடக்கமும் இருக்க வேண்டும். ஓர் ஆசிரியரிடம் இருக்க வேண்டிய மற்றொரு பண்புதான் சுயமரியாதை பேணல். ஒரு முஃமின் எதை இழந்தாலும் தனது கண்ணியத்தை இழக்கக் கூடாது. பணத்திற்காக பணியாற்றுபவராக ஒரு முஸ்லிம் இருக்க முடியாது.

(57ஆம் பக்கம் பார்க்க)

# பொறாமைத் தீயில் கருகிய சகோதரத்துவம்!



**அஷ்ஷெய்க் டி.எம். நிலாம் (இஸ்லாஹி) M.A.**
**அதிபர், இர்பானிய்யா அ.க, கெகுணகொல்ல**
tmnilam@gmail.com

> **ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களும் ஹவ்வா (அலைஹஸ்ஸலாம்) அவர்களும் சுவன இன்பங்களில் சுகமாக வாழ்வதைக் கண்ட இப்லீஸ் எனும் ஜின் பொறாமைப்பட்டான். பொறாமை இப்லீஸின் குணமாகும். அவன் அவ்விருவரையும் சுவனத்திலிருந்து வெளியேற்றத் திட்டமிட்டான்.**

பொறாமை, உள நோய்களுள் மிகக் கொடியதொரு நோயாகும். சுயநலம் மேலோங்கியவர்களின் இதயங்கள் இந்நோயால் அவதிப்படுகின்றன. இந்நோயுள்ள மனிதர்கள் பிறர் நன்றாக வாழ்வதை விரும்ப மாட்டார்கள். பொதுநல சிந்தனை மேலோங்கியவர்கள் எப்போதும் வெளிப்படையாக செயற்படுவார்கள். இவர்களது இதயங்களில் பொறாமை, வஞ்சகம் இருக்க மாட்டாது. மனித நேயமும் அதைப் போதிக்கும் அனைத்து சமயங்களும் பொறாமையை எதிர்க்கின்றன.

ஆனால், சுயநலம் கொண்ட பொறாமைக்காரர்கள் மறைமுகமாக சதி செய்யும் இழிவான குணத்தைப் பெற்றிருப்பார்கள். இவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். அடுத்தவரின் வாழ்க்கை பற்றி சிந்திக்க மாட்டார்கள். எப்போதும் அடுத்தவரை சந்தேகத்துடன் பார்ப்பார்கள். பொய்த் தகவல்களை வெளியிடுவார்கள். காட்டிக் கொடுப்பதில் அவசரப்படுவார்கள். கோள் சொல்வார்கள். பிறருக்கு குழி தோண்டுவார்கள்.

இதனால்தான் அல்லாஹ் பின்வரும் துஆவைக் கற்றுத் தருகின்றான்:

“பொறாமைக்காரன் பொறாமைப்படும்போது ஏற்படும் தீங்கை விட்டும் பாதுகாவல் தேடுகிறேன்.”

(அல்அலக்: 05)

பொறாமையானது பல பாவங்களின் மூலமாக இருக்கின்றது. கோள், புறம், காட்டிக் கொடுத்தல், நயவஞ்சகம், பொய், பாசாங்கு, அபாண்டம், வயிற்றிலடித்தல், அடுத்தவரின் உரிமையை அநியாயமாக விழுங்குதல், கஞ்சத்தனம், களவு, கொள்ளை, பழி வாங்கல், கொலை போன்ற பாவச் செயல்களுக்கு அது வழிவகுக்கிறது. சூனியம் செய்தாவது அடுத்தவரை வீழ்த்துமாறு அது தூண்டுகிறது. இதனால்தான் “சூனியம் அழிவை ஏற்படுத்தும் ஏழு பெரும் பாவங்களுள் இணைவைத்தலுக்கு அடுத்த பெரும்பாவம்” என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

பொறாமைக்காரர்கள் தம் சகோதர முஸ்லிமின் கவலை, துன்பம் பிரச்சினை போன்றவற்றில் இன்பம் காண்பர்; மனமகிழ்ந்து தற்பெருமையும் கொள்வர். சமூகத்தில் அல்லது நிறுவனத்தில் ஒருவர் தலைதூக்கும்போது அவரை நோக்கிப் பல பொறாமைக் கண்கள் விழித்துக் கொள்கின்றன. இதனால்தான் நபியவர்கள் கண்திருஷ்டியை உண்மையென்றார்கள். ஆச்சரியமான ஒரு விடயத்தைக் காணும்போது ‘லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்’ என்று கூறுமாறு போதித்தார்கள். ஏனெனில், ஓர் உண்மை

விசுவாசி தன் கண் பார்வையால் கூட அடுத்த மனிதர் பாதிக்கப்படுவதை விரும்ப மாட்டார். ஆனால், இன்று இப்பொறாமைத் தீயில் எத்தனையோ உறவுகள், நட்புகள், சகோதரத்துவங்கள் கருகி சாம்பலாகிக் கொண்டிருக் கின்றன.

ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களும் ஹவ்வா (அலைஹஸ்ஸலாம்) அவர்களும் சுவன இன்பங்களில் சுகமாக வாழ்வதைக் கண்ட இப்லீஸ் எனும் ஜின் பொறா மைப்பட்டான். பொறாமை இப்லீஸின் குணமாகும். அவன் அவ்விருவரையும் சுவனத்திலிருந்து வெளியேற்றத் திட்டமிட்டான். நிரந்தர இருப்பின் மீது ஆசையூட்டி சதி செய்தான். அவன் அவ்விருவரிடமும் பின்வருமாறு கூறினான்:

“நீங்கள் இருவரும் இங்கு இரு மலக்குகளாக ஆகிவிடு வீர்கள் என்பதற்காகவும் இங்கு நிரந்தரமாக இருந்து விடுவீர்கள் என்பதற்காகவுமே உங்களது இரட்சகன் இந்த மரத்தின் கனியை சாப்பிடுவதை விட்டும் உங்களைத் தடுத் துள்ளான்.”

அதாவது தடுக்கப்பட்ட இந்த மரத்தின் கனியை சாப் பிட்டால் சுவனத்தில் நிரந்தரமாக வாழலாம் அல்லது மலக்குகளாக ஆகி விடலாம் என ஆசையூட்டினான்.

அந்த மரத்தின் நறுமணம், அதன் சுவை, அதன் நிறத் தின் அழகு என்பவற்றை வர்ணித்து மனிதனுள் பொதிந் துள்ள அழகுணர்ச்சியைத் தூண்டி இலாபமடைய முற்பட்டான். அவனது நஞ்சு கலந்த வார்த்தைகளில் அவர்களது பிஞ்சு மனங்கள் சங்கமமாகின. அழகும் கவர்ச் சியும் இறை சிந்தனையைத் தோற்கடித்தன. அவர்கள் பழத்தை சாப்பிட்டனர். சுவனத்திலிருந்து வெளியேற்றப் பட்டு இந்தப் பூமியில் சுமார் 10,000 வருடங்கள் வாழ வேண்டியதாயிற்று.

ஆதம், ஹவ்வா ஆகியோருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. முதல் மகனான காபிலுடன் ஒரு பெண் குழந்தை யும் பிறந்தது. அதேபோல் இரண்டாம் மகன் ஹாபிலுட னும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவர்கள் பருவ வயதை அடைந்த பின் திருமணம் செய்து கொள்ள விரும்பினர். எனவே, உடன் பிறப்புக்களை மாற்றித் திருமணம் செய்து வைக்குமாறு அல்லாஹ் ஆதமுக்கு ஏவினான்.

இதனை ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) தன் புதல்வர்களிடம் கூறினார். காபிலுடன் பிறந்த பெண் பிள்ளை அழகானதாக இருந்தது. எனவே, காபில் இத்திருமணமுறையை விரும்ப வில்லை. அவர் தன்னோடு பிறந்த அழகான தங்கையை ஹாபிலுக்கு விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. அவனுக் குள் சுயநலம் வேலை செய்தது. எனவே, தன் சகோதரன் மீது காபில் பொறாமைப்பட்டான். தம்பியுடன் தர்க்கித் தான். கொலை அச்சுறுத்தல் விடுத்தான். காபிலிடம் உலக ஆசையும் உலக இன்பமும் மன ஆசைக்குக் கட்டுப்படும் தன்மையும் மிகைத்திருந்ததால் அல்லாஹ்வின் கட்டளைக்குக் கட்டுப்பட மறுத்தான்.

இதனால் அவர்களது பெற்றோர் அதிக கவலைய டைந்தனர். அந்த அழகிய குடும்பத்தில் அமைதி தொலைந்தது; அச்சம் உருவெடுத்தது; முறுகல் நிலை தொடர்ந்தது. ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் பிரச்சினையைத் தீர்க்க ஒரு வழியைக் காட்டுமாறு அல்லாஹ்விடம் மன்றாடினார். அல்லாஹ் மற்றொரு வழியைக் காண்பித்தான்.

இருவரும் தர்மம் செய்ய வேண்டும். எவருடைய தர்மம் ஏற்றுக் கொள்ளப்பட்டதோ அவருக்கு அப்பெண் மணப்பெண்ணாவாள் என்று கூறப்பட்டது. ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தன் புதல்வர்களிடம் இவ்வாறு கூறிவிட்டு கஃபாவுக்குச் சென்றார்கள். காபில் மந்தையின் சொந்தக்காரனாக இருந்ததால் அவர் ஒரு பிராணியை அறுத்தார். ஹாபில் ஒரு விவசா யியாக இருந்ததால் தனது விவசாயப் பொருளிலிருந்து தர்மத்திற்காக ஒதுக்கினார். ஹாபிலின் தர்மம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இது குறித்து அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடு கின்றது:

“மேலும், (நபியே) ஆதமுடைய (ஹாபில், காபில் என்னும்) இரு குமாரர்களின் செய்தியை உண்மையைக் கொண்டு நீர் அவர்களுக்குக் கூறுவீராக. அவ்விருவரும் தமது குர்பானியை சமர்ப்பித்த சமயத்தில் அவ்விருவரில் ஒருவரிலிருந்து அது அங்கீகரிக்கப்பட்டது. மேலும், மற்றவரிலிருந்து அது அங்கீகரிக்கப்படவில்லை. ஆகவே, நிச்சயமாக நான் உன்னைக் கொலை செய்து விடுவேன் என்று (அங்கீகரிக்கப்படாதவர்) கூறினார். அதற்கு மற்றவர் அல்லாஹ் அங்கீகரிப்பதெல்லாம் பயபக்தி உடையவரிட மிருந்துதான் என்று கூறினார்.

மேலும், நீ என்னைக் கொலை செய்வதற்காக உன் கையை என்னளவில் நீட்டினால் நான் உன்னைக் கொலை செய்வதற்காக எனது கையை உன்னளவில் நீட்டுபவன் அல்ல. நிச்சயமாக நான் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறேன் என்று கூறினார்.

என்னுடைய பாவத்தையும் உன்னுடைய பாவத் தையும் நீ சுமந்து கொண்டு (மறுமையில்) வருவதையே நிச்சயமாக நான் விரும்புகிறேன். அவ்வாறாயின், நீ நரகவாசிகளில் உள்ளவனாகி விடுவாய். இதுதான் அநியாயக்காரர்களுக்கான கூலியாகும் என்றும் கூறினார்.

அதன் பின்னரும் அவர் தன் சகோதரரைக் கொலை செய்து விடுமாறே அவருடைய மனம் அவருக்கு எளி தாக்கிக் காட்டியது. ஆகவே, அவர் அவரைக் கொலை செய்துவிட்டார். அதனால் அவர் நஷ்டமடைந்தவர்களில்

ஆகிவிட்டார்.'' (அல்மாஇதா: 27-30)

உலக ஆசை பொறாமையைத் துண்டுகிறது; பொறாமை கொலைக்கு வழிவகுக்கிறது என்பதையே இச்சம்பவம் உணர்த்துகிறது. ஒரு முஸ்லிம் தன் உடம்பிலிருந்து அகற்றுகின்ற ஒரு நகத்துண்டினாலும் பிறர் அவதிக்குட்படக் கூடாது என்பதால் அதை புதைத்து விடுமாறு இஸ்லாம் குறிப்பிடுகிறது. ஒரு முஸ்லிம் வெளியிடுகின்ற காபனீ ரொட்சைட் கூட பிறரது ஆரோக்கியத்திற்கு பாதிப்பாக அமையக் கூடாது என்பதனால் கொட்டாவி விடும்போது வாயில் கையை வைத்து அதைத் தடுத்துக் கொள்ளுமாறு நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பொறாமை காரணமாக பிறரைத் துன்பத்திற்குட்படுத்துவது பெரும் பாவமாகும்.

அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

''விசுவாசிகளான ஆண்களையும் பெண்களையும் வேதனைக்குட்படுத்தியவர்கள் பாவமீட்சி பெறாவிட்டால் அவர்களுக்கு ஜஹன்னம் எனும் நரக வேதனையும் சுட்டெரிக்கும் நரக வேதனையும் இருக்கிறது.'' (அல்புரூஜ்: 10)

பொறாமை மார்க்கத்தை அழிக்கும் கொடிய நோயாகும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

''முன்னைய சமூகத்தவரைப் பீடித்திருந்த வெறுப்புணர்வு, பொறாமை என்ற நோய் உங்களிடம் ஊர்ந்து வந்துவிட்டது. அது அழிவை ஏற்படுத்தும் நோயாகும். அது மார்க்கத்தை அழிக்கும்.'' (திர்மிதி)

இறைவிசுவாசமும் பொறாமையும் இணைந்திருக்காது. பொறாமைப்படும்போது ஈமான் போய்விடுகிறது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

''ஒருவரது அகத்தில் இறைவிசுவாசமும் பொறாமையும் ஒன்று சேராது.'' (இப்னு ஹிப்பான்)

''மக்கள் தமக்கிடையே பொறாமைப்படாதிருக்கும் காலமெல்லாம் சிறப்பாக இருப்பார்கள். நெருப்பு விறகை எரிப்பது போல பொறாமை நற்கருமங்களை எரித்து விடுகிறது; மனிதர்களை வெறுப்பவர்தான் மனிதர்களில் மோசமானவர்'' என்றெல்லாம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மனித உயிர், மனித மானம், மனித சிந்தனை, மனித நேயம், மனிதம், மனித சந்ததி, மனித ஒழுக்கம், மனிதப் பண்பாடு, சமயம், மனிதரின் சொத்து போன்றவற்றைப் பாதுகாப்பதை இலக்காகக் கொண்ட இஸ்லாமிய ஷரீஅத் பல கொடிய விளைவுகளுக்கு வழிவகுக்கும் பொறாமையையும் அதன் விளைவுகளையும் எப்படி அங்கீகரிக்கப் போகிறது?!

பல தீமைகளின் தாயான பொறாமையை விட்டும் எல்லாம் வல்ல அல்லாஹ் எம் அனைவரையும் பாதுகாப்பானாக


WARDHAH LADIES ACADEMY - MAWANELLA

(O/L, A/L முடித்த பெண்களுக்கான ஈருலக வெற்றிக்கும் வழிகாட்டும் 2 மாத கால வாழ்க்கை திற பயிற்சிகள்.

முதன் முதலாக மாவனல்லையில் பாதுகாப்பான இஸ்லாமிய சூழலில் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பமாக உள்ளது

Advance Course
Pre - School Teacher Training
Art (சித்திரக்கலை)

பாதுகாப்பான வதிவிட வசதி மற்றும் தரமான மூவேளை உணவு வசதியும் உண்டு

இங்கு.....

1. அல்குர்ஆன் தஜ்வீத்
2. அ.்.லாக் / ஸீறா
3. சமையற்கலை (General Cookering)
   - Cake Making / Sweets
   - Bakery Foods
   - Indian Foods
5. Paper Quiling
6. Saree Painting / Glass Painting
7. Beauty Theraphy (அழகியற் கலை)
   - Facial
   - Herbal Facial
   - Makeup / Selfi Makeup
8. Bridal Dressing / Hair Styling
9. Mehandhi Designing
10. Counseling & Guidance
11. Pre - Marriage Counseling
12. பெண்கள் சம்பந்தமான பிரச்சினைகளுக்கான பெண் வைத்தியர்களின் கருத்தரங்குகள்.
13. Career Guidance
14. Spoken English & Sinhala.

போன்றன வெளிநாடுகளில் சிறப்பு தேர்ச்சி பெற்ற அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாத்தினால் முன்னெடுத்து செல்லப்படவுள்ளன.

விண்ணப்ப முடிவு - 2015-10-25
(குறிப்பிட்ட விண்ணப்பங்களே அனுமதிக்கப்படும்)
மாவனல்லை பிரதேச மாணவிகளுக்காக இவ்வகுப்புக்கள் பகுதி நேரமாகவும் கற்பிக்கப்படும்.



2 Months

யுவதிகளின் வாழ்வில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

பெருமதி வாய்ந்த சான்றுதல்கள் வழங்கப்படும்

Hot Line
077 9737157

A 38/4, River Side, Zahira Road, Hinguloya, Mawanella.

சென்னையிலிருந்து மௌலவி நூஹ் மஹ்ழரி

# 5. வீணடிக்கும் அருட்கொடைகள்

**உலகின் ஒரு மூலையில் எங்கோ ஒருவர் பசியுடன் இருக்கின்றார் என்றால், மற்றொரு மூலையில் எங்கோ ஒருவர் அவருக்கான உணவை அபகரித்து வைத்துள்ளார் அல்லது வீணடிக்கின்றார் என்று பொருள்.**

இறைவன் நமக்கு எண்ணிலடங்கா அருட்கொடைகளை வழங்கி இருக்கின்றான். அவற்றுள் உணவு, தண்ணீர், மின்சாரம் போன்றவை அத்தியாவசியத் தேவைகளான அருட்கொடைகள் ஆகும். இவை இல்லாவிட்டால் மனித வாழ்வே நிலை குலைந்துவிடும்.

ஆனால், இவை இறைவன் தந்திருக்கும் இணையற்ற அருட்கொடைகள் என்ற எவ்வித சிந்தனையும் இன்றி இவற்றை வீணடிக்கும் மக்களை எங்கும் காணலாம்.

''என் வீட்டு மின்சாரம்... என் பணம்... நான் விலை கொடுத்து வாங்கும் உணவு... தண்ணீர்... ஆகவே, அவற்றை நான் எப்படி வேண்டுமானாலும் செலவு செய்வேன். இதில் வீணடித்தல் எங்கிருந்து வந்தது?'' என்று நாம் வாதிடலாம்.

ஆனால், காசு இருந்தும் இவை எதுவும் கிடைக்காமல் அல்லல்படும் மக்களை என்றாவது பார்த்து இருக்கின்றீர்களா? தண்ணீர் இன்றி கண்ணீருடன் மாட்டுச் சிறுநீரைக் குடித்து வாழும் மக்கள்... மின்சாரம் இல்லாமல் ஆதிவாசிகள் போன்று இருண்ட காலத்தில் வாழும் மக்கள்... உணவின்றி வீதியோரம் வீழ்ந்து கிடக்கும் மக்கள்... இவர்களில் எவரையாவது சந்தித்தது உண்டா?

நாம் வாழும் பூமியில்தான் இவர்களும் வாழ்கின்றார்கள் என்பதாவது ஞாபகம் இருக்கின்றதா?

திருமண வீடுகளில் வீண்விரயம் செய்யப்படும் உணவுகள்... பொது இடங்களிலும் பள்ளிவாசல்களிலும் அலட்சியமாக வீணடிக்கப்படும் தண்ணீர்... ஆளில்லா இடங்களில் ஓடும் மின்விசிறிகள்... ஒளிவீசும் மின்விளக்குகள்... இவையெல்லாம் நாம் வீண்டிக்கும் இறைவனின் அருட்கொடைகள். நாம் ஏன் இப்படி பொறுப்பு இல்லாமல் இருக்கின்றோம்?

மறுமையில் இது குறித்தும் நாம் நிச்சயமாக விசாரிக்கப்படுவோம் என்பது குறித்தாவது நாம் யோசித்து இருக்கின்றோமா? ஆம், அதில் எவ்வித ஐயமும் இல்லை. விசாரணை நடக்கத்தான் போகின்றது.

அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கின்றார்: ஒருநாள் நண்பகல் வேளை. அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தமது இல்லத்தில் இருந்து வெளியே வந்தார்கள். அதேவேளை அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) மற்றும் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) ஆகியோரும் வெளியே வருகின்றார்கள்.

''இந்நேரத்தில் ஏன் வெளியே வந்தீர்கள்?'' என்று இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவ்விருவரிடமும் வினவினார்கள். அதற்கு, ''பசியின் காரணமாக நாங்கள் வெளியே வந்தோம்'' என்று இருவரும் கூறினர்.

உடனே இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: ''என் உயிர் யார் கைவசம் இருக்கின்றதோ அந்த இறைவன் மீது ஆணை! நீங்கள் இருவரும் எதற்காக வெளியே வந்தீர்களோ, அதற்காகவே நானும் வெளியே வந்தேன்''.

மனிதருள் மாணிக்கங்கள் இம்மூவர் வீட்டிலும் சாப்பிடுவதற்கு எதுவும் இல்லை. இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் உன்னதத் தலைவர்களின் நிலையைப் பாருங்கள்.

''சரி, புறப்படுங்கள்'' என்று பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். அன்ஸாரித் தோழர் ஒருவரின் வீட்டுக்கு வருகை தந்தனர்.

அகிலத்திற்கோர் அருட்கொடை அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், அபூபக்ரும் (ரழியல்லாஹு அன்ஹு), உமர் (ரழியல்லாஹு அன்ஹு) ஆகியோர் தம் வீட்டுக்கு வருகை புரிந்ததைக் கண்ட

அந்த நபித்தோழர், மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார். ''எல்லாப் புகழும் இறைவனுக்கே! மிகச் சிறப்புமிக்க விருந்தினர்களைப் பெற்றவர் என்னைத் தவிர இன்று இந்த உலகில் வேறு யாரும் இருக்க முடியாது'' என்றார்.

உடனே ஒரு பேரீத்தம் பழக்குலையை அவர்களிடம் கொண்டுவந்து ''சாப்பிடுங்கள்'' என்றார். அக்குலையில் காய், பழம், கனிந்த பழம் ஆகிய அனைத்துவகை பேரீத்தம் பழமும் இருந்தன. பின்னர் ஓர் ஆட்டை அறுத்து விருந்து படைத்தார். அவர்கள் அந்த இறைச்சி, பேரீத்தம் பழக்குலை ஆகியவற்றிலிருந்து சாப்பிட்டார்கள். வயிறு நிரம்ப தண்ணீரும் அருந்தியபின், அருமை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அருகில் இருந்த அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) மற்றும் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) ஆகியோரிடம் கூறினார்கள்:

''என் உயிர் எந்த இரட்சகனின் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது ஆணை! மறுமை நாளில் இந்த அருட்கொடைகள் குறித்து நீங்கள் வினவப்படத்தான் போகின்றீர்கள். பசியுடன் நீங்கள் உங்கள் இல்லங்களில் இருந்து வெளியே வந்தீர்கள். இப்போது இந்த அருட்கொடைகளைப் பெற்றவர்களாக நீங்கள் உங்கள் இல்லங்களுக்கே திரும்புகின்றீர்கள்.''

அப்போது உமர் (ரழியல்லாஹு அன்ஹு) வினவினார்: ''இறைத்தூதரே! சாப்பிட்ட பின் அசுத்தமாக வெளியேறும் இந்த பேரீத்தம் பழங்கள், உணவு, தண்ணீர் இவை குறித்துமா நாம் விசாரிக்கப்படுவோம்?''

அண்ணலார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: ''ஆம், இது குறித்தும் நாம் நிச்சயம் விசாரிக்கப்படுவோம்.'' (முஸ்லிம்)


### சுய விசாரணை தேவை

நாம் வீணடிக்கும் ஒவ்வொரு துளி தண்ணீருக்கும் ஒவ்வொரு பருக்கை உணவுக்கும் ஒவ்வொரு மின் திறனுக்கும் இறைவனிடம் பதில் கூறியே ஆக வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் இவற்றை நாம் ஒருபோதும் வீணடிக்க மாட்டோம்.

உலகின் ஒரு மூலையில் எங்கோ ஒருவர் பசியுடன் இருக்கின்றார் என்றால், மற்றொரு மூலையில் எங்கோ ஒருவர் அவருக்கான உணவை அபகரித்து வைத்துள்ளார் அல்லது வீணடிக்கின்றார் என்று பொருள்.

அவ்வாறுதான் நாம் வீணடிக்கும் தண்ணீரும் மின்சாரமும். வேறு யாருக்கோ உரிமையான இந்த அருட்கொடைகளை வீணடிக்கும் காலம் எல்லாம், இது வேறு யாருக்கோ சொந்தமானது என்ற உணர்வு வரவேண்டும்.

அத்துடன் நிச்சயம் நாளை மறுமையில் இறைவனின் சந்நிதியில் நிற்கும்போது இது குறித்தும் நாம் விசாரிக்கப்படுவோம். பதில் கூறித்தான் ஆகவேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வும் வேண்டும். ■




ஓர் அரிய சந்தர்ப்பம்

கண்ணில் வெள்ளை படர்தல் நோய்க்கான சத்திர சிகிச்சை

(Cataract Surgery)


விஷேட விலைக்கழிவுடன்
கட்டணம் ரூபா. 15,000/-

குவைத் வைத்தியசாலை புத்தளம்

தொடர்புகளுக்கு:
0324934469,
0718183833

மாதம் இருமுறை கத்னா செய்யப்படும் 2950.00 மட்டுமே

நவம்பர் மாத பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்



# புதிய நாஸிமிடமிருந்து...

நான் ஜம்இய்யாவின் நாஸிமாக தெரிவு செய்யப்பட்டமையானது என் இளமையை அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக அர்ப்பணிப்பதற்கு கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பாகக் கருதுகிறேன், அல்ஹம்துலில்லாஹ். மிகச் சிறந்த திட்டமிடல்களோடு அனைவரையும் இணைத்துக் கொண்டு இப்பணியை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்காக அறிவையும் ஆற்றலையும் ஆளுமையையும் பக்குவத்தையும் மனோ வலிமையையும் அல்லாஹ் எனக்கு வழங்க வேண்டும் என இரு கரமேந்திப் பிரார்த்திக்குமாறு பணிவாய் வேண்டிக் கொள்கிறேன்.

ஜம்இய்யா தனது இலக்கு நோக்கிய பாதையில் 35 ஆவது ஆண்டையும் வெற்றிகரமாக நிறைவு செய்திருக்கின்றது, அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ்வின் அருட்கொண்டு நாம் இப்பயணத்தில் பல மைற்கற்களை எட்டிப் பிடித்திருக்கின்றோம்; சாதனைகளை நிகழ்த்தியிருக்கின்றோம். மிகப் பெரும் வளமாகவும் ஆக்க சக்தியாகவும் இருக்கின்ற இளைஞர் சமூகத்தை வழிநடத்தியுள்ளோம். காலத்திற்கு காலம் மாறி மாறி வருகின்ற வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு ஏற்ற வகையில் பல்லாயிரம் இளைஞர்களின் வாழ்க்கைப் போக்கில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

இந்த வகையில் பெரும் ஆக்கப் பணியில் அல்லாஹ்வின் திருப்தியை நாடி உளத்தூய்மையுடன் ஆணிவேர்களாக இருந்த எமது முன்னாள் நாஸிம்கள், பொதுச் செயலாளர்கள், மத்திய சபை உறுப்பினர்கள், ருகூன் அங்கத்தவர்கள், இணை அங்கத்தவர்கள், ஊழியர்கள் மற்றும் ஆதரவாளர்கள், அபிமானிகள், நலன் விரும்பிகள், எம்மை அங்கீகரித்தவர்கள் என அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக! அவர்கள் எமது பணிக்கு தொடர்ந்தும் பங்களிப்புச் செய்கின்ற பாக்கியத்தையும் அல்லாஹ் வழங்குவானாக!

**ஜம்இய்யாவின் உறவுகளே...!**

கடந்த சில வருடங்களாக நாட்டை அச்சுறுத்திக் கொண்டிருந்த இனவாத, மதவாத கடும்போக்காளர்களின் நச்சுக்கள் தணிந்து நாடு எதிர்பாராத பல முக்கிய அரசியல் மாற்றங்களை கடந்து சென்று கொண்டிருக்கும் பரபரப்பானதொரு சூழ்நிலையில், குறிப்பாக முஸ்லிம் சமூகத்தி னதும் பொதுவாக நம் நாட்டிலும் அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு சான்று பகர்கின்ற, அதனைப் பாதுகாக்கின்ற, அதன்பால் அழைக்கின்ற அமானிதத்தை சுமக்கும் வாய்ப்பை அல்லாஹ் எமக்கு வழங்கியிருக்கின்றான்.

இலஞ்சம், மோசடி, ஏமாற்று, இனவாதம் இல்லாத நீதி, நேர்மை, நம்பிக்கை, சகவாழ்வு, இன ஐக்கியம் என்பவற்றின் அடிப்படையிலான நல்லாட்சி குறித்து எல்லா மட்டங்களிலும் பரவலாகப் பேசப்படுகின்ற அதனை நோக்கி இணக்கப்பாட்டுடன் நகர்வதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்ற ஒரு காலம் கனிந்திருக்கிறது.


எனவே, மலர்ந்திருக்கும் இச்சாதக சூழ்நிலையில் இஸ்லாத்தை மற்றவர்களுக்கு சொல்வதற்கும், முன்மாதிரி முஸ்லிம்களாக வாழ்ந்து காட்டுவதற்கும் இஸ்லாமியப் பணியை சிறப்பாக முன்னெடுப்பதற்குமான சந்தர்ப்பங்கள் நிறையவே உருவாகி இருக்கின்றன. இவ்வகையானதொரு சந்தர்ப்பத்தில் கிடைத்திருக்கும் இவ்வாய்ப்பை கனகச்சிதமாகப் பயன்படுத்திக் கொள்ள பயிற்றுவிக்கப்பட்ட முஸ்லிம் இளைஞர்களும் இஸ்லாமிய ஊழியர்களும் அதிகம் தேவைப்படுகின்றார்கள். முன்மாதிரிமிக்க ஆளுமைகள், முன்மாதிரிமிக்க இஸ்லாமிய இளைஞர்களுக்குமே இப்பணி சாத்தியமாகும் என்பது ஜம்இய்யதுத் தலபாவின் ஆழமான நம்பிக்கையாகும். மட்டுமன்றி, அத்தகைய ஆளுமைகளையே ஜம்இய்யா பிரசவித்துக் கொண்டிருக்கின்றது.


இறுதியாக சமூகம், நாடு என்ற எமது முப்பெரும் பகுதிகளினூடாக பாரிய செயற்திட்டங்களை முன்னெடுக்க இருக்கின்றோம். இன்றைய தஃவா இயக்கத்தில் தாக்கம் செலுத்துகின்ற அறிவும் ஆற்றலும் ஆளுமையும் தியாகமும் அர்ப்பண சிந்தையுமுள்ள மனிதர்களை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு ஜம்இய்யா புதுத் தெம்புடன் பயணிக்கவுள்ளது. இதற்காக சிந்தனா ரீதியிலும் மானசீக ரீதியிலும் எம்மைத் தயார்படுத்திக் கொள்வோம்!

அல்லாஹ் எமது முயற்சிகளை ஏற்று, அங்கீகரித்து அருள் புரிவானாக!

எம்.எல்.எம். தௌபீக்
நாஸிம்
ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம்
கொழும்பு- 09

# 35ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம்







ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் 35 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கொழும்பு அல்ஹிதாயா பாடசாலை கேட்போர்கூடத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் உயர் அங்கத்தவர்களாகிய ருகூன் மற்றும் இணை அங்கத்தவர்கள், கிளைப் பொறுப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் அமீர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்களுடனான கலந்துரையாடல், அஷ்ஷெய்க் நிசாம் (காசிமி) அவர்களது சொற்பொழிவு, இஸ்லாமியப் பாடல்கள் மற்றும் கவிதைகள், வருடாந்த அறிக்கை சமர்ப்பணம் மேலும் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தேசியத் தலைவர், மத்திய சபை உறுப்பினர்கள், பிராந்தியத் தலைவர்களுக்கான தெரிவு முதலான அம்சங்கள் இடம்பெற்றன.

ருகூன் அங்கத்தவர்களின் வாக்கெடுப்பினூடாக ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் 2016ஆம் ஆண்டுக்கான தேசியத் தலைவராக சகோதரர் எம்.எல்.எம். தௌபீக் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

*பின்வரும் ருகூன் அங்கத்தவர்கள் மத்திய சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:*

01. அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். ஆஸாத் (நளீமி)
02. சகோதரர் உமைர் நஸீப்
03. அஷ்ஷெய்க் எம்.என்.எம். ரிழ்வான் (இஸ்லாஹி)
04. சகோதரர் எல். ஸுஹ்ரி
05. சகோதரர் எம்.இஸட்.ஏ. ருடானி
06. சகோதரர் எம்.ஆர்.எம். ரிஹான்
07. அஷ்ஷெய்க் எஸ்.எல்.எம். ஹஸ்ஸான் (நளீமி)
08. சகோதரர் எம்.ஏ.ஏ. ஸல்மான்
09. அஷ்ஷெய்க் யாஸிர் இஸ்மாயில்
10. சகோதரர் எப். முஆஸ்
11. அஷ்ஷெய்க் ஸகி பவ்ஸ் (நளீமி)
12. சகோதரர் அஹமட்

**பிராந்திய நாஸிம்களாக பின்வரும் ருகூன் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:**

01. மேற்குப் பிராந்தியம் - அஷ்ஷெய்க் எம்.ஜீ.எம். அஸ்ஹர் (இஸ்லாஹி)
02. வடமேற்குப் பிராந்தியம் - அஷ்ஷெய்க் ஏ.ஆர்.எம். இர்பாக் (நளீமி)
03. சப்ரகமுவ பிராந்தியம் - சகோதரர் எம்.ஐ. ஷாஹித் அப்துல் ஹக்
04. மத்திய பிராந்தியம் - அஷ்ஷெய்க் எஸ்.எஸ்.எம். முஜாஹிர் (நளீமி)
06. வடமத்திய பிராந்தியம் - அஷ்ஷெய்க் எம்.ஜீ.எம். ஸபா (நளீமி)
07. கிழக்குப் பிராந்தியம் - எம்.யூ.எம். சனூஸ்

## புதிய நாஸிமை வரவேற்கும் நிகழ்வு

கடந்த மாதம் 10ஆம் திகதி ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் அமைப்பின் 21 ஆவது நாஸிமாக தெரிவுசெய்யப்பட்ட சகோதரர் எம்.எல்.எம். தௌபீக் மற்றும் அதன் முன்னாள் உதவிப் பொதுச்செயலாளர் சகோதரர் ருடானி ஆகியோரை வரவேற்கும் நிகழ்வை மாதம்பை இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி மாணவர்களும் வடமேல் பிராந்திய ஜம்இய்யாவும் இணைந்து மேற்கொண்டன.

இந்நிகழ்வுக்கு ஜம்இய்யாவின் முன்னாள் மத்திய சபை உறுப்பினர் அஷ்ஷெய்க் உஸைர் (இஸ்லாஹி) அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்வில், ஜம்இய்யாவின் முன்னாள் நாஸிம் அஷ்ஷெய்க் சுபியான் (நளீமி) மத்திய சபை உறுப்பினர்களான அஷ்ஷெய்க் ஆஸாத் ஸிராஸ் (நளீமி), அஷ்ஷெய்க் இர்பாக் (நளீமி), அஷ்ஷெய்க் ஸகி பவுஸ் (நளீமி), அஷ்ஷெய்க் அஸ்ஹர் (இஸ்லாஹி), அஷ்ஷெய்க் ஸபா (நளீமி), சகோதரர் உமைர் மற்றும் இஸ்லாஹிய்யா விரிவுரையாளர்கள், மாணவர்கள் வடமேல் பிராந்திய ஜம்இய்யா உறுப்பினர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கத்தார் வாழ் ஜம்இய்யா அங்கத்தவர்களின் ஒன்றுகூடல்

கடந்த மாதம் 09ஆம் திகதி கத்தார் வாழ் ஜம்இய்யா அங்கத்தவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வொன்று கத்தாரிலுள்ள Old Airport Park இல் மாலை 8 மணி முதல் 11மணி வரை நடைபெற்றது. இந்நிகழ்வில் சுமார் 26 பேர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஜம்இய்யாவின் நாஸிமுடனான தொலைபேசி உரையாடல், ஜம்இய்யா அனுபவப் பகிர்வு, "Mission & Me", "இஸ்லாம் வாழ நான் வாழ்வேன்" முதலான தலைப்புகள் கலந்துரையாடப்பட்டதுடன், Team Building Entertainment Activities உம் இடம்பெற்றன.

## AFAQ உடனான கலந்துரையாடல்

மாணவர்களிடம் வாழ்க்கைத் தேர்ச்சிகளையும் தலைமைத்துவப் பண்புகளையும் விருத்தி செய்யும் நோக்குடன் இளைஞர்களின் இன்றைய தேவையையும் கருத்திற் கொண்டு ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் கடந்த மாதம் 10 ஆம் திகதி கொழும்பில் LCC (Life Competency Club) தொடர்பான ஒரு கலந்துரையாடலை பாகிஸ்தானின் AFAQ (Association For Academic Quality) நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் சகோதரர் ஷாஹித் வர்ஸி அவர்களுடன் நடத்தியது.

இதில் ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் LCC செயற்திட்ட பொறுப்பாளர்கள் மற்றும் பொறியியலாளர் நவ்ஸர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் போது பல்வேறுபட்ட முக்கியமான கருத்துக்கள் பரிமாறப்பட்டதுடன், எதிர்கால நடவடிக்கைகளுக்கான பல முன்னோடித் திட்டங்களும் வகுக்கப்பட்டன.

# அல்குர்ஆனின் அழகிய உவமைகள்

**நல்வழியில் செலவிடுவதை ஒன்றுக்கு 700 ஆக முளைக்கச் செய்யும் தானியத்திற்கு ஒப்பிடுதல்:**

*"அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய செல்வங்களை செலவு செய்கின்றார்களே அத்தகையோரின் உதாரணம் ஒரு வித்தின் உதாரணத்தைப் போன்றிருக்கிறது. அது ஏழு கதிர்களை முளைப்பித்தது. ஒவ்வொரு கதிரிலும் நூறு வித்துக்கள் உள்ளன. இன்னும் அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு இதை மேலும் இரு மடங்காக்குகின்றான். அல்லாஹ் மிக்க விசாலமானவன் யாவற்றையும் அறிகின்றவன்."* (2: 261)

**மனோ இச்சையைப் பின்பற்றி இறை வசனங்களை மறுப்போரை நாக்கைத் தொங்கவிடும் நாய்க்கு ஒப்பிடுதல்:**

*"எவன் தன் மனோ இச்சையை பின்பற்றி விட்டானோ அவனுடைய உதாரணம் நாயின் உதாரணத்தைப் போன்றிருக்கிறது. அதை நீர் விரட்டினாலும் நாக்கைத் தொங்க விடுகிறது அல்லது அதை நீர் விட்டு விட்டாலும் நாக்கைத் தொங்க விடுகிறது. இதுவே நம் வசனங்களைப் பொய் யெனக் கூறும் கூட்டத்தாருக்கும் உதாரணமாகும். ஆகவே, அவர்கள் சிந்தித்து நல்லுணர்வு பெறும் பொருட்டு (இத்தகைய) வரலாறுகளைக் கூறுவீராக."* (7: 176)

**நேர்வழியில் இருப்பவனைப் பார்வையுள்ளவனுக்கும் வழிகெட்டவனை குருடனுக்கும் ஒப்பிடுதல்:**

*"குருடனும் பார்வையுடையவரும் சமமாக மாட்டார்கள். அவ்வாறே விசுவாசம் கொண்டு நற்கருமங்கள் செய்தார்களோ அவர்களும் தீயவர்களும் சமமாக மாட்டார்கள். வெகு சொற்பமாகவே இதனைக் கொண்டு நீங்கள் நல்லுணர்ச்சி பெறுகிறீர்கள்"* (40: 58)

**நேர்வழிக்கு ஒளியையும் வழிகேட்டுக்கு இருளையும் உதாரணமாகக் கூறல்:**

*"அவன் எத்தகையவன் என்றால் உங்களைப் பாவத்தின் இருள்களிலிருந்து நேர்வழியின் பிரகாசத்தின்பால் வெளிப்படுத்துவதற்காக அவன் தனது அடியார் மீது தெளிவான வசனங்களை இறக்கி வைக்கின்றான். மேலும், நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது இரக்கமுடையவன் மிக்க கிருபையுடையவன்."* (57: 9)

**ஆழப் பதிந்து கிளை விடும் மரத்தை நல்ல வாக்கியத்திற்கு உதாரணமாகக் கூறல்:**

*"நல்ல வார்த்தைக்கு அல்லாஹ் எவ்வாறு உவமை கூறுகின்றான் என்பதை நீர் கவனிக்கவில்லையா? அது ஒரு நல்ல மரத்தைப் போன்றதாகும். அதன் வேர் பூமியில் ஆழப் பதிந்திருக்கின்றது. அதன் கிளைகள் வானளாவ உயர்ந்து நிற்கின்றன."* (14: 24)



▶ பாத்திமா றிகாஸா- வவுனியா

## வினா- விடைப் போட்டி - 87

01. பச்சை வீட்டு வாயுக்கள் 3 தருக.

02. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் 10 வருடங்கள் பணியாளராக சேவை புரிந்த ஸஹாபி யார்?

03. நபியவர்களை எதிர்த்த மக்கா குறைஷியர் மூன்று தன்மை கொண்டோராக பிரித்து நோக்கப்படுகின்றனர். அவர்களைக் குறிப்பிடுக.

04. அண்மையில் இலங்கை வந்திருந்து சர்வதேச இஸ்லாமிய அறிஞர் யார்?

05. "ஜன்னதைன்" என்ற அரபுப் பதத்தின் பொருள் என்ன?

**உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி ஒக்டோபர் 22 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.**

**சிறுவர் பூங்கா**

**அல்ஹஸனாத்**
**77, தெமடகொட வீதி, கொழும்பு-09**



# மூன்று கடினமான கேள்விகள்

நீண்ட காலமாக இளைஞர் ஒருவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார். அவர் தாயகம் திரும்பியபோது அவர் பெற்றோரிடம் "ஒரு மார்க்க அறிஞரை காட்டுங்கள்; அவரிடம் எனக்கு மூன்று கேள்விகள் கேட்க வேண்டும்" என்றார். அவரது பெற்றோரும் அவரை ஒரு மார்க்க அறிஞரிடம் அழைத்துச் சென்றனர்.

**இளைஞர்:** நீங்கள் யார்? என்னுடைய கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியுமா? .

**மார்க்க அறிஞர்:** நான் அல்லாஹ்வின் அடிமை. இறைவன் நாடினால் உங்களுக்கு பதில் அளிக்க முடியும் என்று நம்புகிறேன்.

**இளைஞர்:** எனக்கு மூன்று கேள்விகள் இருகின்றன.

1. இறைவன் இருக்கின்றானா? அப்படி இருந்தால் அவனின் உருவத்தைக் காட்டுங்கள்.

2. கழா கத்ர் (விதி) என்றால் என்ன?

3. ஷைத்தான் தீயால் படைக்கப்பட்டவன் என்றால் இறுதியில் அவனை ஏன் தீயினாலான நரகத்தில் அல்லாஹ் போடுகிறான். அது அவனுக்கு வலிக்கப் போவது இல்லை; ஏனென்றால் நரகமும் ஷைத்தானும் தீயினால் படைக்கப்பட்டுள்ளன. அல்லாஹ் இதைக்கூட யோசிக்கவில்லையா?

உடனே மார்க்க அறிஞர் அந்த இளைஞனின் கன்னத்தில் அறைந்தார்.

**இளைஞர்:** (வலியோடு) ஏன் என்மேல் கோபம் கொள்கிறீர்கள்?

**மார்க்க அறிஞர்:** நான் கோபம் கொள்ளவில்லை. உங்கள் கேள்விகளுக்கு பதில் கூறினேன்.

**இளைஞர்:** (வியப்போடு) என்ன சொல்கிறீர்கள்?

**மார்க்க அறிஞர்:** நான் உங்களை அடித்த பிறகு எவ்வாறு உணர்கிறீர்கள்?

**இளைஞர்:** எனக்கு வலிக்கிறது.

**மார்க்க அறிஞர்:** நீங்கள் வலியை நம்புகிறீர்களா?

**இளைஞர்:** ஆமாம்.

**மார்க்க அறிஞர்:** அப்படி என்றால், அதன் வடிவத்தை காட்டுங்கள்.

**இளைஞர்:** என்னால் முடியாது.

**மார்க்க அறிஞர்:** அதுதான் முதல் கேள்விக்கான பதில். இறைவனின் உருவத்தை பார்க்காமலேயே அவனை உணர முடியும். (மேலும் தொடர்ந்தார்)

நேற்று இரவு நான் உங்களை அடிப்பேன் என்று கனவு கண்டீர்களா?

**இளைஞர்:** இல்லை.

**மார்க்க அறிஞர்:** இன்று என்னிடம் அடி வாங்குவேன் என்று நினைத்தீர்களா?

**இளைஞர்:** இல்லை.

**மார்க்க அறிஞர்:** இதுதான் கழாகத்ர் (விதி). (மேலும் தொடர்ந்தார்) என் கை எதனால் செய்யப்பட்டது?

**இளைஞர்:** சதையால் செய்யப்பட்டது.

**மார்க்க அறிஞர்:** உங்கள் முகம்?

**இளைஞர்:** சதையால்தான்.

**மார்க்க அறிஞர்:** நான் அறைந்தது வலித்ததா?

**இளைஞர்:** ஆமாம்.

**மார்க்க அறிஞர்:** இதுதான் உங்கள் மூன்றாவது கேள்விக்கு பதில்.

ஷைத்தானும் நரகமும் தீயினால் படைக்கப்பட்டவையாக இருந்தாலும், இறைவன் நாடினால் அது ஷைத்தானுக்கு கடும் வேதனையை தரக் கூடியதாக அமையும்.

▶ **தொகுப்பு: அப்பாஸ் (இர்பானி)**
**கல்கமுவ**

## சிறுவர் பூங்கா

முதல் பரிசுக்குரியவர்:

**பஸ்ரா பாயிஸ்**

கொழும்பு - 12

### ஆறுதல் பரிசைப் பெறுவோர்

| | |
|---|---|
| 01. எம்.இஸட். ஆனிஷா சஹாமா | - கிண்ணியா - 03 |
| 02. மஃஸூர் பைனஸ் | - வெலம்பொட |
| 03. எம்.ஆர். நாதிர் நூரி | - திஹாரி |
| 04. அனஸ் இப்னு ஐயூப் | - கண்டி |
| 05. ஷாகிரா நஸீம் | - பொலன்னறுவை |
| 06. நுஸ்ரா ஆப்தீன் | - துல்ஹிரிய |
| 07. ஏ.எல்.எப். லுஹ்னா | - மருதமுனை - 03 |
| 08. ஏ. அஜாஸா | - கற்பிட்டி |
| 09. எப்.எப். பஸ்லியா | - புத்தளம் |
| 10. மர்யம் புஹாரி | - கள்- எலிய |

**குறிப்பு:**

விடைகளை தபால் அட்டையில் (Post Card) மாத்திரம் எழுதி அனுப்பவும்.



# பெண்கள் முகத்திரை அணிவது தொடர்பான மார்க்கத்தின் நிலைப்பாடு என்ன?

அஷ்ஷெய்க் முஹம்மத் முபீர் (இஸ்லாஹி), (M.A).
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை. mufeer96@gmail.com

**கருத்து முரண்பாடான பிக்ஹ் விடயங்களை முன்வைக்கும்போது அதன் பல்வேறுபட்ட பகுதிகளையும் அலசி காலத்துக்கும் இடத்துக்கும் சூழலுக்கும் பொருத்தமானதையே முன்வைக்க வேண்டும். இல்லாவிட்டால் இஸ்லாத்தை, இஸ்லாத்தை முன்வைப்பவர்களை பொதுமக்கள் எரிச்சலோடு பார்க்க ஆரம்பித்து விடுவார்கள்.**

**கேள்வி: பெண்கள் முகத்திரை அணிவது தொடர்பாக இரண்டு முரண்பட்ட விளக் கங்களை செவிமடுத்தேன். ஒன்று பெண்கள் முகத்தை கட்டாயம் மறைக்க வேண்டும். இரண்டாவது, முகத்தை மூடாமல் திறப்பதுதான் மார்க்கத்தின் நிலைப்பாடு. இரண்டு கருத்துக்களுக்கும் ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டன. இப்பொழுது அவற்றில் எது சரியானது என்ற குழப்பத்தில் இருக்கின்றேன். இது பற்றிய சரியானதொரு தெளிவைத் தர முடியுமா?**

*பதில்:* பெண்கள் முகத்தை மறைப்பது தொர்டர்பாக புகஹாக்களிடம் கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தரப்பினரும் தங்களுடைய வாதத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆதாரங்களை அல்குர்ஆன், ஹதீஸிலிருந்து முன்வைக்கின்றனர். ஒவ்வொரு தரப்பினருடைய ஆதாரங்களை மட்டும் தனியாகப் பார்க்கின்றபோது அதுதான் சரியானது போன்று தோன்றும். கருத்து முரண்பாடான, பிக்ஹ் ரீதியான விடயங்களை கையாளும்போது ஒரு தரப்பினருடைய கருத்தினையும் அதற்கான ஆதாரங்களையும் மட்டும் முன்வைப்பதானது நடுநிலையற்ற தன்மையாகும். இப்போக்கு இஸ்லாமிய சமூகத்தில் இணக்கப்பாட்டை விட முரண்பாட்டைத் தோற்றுவிக்கும். இப்போக்குத்தான் துரதிஷ்டவசமாக இன்று எங்களுடைய சமூகத்திலும் காணப்படுகின்றது. அதில் ஒன்றைத்தான் நீங்கள் கேள்வியாகவும் கேட்டிருக்கின்றீர்கள்.

கருத்து முரண்பாடான பிக்ஹ் விடயங்களை முன்வைக்கும்போது அதன் பல்வேறுபட்ட பகுதிகளையும் அலசி காலத்துக்கும் இடத்துக்கும் சூழலுக்கும் பொருத்தமானதையே முன்வைக்க வேண்டும். இல்லாவிட்டால் இஸ்லாத்தை, இஸ்லாத்தை முன்வைப்பவர்களை பொதுமக்கள் எரிச்சலோடு பார்க்க ஆரம்பித்து விடுவார்கள்.

இதனை தெளிவுபடுத்துவதற்கு நடைமுறை சார்ந்த ஓர் உதாரணத்தை கூறுவது பொருத்தமானதாக இருக்கும். கடந்த வருட ஆரம்பத்தில் இவ்வுலகை விட்டுப் பிரிந்த மிகப் பெரிய இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவர்தான் ஈராக் நாட்டைச் சார்ந்த அப்துல் கரீம் ஸைதானி அவர்கள். அவர் நீண்ட காலமாக யெமன் நாட்டில் இருந்தார். ஒருமுறை அவரிடம் பெண்கள் முகத்தை மறைப்பது தொடர்பாக பத்வா கேட்கப்பட்டபோது பெண்கள் கட்டாயமாக முகத்தை மறைப்பது வேண்டும் என்று கூறினார். இதனை யெமன் நாட்டு மக்கள் திருப்தியோடு ஏற்றுக் கொண்டார்கள். இமாம் ஸைதானி அவர்கள் மற்றுமொரு சந்தர்ப்பத்தில் எகிப்து நாட்டுக்குச் சென்றிருந்தபோது அங்கு பெண்கள் முகத்தை மூடுவது தொடர்பாக கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பெண்கள் முகத்தை மறைப்பது முபாஹானது (விரும்பத்தக்கது) என்று பத்வா வழங்கினார். அதனை எகிப்து மக்கள் திருப்தியுடன் ஏற்றுக் கொண்டார்கள்.

இமாம் அவர்கள் ஒரே விடயத்தில் நேரெதிரான இரண்டு பத்வாக்களை முன்வைத்ததை அவதானித்த ஒருவர் “யெமன் நாட்டில் பெண்கள் முகத்தை மூடுவது கடமை, கட்டாயம் என்றும் எகிப்தில் விரும்பத்தக்கது, விரும்பினால் மறைக்கலாம்; இல்லாவிட்டால் மறைக்காது விடலாம் எனவும் முன்னுக்குப் பின் முரணாக பத்வா வழங்குகிறீர்களே!” என கேட்கப் பட்டபோது அவர் இவ்வாறு பதில் கூறினார்:

யெமன் நாட்டில் இருக்கின்ற வழமை, மரபு பெரும்பாலான பெண்கள் முகத்தை மறைப்பதாகும். அங்கு ஒரு பெண் முகத்தை திறப்பது மிகவும் அரிது. இப்படியான ஓரிடத்தில் முகத்தை மறைப்பது விரும்பத்தக்கது என்று பத்வா வழங்கியிருந்தால் அது அங்கிருக்கின்ற இஸ்லாம் கூறுகின்ற நல்லதொரு மரபை, வழமையை

உடைத்து விடுவதாக அமைந்து விடும். அதே போன்று எகிப்தில் உள்ள வழமை யெமனில் உள்ள வழமைக்கு முற்றிலும் மாறுபட்டது. அங்கு பெண்கள் முகத்தை மாத்திரமல்ல தலை, கால், கைகள் என்பவற்றைக்கூட திறந்த நிலையிலேயே இருப்பார்கள். இத்தகைய சூழ்நிலையில் பெண்கள் முகத்தை மறைப்பது கட்டாயம் (வாஜிப்) என்று கூறினால் அதற்கு எந்தவொரு மதிப்பும் இருக்காது. அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள்; மட்டுமல்லாமல் அதனை ஏளனமாகப் பார்ப்பார்கள். ஏனென்றால், அவர்கள் முகத்தை மறைப்பவதற்கு முன்பு உடலில் கட்டாயம் மறைக்க வேண்டியவற்றை மறைக்காமல் இருக்கின்றார்கள். நபிலான விடயங்களை செய்வது எப்படிப் போனாலும் கடமைகளிலேயே அசட்டையாக இருக்கிறார்கள். எனவே, இங்கு பெண்கள் முகத்தை மறைப்பது முபாஹானது; விரும்பியவர்கள் மறைக்கலாம்; இல்லாவிடின் மறைக்காது விடலாம் என்று பத்வா வழங்குவதுதான் பொருத்தமானது என பதிலளித்தார்கள்.

எனவே, பத்வா என்பது கால, இட, சூழலுக்கு ஏற்ப மாறுபடக்கூடியது. நூல்களில் இருப்பவற்றை அச்சொட்டாக அப்படியே நடைமுறைக்கு கொண்டுவந்து விடவும் முடியாது. எமது நாட்டில், எமது சமூகத்தில் கடமையான (வாஜிபான) விடயங்களிலே அறிவில்லாமலும் தெளிவில்லாமலும் பராமுகமாக இருக்கின்றபோது இது போன்ற கருத்து முரண்பாடான விடயங்களில் ஒரு பக்கத்தை மாத்திரம் முதன்மைப்படுத்திப் பேசுவது ஆரோக்கியமான நிலைமை அல்ல. ■

**"முழுமையான ஜனநாயக செயன்முறைக்கு மேற்குலகு முன்மாதிரி எனக் கூற முடியாது. ஜனநாயகம் என்பது அது உள்ளடக்கியுள்ள அர்த்தங்கள் உண்மையாக பாதுகாக்கப்படு வதாகும். நாம் ஜனநாயக விழுமியங்களைப் பற்றிப் பேச வேண்டுமே தவிர, அதற்கு மேற்குலகினை உதாரணமாகவோ அல்லது மாதிரியாகவோ வர்ணம் தீட்ட வேண்டிய அவசியமில்லை."**

**-பேராசிரியர் தாரிக் ரமழான்-**



30%
விலைக் கழிவுடன்
ஒக்டோபர் மாதத்தில் மட்டும்.

பெறுமதிமிக்க இஸ்லாமிய நூல்கள்
ஓர் அரிய சந்தர்ப்பம்
பிரதிகளுக்கு முந்துங்கள்



விலை: 747/=



விலை: 640/=




விலை: 200/=



விலை: 351/=



விலை: 1400/=



விலை: 400/=

கையடக்கத் தொலைபேசியில் புதிய நூல்களின் விபரம் உடனுக்குடன் உங்களை வந்தடைய F <Space> ibhbooks என Type செய்து 40404 க்கு அனுப்புங்கள்.

இஸ்லாமிக் B்புக் ஹவுஸ்
77, Dematagoda Road, Colombo-09 T.P. 011 2684851, Fax: 011 2688102

*அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மத் (நளீமி)*
விரிவுரையாளர், ஜாமிஆ ஆயிஷா ஸித்தீக்கா

# பிர்தவ்ஸின் அனந்தரக்காரர்கள்

நிச்சயமாக முஃமின்கள் வெற்றி பெற்றார்கள் என ஆரம்பிக்கும் ஸூறா முஃமினூனின் ஆரம்ப வசனங்கள் (11 வரை) வெற்றிக்குரிய விசுவாசிகளின் பண்புகள் சிலவற்றை விவரித்து அவர்கள்தான் பிர்தவ்ஸ் எனும் உயர்ந்த சுவனத்தின் வாரிசுகள்; என்றென்றும் அதிலே தங்கியிருப்பார்கள் எனக் கூறி முடிக்கின்றன. நாம் மனனம் செய்து உள்ளத்தில் பதித்து முஹாஸபா மூலம் உரசிப் பார்க்க வேண்டிய பண்புகள் இவை.

தொழுகையாளிகள் பற்றி இங்கு இரு தடவைகள் பிரஸ்தாபிக்கப்படுவதோடு, தொழுகையில் அவர்கள் கவனமாகவும் உள்ளச்சத்தோடும் இருப்பார்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது. நாமும் ஐவேளை தொழுகிறோம் எனும் மனத் திருப்தியில் அதன் நிலை பற்றி பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. அல்குர்ஆன் அடிக்கடி நினைவூட்டும் இறை சிந்தனை, உள்ளச்சம், சிரத்தையும் கவனமும், கண்குளிர்ச்சி, நிம்மதி, உதவி தேடல் முதலான அடையாளங்களை நமது தொழுகையில் காண முடியுமாக உள்ளதா? என்பது பற்றி சிந்திக்கத் தவறி விடுகிறோம். ஓர் அடியான் தனது ரப்பை சந்திக்கும் மிக நெருக்கமான சந்தர்ப்பம் இந்த தொழுகை. ஏராளமானவர்கள் தொழுகையாளிகளாக இருந்தாலும் அவர்களுக்கான கூலிகள் வித்தியாசமானதாக அமையவிருக்கின்றன. தொழாதவருக்குக் கேடு, நாசம் காத்திருக்கின்றது. இன்னும் சிலரின் தொழுகைகள் முகத்திலே சுருட்டி எறியப்படவும் இருக்கின்றன. அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.

சமூக வாழ்வு குறித்த சில பண்புகள் இங்கு பேசப்படுகின்றன. சுவனத்தின் வாரிசுதாரர்கள் ஸகாத்தை கொடுத்து வருவார்கள். ஸகாத், ஸதகா என்பன பிறர் நலன் பேணும் விதத்தில் இறை கூலிகளை எதிர்பார்த்து இறைவன் அளித்தவற்றிலிருந்து ஒரு விசுவாசி உவந்தளிக்கும் தர்மமாகும். தனக்கு அல்லாஹ் தந்த அருள்களை சமூகத்தின் அடுத்த மனிதர்களோடு அவன் பகிர்ந்து கொள்கிறான்.



சமூக நலனுடன் தொடர்புபட்டு வரும் மற்றுமொரு பண்பு அமானத்தைப் பேணுவதும் வாக்குறுதிகளைக் நிறைவேற்றுவதுமாகும். எமது மார்க்கம், குடும்பம் மற்றும் பிற மனிதர்கள் தொடர்பில் நாம் ஒவ்வொருவரும் அமானிதத்தை-பொறுப்புக்களைச் சுமந்திருக்கிறோம். நாம் பலருக்குப் பல வாக்குறுதிகளைக் கொடுக்கிறோம். கொடுக்கல்-வாங்கலுடன் தொடர்புபட்ட உடன்படிக்கைகளைச்செய்து கொள்கிறோம். இவற்றை அசிரத்தை, பொடுபோக்கு எதுவுமின்றி மிகக் கவனமாகப் பேணி வருவது சுவன வாசிகளை அலங்கரிக்கும் முக்கிய பண்புகளாகும்.

ஒரு முஃமின் தனது தனிப்பட்ட வாழ்வைக் காப்பாற்றிக் கொள்ளும் இரு விடயங்கள் இங்கு விளக்கப்படுகின்றன. அவன் தேவையற்ற அம்சங்களில் இருந்து தூரமாகி இருப்பான்.

தனக்கு அல்லது பிறருக்குப் பயனளிக்காத தேவையற்ற விடயங்களில் இருந்து ஒதுங்கியிருப்பது ஒரு விசுவாசியின் பண்பு. இவை தேவையற்ற பேச்சாக, செயலாக, நட்பாக, பயணமாக, பொழுது போக்காக இருக்கலாம். நமது வாழ்வில் கழியும் ஒவ்வொரு கணப்பொழுதும் விசாரணைக்கு உட்படுத்தப்பட இருப்பதனால் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். பலபோது இவை பாவமாக அமைகின்றன.

சுவனத்தை ஆசிக்கும் ஒரு விசுவாசி தனது கற்பைப் பாதுகாப்பான்; ஹலாலான விதத்தில் அன்றி ஆசைகளைத் தீர்த்துக் கொள்ள மாட்டான். நாம் வாழும் திறந்த சமூக அமைப்பில் ஊடகங்களின் ஆக்கிரமிப்பில் கண், காதுகள் ஊடாக விபசாரத்தை நோக்கிய நகர்வு அதிகமாக இடம்பெறுவதைக் காண்கிறோம். கண்கள் பார்வை ஊடாகவும், காதுகள் செவிமடுப்பதன் ஊடாகவும் விபசாரத்தில் பங்கேற்கின்றன எனும் நீண்ட நபிமொழியை நாம் மறந்து விடக்கூடாது.

ஸூறா முஃமினூனின் மேற்படி வசனங்கள் சுவனத்தைக் ஆசிக்கும் ஒரு முஃமினின் வாழ்வு திட்டமிட்ட அடிப்படையில், ஒவ்வொரு நிமிடமும் பயனுள்ளதாக அமைய வேண்டும் என்பதை உணர்த்தி நிற்கின்றன. எனவே, சுவன ஆசையை செயல்கள் ஊடாக நிரூபிப்போம். வல்லவன் அருள் புரிவானாக! ■

www.alhasanath.lk



## நபிகளாரின் ஸீராவிலிருந்து...

அரபு மூலம்: அம்ர் காலித்
தமிழில்: அஷ்கர் அரூஸ் (நளீமி)

தொடர்- 33

# சத்தியம் அசத்தியத்தை மிகைத்த கதை

இருபத்து மூன்று வருட ஆயுளைக் கொண்ட வரலாறு அசத்தியத்தை மிகைத்து விட்டது. அது பூமியில் சீர்திருத்தப் பணியின் மூலம் தூதுத்துவம் வெற்றி பெற்ற வரலாறு. அது முழு மனித சமூகத்துக்குமுரிய முன்மாதிரி வரலாறு. அதில் மனித அனுபவமும் வஹியும் கலந்திருந்தது. வஹி வழிகாட்டலை முன்வைத்தது. அதுவே அல்குர்ஆன். அதில் அற்புதங்கள் நிறைந்திருந்தன. அந்த அற்புதங்கள் நிகழ்வுகளை மாற்றியமைக்கவில்லை. எனினும், அவை கொள்கையில் நிலைத்து நிற்க துணை புரிந்தன. அத்தோடு எல்லாக் காலத்துக்கும் பொருத்தமான மனித அனுபவமும் அதில் இருக்கின்றது.

*"நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடத்தில் அழகிய முன்மாதிரி இருக்கின்றது." (அல் அஹ்ஸாப்: 21)*

**ஈமானின்றி எழுச்சி கிடையாது**

01. அல்லாஹ்வின் தூதரை நேசிப்பதாயின் அவரது வரலாற்றைக் கற்க வேண்டும்.

02. புவியில் சீர்த்திருத்தப் பணியை மேற்கொள்வதன் மூலம் தூதுத்துவத்தின் சொந்தக்காரனாகலாம்.

ஹிஜ்ரி 10 ஆம் ஆண்டு நபியவர்களுக்கு 63 வயது. அன்னார் மரணிப்பதற்கு மூன்று மாதங்களும் மூன்று நாட்களுக்கும் முன்னர் பிரியாவிடை ஹஜ்ஜை நிறைவேற்றி அரபா வெளியில் நின்று முஸ்லிம் சமூகத்துக்காக இறுதி உபதேசத்தை வழங்கினார்கள்:

"மனிதர்களே! செவி தாழ்த்துங்கள்... புரிந்து கொள்ளுங்கள்... ஏனெனில், இந்த ஆண்டுக்கு பின்னர் நான் உங்களை மீண்டும் சந்திப்பேனா என எனக்குத் தெரியாது. இது எந்த மாதம் என உங்களுக்குத் தெரியுமா? இது எந்த நாள் என உங்களுக்குத் தெரியுமா? இது எந்த நகரம் என உங்களுக்குத் தெரியுமா?"

அதற்கு ஸஹாபாக்கள், "இது புனித மாதம்; இது புனித நகரம்; இது புனித நாள்" என பதிலளித்தார்கள்.

நபியவர்கள் தொடர்ந்தும் உபதேசித்தார்கள்:

"நிச்சயமாக நீங்கள் இந்த மாதத்தையும் இந்த நாளையும் இந்த நகரையும் புனிதமாகக் கருதுவதைப் போல் உங்களில் ஒருவர் மற்றவரின் உயிரையும் பொருளையும் மானத்தையும் புனிதமாகக் கருதுங்கள். ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அடுத்த முஸ்லிமின் உயிர், பொருள், மானம் அனைத்தும் ஹராம் ஆகும்.

> "மனிதர்களே! அஹ்லுல் பைத்களுடன் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். எனது விவகாரத்தில் எனது ஸஹாபாக்களைப் பாதுகாருங்கள். நாளை மறுமையில் உங்களில் எவரும் எனது ஸஹாபாக்களில் ஒருவருக்கும் அநீதியிழைத்ததாக எனக்கு செய்தி கிட்டக் கூடாது. மனிதர்களே! முஸ்லிம்களை விட்டும் உமது நாவுகளைப் பேணிக் கொள்ளுங்கள்...

மனிதர்களே! பெண்களின் விவகாரத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அவர்கள் உங்களிடமுள்ள கைதிகளைப் போன்றவர்கள். நீங்கள் அமானிதமாகவே அவர்களைப் பெற்றுள்ளீர்கள். அல்லாஹ்வின் பெயரைக் கூறியே அவர்களை மனைவியர்களாக்கிக் கொண்டுள்ளீர்கள். எனவே, பெண்களின் விவகாரத்தில் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்.

மனிதர்களே! செவி தாழ்த்துங்கள்; புரிந்து கொள்ளுங்கள்; முஸ்லிம்கள் சகோதரர்களாவார்கள்... முஸ்லிம்கள் சகோதரர்களாவார்கள்..." எனக் கூறிக் கொண்டே இருந்தார்கள்.

"மனிதர்களே! மறுமை நாளில் அதிக எண்ணிக்கை கொண்ட சமூகமாக உங்களைக் காண்பேன். நீங்கள் எனது முகத்தை இருளடையச் செய்துவிட வேண்டாம்...

மனிதர்களே! நான் மறுமை நாளில் வருவேன். உங்களது நரக விடுதலைக்காக அல்லாஹ்விடம் மன்றாடுவேன்.

அப்போது அல்லாஹ் கூறுவான். 'முஹம்மதே! அவர்களை விடுங்கள். உங்களுக்குப் பின்னால் அவர்கள் செய்தவற்றை நீங்கள் அறிய மாட்டீர்கள்.' அப்போது நான் கூறுவேன் 'இவர்களுக்கு அழிவும் நாசமும் உண்டாகட்டும்!'

மனிதர்களே! மறுமை நாளில் எனது இரட்சகனின் முன்னிலையில் எனது பொறுப்பை நான் எத்திவைத்திருந் தேனா? என உங்களிடம் வினவப்படும். நீங்கள் எனக்கு சான்று பகர்வீர்களா?" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வினவினார்கள். எல்லா தோழர்களும் ஒருமித்த குரலில் அழுகையுடன் "நீங்கள் பொறுப்பை எத்திவைத்து விட்டீர்கள்" எனச் சான்று பகர்ந்தார்கள்.

அரபா தினத்தின் இறுதித் தறுவாயில் அல்லாஹ் பின்வரும் வசனத்தை இறக்கினான்.

"இன்றைய தினம் உங்களுக்கு உமது மார்க்கத்தை பூரணப்படுத்தி விட்டேன். மேலும் உங்களுக்கு இஸ்லாத்தை மார்க்கமாக ஏற்று விட்டேன்." *(அல்மாஇதா: 03)*

இந்த வசனத்தை செவியேற்ற உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், நபியவர்களின் பணி முற்றுப் பெற்று விட்டது; அன்னார் தனது இரட்சகனை சந்திக்கத் தயாராகின்றார் என்ற இரங்கல் செய்தியையே இவ்வசனம் குறிப்பிடுவதாகக் கூறி அழுதார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹஜ்ஜை முடித்துக் கொண்டு மதீனாவுக்கு திரும்பினார்கள். மஸ்ஜிதுந் நபவியிலே மக்களை ஒன்றிணைத்து உபதேசித்தார்கள். "நான் அபூபக்ர், உமர், உஸ்மான், அலி, அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப், ஸஃத் (ரழியல்லாஹு அன்ஹும்) போன்றோரை திருப்தி கொண்டுள்ளேன்" என்றார்கள். பின்னர் சுவனத்துக்கு நன்மாராயம் சொல்லப்பட்ட பத்து ஸஹாபாக்களையும் திருப்தி கொண்டிருப்பதாகவும் அன்ஸார்கள், முஹாஜிர்களையும் திருப்தி கொண்டிருப்பதாகவும் கூறினார்கள்.

"மனிதர்களே! அஹ்லுல் பைத்களுடன் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். எனது விவகாரத்தில் எனது ஸஹாபாக்களைப் பாதுகாருங்கள். நாளை மறுமையில் உங்களில் எவரும் எனது ஸஹாபாக்களில் ஒருவருக்கும் அநீதியிழைத்ததாக எனக்கு செய்தி கிட்டக் கூடாது. மனிதர்களே! முஸ்லிம்களை விட்டும் உமது நாவுகளைப் பேணிக் கொள்ளுங்கள்...

மறுமை நாளில் கொண்டு வரப்படுகின்ற ஒவ்வொரு சமூகமும் எனக்கு காட்டப்பட்டது. நபியையும் ஒரு மனிதரையும் கண்டேன். நபியையும் இரண்டு மனிதர்களையும் கண்டேன். நபியையும் அவருடன் வரும் ஒரு கூட்டத்தையும் கண்டேன். பிறகு 'எனது சமூகம்... எனது சமூகம்' எனக் கூறினேன். 'இல்லை, இது மூஸாவும் அவரது சமூகமும்' எனக் கூறப்பட்டது. பிறகு இன்னொரு பக்கத்தைப் பார்க்குமாறு கட்டளையிடப்பட்டேன். அங்கே பெரும் திரளான மக்கள் கூட்டம் இருந்தனர். 'இதுதான் எனது சமூகம்' எனக் கூறப்பட்டது.

அவர்களில் 700,000 பேர் விசாரணையின்றி சுவனம் நுழைவார்கள். நான் இன்னும் அதிகரித்துத் தருமாறு எனது இரட்சகனிடம் கேட்டேன். அப்போது எனக்கு ஒவ்வொரு 1000க் கும் 700000 ஐ அதிகரித்துத் தந்தான்...

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மரணிப்பதற்கு 15 நாட்களுக்கு முன் ஹஜ்ஜை முடித்துக் கொண்டு களைப்படைந்த நிலையில் மதீனாவுக்கு மீண்டு வந்தார்கள். அமர்ந்தவாறு ஸுன்னத்தான தொழுகைகளை நிறைவேற்றினார்கள். உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பார்த்து "அல்லாஹ்வின் தூதரே ! உங்களது முடிகள் நரைத்து விட்டனவே!" என ஹாஷ்யமாகக் கூறினார்கள். "ஆம் ஸூரா ஹூத் எனது தலைமுடிகளை நரைக்கச் செய்து விட்டது" எனக் கூறினார்கள். "ஏன்?" என வினவியபோது நபியவர்கள் பின்வரும் வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

"நபியே! நீரும் உம்மோடு திருந்தி வாழ்பவர்களும் ஏவப்பட்டதன் படி நிலைத்து நில்லுங்கள். அத்துமீறிவிட வேண்டாம். நிச்சயமாக அவன் நீங்கள் செய்பவற்றை அவதானித்துக் கொண்டிருக்கின்றான்." *(ஸூரா ஹூத்: 112)*

ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இறுதி ஹஜ்ஜுக்கு முன்னர் ஒவ்வொரு வருடமும் ஒரு முறை அல்குர்ஆனை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு ஓதிக் காட்டினார்கள். எனினும், இறுதி வருடத்தில் அல்குர்ஆனை இரு முறை ஓதிக் காட்டினார்கள். மேலும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பாத்திமா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு பின்வருமாறு உபதேசித்தார்கள்:

"பாத்திமா! என்னுடைய ஆயுள் முடிவடையப் போகின்றது. நீ பொறுமையாக இரு! எந்தவொரு முஸ்லிம் பெண்ணும் உன்னை விட அதிகம் சோதனைக் குட்படுத்தப்பட மாட்டாள். உன்னுடைய சோதனையின் அளவுக்கேற்ப பொறுமையையும் கடைப்பிடித்துக் கொள்வீராக!"

மேலும், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மரணிப்பதற்கு 13 நாட்களுக்கு முன்னர் உஹுத் போர்க் களத்தில் ஷஹீதானவர்களை அடக்கம் செய்த இடத்துக்கு சென்று வந்தார்கள். அங்கிருந்து திரும்பும் வழியில் அபூ முவைஹபா எனும் ஸஹாபியிடம் இவ்வாறு கூறினார்கள்:

(56ஆம் பக்கம் பார்க்க)

முஸ்லிம்கள் மறைமுகமான முறையில் இஸ்லாமிய அழைப்புப் பணி செய்யாதிருந்தாலும், அவர்களது உளப்பாங்கும் செயற்பாடுகளும் எப்போதும் அழைப்பாளனுடையதைப் போல் இருந்திருப்பதே. இஸ்லாத்தைப் பரப்பும் நடவடிக்கைகள் அனைத்துக் காலங்களிலும் தேக்கமுறாமல் தொடர்ந்து நடைபெற்றமைக்கான காரணம் இது தான்.

ஹிந்தி மூலம்: மௌலானா வஹீதுத்தீன் கான்
தமிழில்: ஸீயெம்மே அமீன்

வெற்றிக்கான வழிமுறைகள் - 13

# அழைப்புப் பணியும் முறையான செயற்பாடுகளும்

ஒரு கடைக்காரன் தனது கடையைத் திறந்த பிறகு அது பற்றி அனைவருக்கும் அறியக் கொடுக்கிறான். பத்திரிகை, வானொலி, டீ.வி. மற்றும் ஏனைய பிரசார சாதனங்களைப் பயன்படுத்தி கடையைப் பற்றி மக்கள் மத்தியில் விளம்பரம் செய்ய முயற்சி செய்கிறான்.


இன்னுமொரு கடைக்காரன் தனது கடையைத் திறந்த பிறகு அதைப் பற்றி விளம்பரம் செய்வதில்லை. மாறாக, நம்பிக்கையான வியாபாரி போல் நடந்து கொள்கிறான். தனது கடையில் சிறந்த தரமான பொருட்களை வைத்துக் கொள்கிறான். மக்களிடம் இனிமையாக உரையாடுகிறான். கொடுக்கல்- வாங்கலில் நேர்மையாக நடந்து கொள்கிறான். முதலாவது கடைக்காரன் மகத்தான வெற்றி அடைவான் என்பதில் சந்தேகமில்லை. அவன் தன்னுடைய வியாபாரத்தை விரிவுபடுத்துவான். அதே நேரத்தில் இரண்டாவது கடைக்காரனும் தனது வியாபாரத்தை இலாபகரமாக நடத்திக் கொண்டு செல்வதில் வெற்றியடைவான். முதலாவது கடைக்காரன் கோடிகோடியாகச் சம்பாதிக்கும்போது, இரணடாவது கடைக்காரன் இலட்சக் கணக்கில் சம்பாதித்துக் கொள்வான். முதலாவது கடைக்காரனுக்கும் இரண்டாவது கடைக்காரனுக்கும் இடையிலான வித்தியாசம் அளவிலன்றி முறையிலல்ல.

இந்த உதாரணத்திலிருந்து இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் விவகாரங்களை விளங்கிக் கொள்ள முடியும். ஒன்றில் முஸ்லிம்கள் முழுமையான அர்த்தத்தில் மார்க்கத்துக்கு அழைக்கும் தாஇயாக இருக்க முடியும். அவர்கள் திட்டமிட்ட முறையில் மற்றவர்களுக்கு இஸ்லாத்தின் தூதை எத்திவைப்பவர்களாகவும் பூரணமான இஸ்லாமியப் பிரசாரகர்களாகவும் விளங்குவார்கள். முஸ்லிம்கள் இவ்வாறு நடந்து கொள்வார்களாயின், அது மிகவும் புகழுக்குரியதாக இருக்கும். இது அவர்களை இவ்வுலகிலும் மறு உலகிலும் மகத்தான வெகுமதிக்கு உரியவர்களாக ஆக்கிவிடும்.

இன்றேல், முஸ்லிம்கள் திட்டமிட்ட முறையிலும் மறைமுகமான வழியிலும் அழைப்புப் பணி செய்யாமல் இருக்கலாம். எனினும், அவர்கள் தமது தனிப்பட்ட வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் ஒழுங்காக நடந்து கொள்வார்கள். அவர்கள் பிற சமூகத்தவர்களை எதிரிகளாகக் கருதாமல், அழைப்புப் பணிக்கு உட்படுத்தக் கூடியவர்களாக கருத வேண்டும். அவர்கள் அல்லாஹ்வின் புறத்திலிருந்து மனிதர்கள் நேர்வழி பெறுவதை (ஹிதாயத்) விரும்புபவராக இருக்க வேண்டும். முஸ்லிம் அல்லாதவர்களுடனான தொடர்புகளின்போது, அவர்கள் இஸ்லாமிய கலாசாரத்தைப் பேணி நடப்பவர்களாக இருக்க வேண்டும். முஸ்லிம் அல்லாதவர்கள் பக்கத்தில் கொடுமையும் பிடிவாதமும் இருப்பதைக் கண்டால், அவற்றைச் சகித்துக் கொள்ள வேண்டும். முஸ்லிம் அல்லாதவர்களுக்கு மத்தியில் வெறுப்பையும் பிரிவினையையும் ஏற்படுத்தக் கூடிய செயல்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் மாற்றமான மனப்பாங்கைக் கைக்கொண்டாலும், அவர்கள் அல்லாஹ்வின் அருளுக்கும் வெகுமதிக்கும் தகுதியானவர்களாக ஆகிவிடுவார்கள்.

திட்டமிட்ட முறையிலும் ஒன்றிணைந்த முறையிலுமான பிரசாரப் பணி நபிகளாரின் பதின்மூன்று வருட கால மக்கா காலப் பிரிவில் நடைபெற்றதாக இஸ்லாமிய வரலாறு எடுத்துக் கூறுகிறது. எனினும், இஸ்லாம் எல்லாக் காலப் பகுதிகளிலும் வேகமாகப் பரவி வந்திருக்கிறது. இதற்குக் காரணம் முஸ்லிம்கள் மறைமுகமான முறையில் இஸ்லாமிய அழைப்புப் பணி செய்யாதிருந்தாலும், அவர்களது உளப்பாங்கும்செயற்பாடுகளும்எப்போதும் அழைப்பாளனுடையதைப் போல் இருந்திருப்பதே. இஸ்லாத்தைப் பரப்பும் நடவடிக்கைகள் அனைத்துக் காலங்களிலும் தேக்கமுறாமல் தொடர்ந்து நடைபெற்றமைக்கான காரணம் இது தான்.





# அளவான உணவு! அழகிய சூழல்!

ஸ்ஸனப் முனீர்
விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

உணவை வீணாக்காது சிக்கனமாகப் பயன்படுத்துவதால் உணவு வினைத்திறனாக பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக உங்கள் வீட்டில் பகலுணவு எஞ்சுகிறது எனில், அதை சூடாக்கி இரவுணவுக்கும் பயன்படுத்துவீர்களாயின் இரவுணவுக்காக பிரத்தியேகமாக உணவு தயாரிப்பது தவிர்க்கப்படுவதனால் ஒருவேளைக்கு போதுமான உணவை விரயம் செய்வதை தவிர்க்கிறீர்கள்.

இதேபோல் ஒவ்வொரு வீட்டிலும் உணவை விரயமாக்குவதை தவிர்த்தால் உலகில் உற்பத்தி செய்யத் தேவையான மொத்த உணவின் அளவைக் குறைக்கலாம் அல்லவா?

உலக மொத்த உணவுற்பத்தியைக் குறைப்பதற்கு என்ன அவசரம் வந்துவிட்டது? என நீங்கள் மூளையைக் குடைவது புரிகிறது. உலகில் உற்பத்தி செய்யப்படும் உணவின் அளவிற்கும் உங்களை சூழவுள்ள சுற்றாடலின் தூய்மைக்கும் நிறைய தொடர்புகள் உள்ளன.

- உலக மொத்த உணவுற்பத்திக்காக 70% நன்னீர் பயன்படுகிறது.
- 70% காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனுடன் சேர்த்து அக்காட்டில் வசிக்கும் அத்தனை உயிரினங்களும் வாழிடங்களை இழப்பதுடன் உயிரினங்களும் அழிக்கப்படுகின்றன.
- 30% பச்சை வீட்டு வாயுக்களின் ($Co_2$, $No_2$, $H_2s$) வெளியேற்றத்துக்கு உலக உணவு உற்பத்தி காரணமாக அமைகிறது.
- உணவு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் நிலத்தில் 25% உயிரினங்களின் வாழிடங்களாக இருந்தவை.

ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய ஒழுங்கமைப்பு (FAO) இன் தரவுப்படி, உலகில் வருடாந்தம் 1.3 பில்லியன் தொன் உணவு வீண்விரயம் செய்யப்படுகிறது. இந்த 1.3 பில்லியன் தொன் உணவில் எமது திருமண வீடுகளிலும் ஏனைய வைபவங்களிலும் எஞ்சி, வீசப்படும் மலையளவு உணவு முதல் வீடுகளில் வீணடிக்கப்படும் பீங்கான் அளவு உணவு வரை யாவும் உள்ளடங்குகிறது.

இவ்வாறு பாரியளவு நன்னீர், காடுகள், நிலம் ஆகிய வளங்கள் பயன்படுத்தப்பட்டே எங்கள் வீட்டு சாப்பாட்டு மேசைக்கு வரும் பாண் முதல் வாழைப்பழம் வரையான உணவுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பெருமளவு உணவுற்பத்தி காரணமாக உலகின் வளங்கள் வெகுவாக பயன்படுத்தப்படுகின்றன. இதனால் உயிரினங்களின் பல்வகைமை பாதிக்கப்படுகிறது. பச்சை வீட்டு வாயுக்களின் மிதமிஞ்சிய வெளியேற்றத்தால் புவி வெப்பமடைகிறது. இதனால் கடல் நீர் மட்டம் உயர்தல், காலநிலை மாற்றம், வரட்சி போன்ற பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இத்தனை பாதிப்புக்களை ஏற்படுத்தி, பெருமளவு வளங்கள் பயன்படுத்தப்பட்டு, உற்பத்தி செய்யப்படும் உணவுக்கு என்ன நடக்கிறது?

ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய ஒழுங்கமைப்பு (FAO) இன் தரவுப்படி, உலகில் வருடாந்தம் 1.3 பில்லியன் தொன் உணவு வீண்விரயம் செய்யப்படுகிறது. இந்த 1.3 பில்லியன் தொன் உணவில் எமது திருமண வீடுகளிலும் ஏனைய வைபவங்களிலும் எஞ்சி, வீசப்படும் மலையளவு உணவு

முதல் வீடுகளில் வீணடிக்கப்படும் பீங்கான் அளவு உணவு வரை யாவும் உள்ளடங்குகிறது.

வருடாந்தம் வீணடிக்கப்படும் மேற்குறிப்பிட்ட அளவு உணவினை உற்பத்தி செய்வதற்காக பெருமளவு வளங்கள் பயன்பட்டிருக்கும் அல்லவா? FAO இன் தரவுப்படி, இவ்வாறு வீணாக்கப்படும் அல்லது இழக்கப்படும் உணவை உற்பத்தி செய்வதற்கு 250 $km^3$ அளவான நீர் பயன்படுத்தப்படுகிறது. இந்நீரின் அளவானது ரஷ்யாவின் வோல்கா நதியின் வருடாந்த நீர்ப்பாய்ச்சலுக்கு சமமானதாகும்.

அதேபோல் வீணாக்கப்படும் உணவின் அளவை உற்பத்தி செய்ய வருடாந்தம் 1.4 பில்லியன் ஹெக்டெயர் நிலம் (இது உலக விவசாய நிலத்தின் மொத்த அளவில் 28% ஆகும்) பயன்படுத்தப்படுகிறது.

நாம் ஒவ்வொருவரும் முயற்சித்தால் உணவு வீணாவதை தடுக்க முடியும். அவ்வாறு செய்தால்,

01. வீட்டுச் செலவைக் குறைக்கலாம்.

02. சூழல் பாதுகாப்புக்கும் தூய்மைக்கும் பங்களிக்கலாம்.

03. பசித்தவர்களுக்கு உணவூட்டலாம்.

பசித்தவர்களுக்கு உணவளிக்க மேலதிமாக பணம் செலவழிக்க வேண்டியதில்லை. நீங்கள் விரயமாக்காமல் சேமிக்கும் ஒரு பிடிச் சோறு ஓர் ஏழைக் குழந்தையின் பசியைத் தீர்க்கும்.

இன்று உலகிலுள்ள மொத்த மனித சனத்தொகை அண்ணளவாக 7 பில்லியனாகும். FAO இன் தரவுப்படி உலகில் 1/7 பங்கினர் உணவு இன்றி பட்டினியால் வாடுகின்றனர். அதாவது மொத்த சனத்தொகையில் (7 பில்லியன் மக்களில்) 1 பில்லியன் பேர் உணவின்றி பட்டினி கிடக்கின்றனர்.

பட்டினி கிடக்கும் மனிதன் என்றால் எலும்பும் தோலுமாக ஒட்டிய வயிறுடன் இருக்கும் ஆபிரிக்க குழந்தைகளை நீங்கள் மனக் கண்முன் கொண்டு வந்தால்... அது முற்றிலும் சரியானதல்ல. ஏனெனில் இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா போன்ற ஆசிய நாடுகளிலும் பசியாளிகளின் வீதம் அதிகமாக இருக்கிறது. எங்கு ஒரு மனிதன் பசியின் கொடுமையால் இறந்தாலும் அது மொத்த மனித சமூகத்திற்கும் அவமானமாகும்.

''மனித குலம் முழுவதும் அல்லாஹ்வின் குடும்பமாகும்'' (பைஹகி) என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

1.3 பில்லியன் உணவு வீணடிக்கப்படும் அதேநேரம் 1 பில்லியன் பேர் பட்டினியால் துன்புறுகின்ற அவலம் தொடர்கிறது.

அல்லாஹ் கூறுகிறான்: **''அவர்கள் குற்றவாளிகளிடம் கேட்பார்கள் 'உங்களை நரகத்திற்கு கொண்டுவந்தது எது? அதற்கு அவர்கள் கூறுவார்கள், 'தொழக்கூடியவர்களில் நாங்கள் இருக்கவில்லை. நாங்கள் ஏழைகளுக்கு உணவளிக்கவில்லை.''** (74: 41, 44)

இங்கு இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமை, இறைவனின் அடியார்களுக்குச் செய்ய வேண்டிய கடமை ஆகிய இரண்டையும் இணைத்தே அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

மார்க்கத்தை உண்மையாக பின்பற்றுவோரில் நாமும் இடம்பெற விரும்புவோமாயின் இன்றிலிருந்து பசித்தவர்களுக்கு உணவளிப்போம்; பிறரையும் உணவளிக்கத் தூண்டுவோம்.

ஏனெனில், மார்க்கத்தை பொய்யாகப் பின்பற்றுபவன் பட்டியலை; குறிப்பிடும்போது அல்லாஹ் கூறுகிறான்: **''மேலும் வறியவரின் உணவை அளிக்கத் தூண்டுவதில்லை.''** (107: 3)

உணவை விரயமாக்காமல் வினைத்திறனாக பயன்படுத்துவதால் உணவை மீதப்படுத்தி இன்னொரு பசித்த வயிற்றுக்கான உணவை சேமிக்கலாம்.

2050 ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகை அண்ணளவாக 9 பில்லியனாக அதிகரிக்கும் என கணிப்பிடப்படுகிறது. எனவே, மேலதிக 2 பில்லியன் மக்களுக்கு உணவளிக்க வேண்டிய தேவை உள்ளது. அல்லாஹ் வானில் இருந்து இறக்குவான் என நம்பி, திட்டமிடாது இருப்பது இறை நம்பிக்கையாளனின் செயற்பாடல்ல. எனவே, இறை நியதிகளைப் பின்பற்றி உணவை மிக வினைத்திறனான முறையில் பயன்படுத்தி வீண்விரயத்தை தடுப்பதுதான் அதற்குரிய தீர்வாகும்.

**''உண்ணுங்கள், பருகுங்கள்; வீண்விரயம் செய்யாதீர்கள்''** என்றே அல்குர்ஆன் கூறுகிறது.

பூக்களையும் மரங்களையும் நேசிப்பதன் மூலம் இயற்கையின் பிரியர்களாக இருக்கும் அதே வேளை, நாம் வீசும் ஒரு பிடிச்சோறு இந்த அழகான சூழலை மாசுறச் செய்கிறது என்பதை அறியாமல் இருக்கிறோம். உணவு வீணடிக்கப்படுவது சூழல் மாசாக்கத்தில் பாரிய பங்களிப்பு நல்குகிறது. சூழல் மாசுறுதல் குறித்து சிந்திக்கும்போது புகையை வெளிவிட்டுச் செல்லும் வாகனங்களும் கழிவுகளை அகற்றும் தொழிற்சாலைகள் மாத்திரமே எம்மனக்கண் முன் தோன்றுகின்றன. இனிமேல் குப்பையில் கொட்டப்படும் எஞ்சிய உணவுகளும் ஞாபகத்தில் வரட்டும். விவசாயச் செய்கையை மனம் எண்ணிப் பார்க்கட்டும். ஏனெனில் விவசாய செய்கையானது,

- பூமி வெப்பமடைதலுக்கு பாரிய பங்களிப்பை

வழங்குகிறது.

■ பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்திற்கும் வாகனங்களினதும் தொழிற்சாலைகளதும் புகை வெளியேற்றத்திற்கும் கூடிய பங்களிப்பை வழங்குகிறது.

■ காடழிப்புக்கு வழிவகுக்கிறது.

■ விவசாயத்தில் பயன்படுத்தப்படும் இரசாயன பீடை கொல்லிகள், ஏனைய இரசாயன பொருட்கள் நீர் மாசடையக் காரணமாக அமைகின்றன.

■ திண்மக் கழிவுகள் சூழலுக்கு வெளிவிடப்படுகின்றன.

இன்று உலகம் உணவு வீணாக்கலுக்கு எதிராக பாரிய நடவடிக்கைகளை எடுப்பது பற்றி பேசுகிறது. Think - eat - save எனும் தொனிப்பொருளில் உணவு வீணாக்குதலுக்கும் உணவு இழப்புக்கும் எதிரான பேரணி நடத்தப்படுகிறது.

இதில் பங்களிக்க வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமினதும் கட்டாயக் கடமையாகும்.

எனவே, சிறுவயது முதல் பிள்ளைகளுக்கு சரியான உணவுப் பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுப்போம். தினமும் ஒரு குறிப்பட்ட அளவு உணவை உண்ணப் பழக்குவோம். ஏனெனில், சுவையான உணவு எனில் பீங்கானில் அதிகமாக போடுவதும் பின் எஞ்ச வைப்பதும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை மேற்கொள்ளும் தவறான உணவுப் பழக்கமாகும்.

### உணவை பகிர்ந்துண்ணப் பழக்குதல்

நபிகளாரிடத்தில் இதற்கான அழகிய வழிகாட்டல் உண்டு. அஸ்ஹாபுஸ் ஸுப்பா எனும் திண்ணைத் தோழர்கள் வறியவர்களாக இருந்தார்கள். ஆகவே, நபியவர்கள் கூறினார்கள். ''உங்களில் எவரிடத்திலாவது இருவருக்கான உணவு இருந்தால் அவர் மூன்றாவதாக ஒருவரை அழைத்துச் செல்லட்டும். உங்களில் எவரிடத்திலாவது நான்கு பேருக்கான உணவு இருப்பின் அவர் ஐந்தாவதாகவோ ஆறாவதாகவோ எவரையாவது அழைத்துச் செல்லட்டும்.''

இவ்வாறு இருவருக்குப் போதுமான உணவை மூவர் பகிர்ந்துண்ணல் எனும் நடைமுறை உணவு விரயமாவதைத் தடுப்பதற்கான சிறந்த வழிமுறையாகும்.

### விருந்தினர்களை கவனிக்கும்போது நடுநிலையான வழிமுறையைக் கையாளல்.

விருந்தாளிகளுக்கு உணவளித்தல் நபிவழியாகும். எனினும், பல வீடுகளில் உபசரிக்கிறோம் என்பதற்காக விருந்தாளி உண்ண முடியாதளவு உணவை அவர் சாப்பிடும் பீங்கானில் போட்டு உண்ணுமாறு வற்புறுத்துவர். உங்கள் விருந்தாளியால் ஓர் எல்லைக்கு மேல் சாப்பிட முடியாது. மேலும் அவரது உடல் நலத்திற்கும் அது கேடு என்பதை உங்கள் பாசம் மறைத்து விடுகிறது. இதனால் உணவு எஞ்சுகிறது. எதிலும் நடுநிலையான போக்கை கடைப்பிடிப்பதே நபிவழியாகும்.


எஞ்சிய உணவை வேறு ஒரு வடிவத்திற்கு மாற்றி அடுத்த வேளைக்கு பரிமாறலாம். இந்த நுட்பங்களை கைதேர்ந்த ஓர் இல்லதரசி அறிந்து வைத்திருப்பாள்.

வைபவங்களையும் விழாக்களையும் திட்டமிடும் போது உணவு குறித்து விஷேட கவனம் செலுத்த வேண்டும். உணவு வீணாகும் வழிகளை அறிந்து அவற்றை தீர்க்க முயற்சித்தல் அவசியம்.

உணவு வீண்விரயமாவது குறித்து மக்களை விழிப்பூட்டுதல் வேண்டும். பத்திரிகைகள், சொற்பொழிவுகள், வானொலி நிகழ்ச்சிகள், துண்டுப் பிரசுரங்கள், பாடசாலையில் கற்பித்தல் முதலான வழிமுறைகளுக்கூடாக மக்களை விழிப்பூட்டுவதால் மறைமுகமாக நாமும் பிறருக்கு உணவளிக்க தூண்டுகிறோம்; அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்கிறோம் என்பதை நினைவில் கொள்வோமாக! ■

> "எமது வரலாறும் நாகரீகமும் பிழைகளை விட்டும் பாதுகாக்கப்பட்டவை என்று ஒருபோதும் கூற மாட்டோம். எனினும், ஏனைய சமூகங்களது வரலாற்றை விட எமது வரலாறு குறைந்தளவு அநியாயுங்கள் கொண்டது என்று உறுதியாக கூற முடியும். எமது வரலாறு சிதைக்கப்படுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். குறிப்பாக இஸ்லாத்தின் தூதர் புகழ்ந்து கூறிய முதல் மூன்று நூற்றாண்டுகள் அல்லது சிறந்த நூற்றாண்டுகள். சிறப்புமிகு கடந்த காலத்தை நவீன காலத்தோடு தொடர்புபடுத்திப் பார்ப்பது சமூகத்தின் கடமை. வரலாற்றின் புகழ்களைப் பாடிக்கொண்டும் இழப்புகளுக்காக வருத்தப்பட்டுக் கொண்டும் இருப்பது போதுமானதல்ல. மாற்றமாக கடந்த காலங்களிலிருந்து படிப்பினை பெற்று நவீன காலத்தை அபிவிருத்தி நோக்கி நகர்த்தி எதிர்காலம் பற்றி ஆழமான திட்டமிடல் மேற்கொள்வதே எமது கடமை."
>
> **அல்லாமா யூஸுப் அல்கர்ளாவி**
>
> **தமிழில்: ஷெய்க் ரிஷாட் நஜிமுடீன் (நளீமி)**

டாக்டர் அத்ஹரா ஸாதிக்
பல் நோய்த் தடுப்பு வைத்தியப் பிரிவு, கொழும்பு



# வாய்ச் சுகாதாரம் பேணுவதில் உணவின் பங்கு!

ஓய்வும் ஆரோக்கியமும் அல்லாஹு தஆலா ஒரு மனிதனுக்கு அளித்துள்ள அருட்கொடைகள் என்பதை நாம் அறிவோம்.

பொதுவாக ஆரோக்கியத்தைப் பேணுவதில் உணவின் பங்களிப்பு ஒரு பலமான கட்டிடத்திற்கு அத்திவாரம் இடுவதைப் போன்றதாகும். உடல் விருத்தி, உடல் வளர்ச்சி மற்றும் நோய் எதிர்ப்புக்குரிய இயற்கை நிர்ப்பீடனம் யாவும் நாம் உட்கொள்கின்ற போஷாக்கு நிறைந்த உணவின் மூலமே கிடைக்கின்றன.

குறிப்பிட்ட ஒரு தொழிலில் ஈடுபடுவதற்கு குறிப்பிட்ட உணவுக் கூறுகளை நாம் பிரித்து உண்ண வேண்டும். வாய்ச் சுகாதாரத்திலும் உணவானது, தாடை என்புகளுக்கு உறுதியைக் கொடுக்கின்றது. பற்கள் அதற்குரிய காலப்பகுதியில் முளைப்பதற்கு உதவுகின்ற முரசினதும் வாய் மென்சவ்வினதும் உறுதியைப் பாதுகாக்கின்றது. உமிழ்நீர் நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கின்றது.

பற்சுகாதாரத்தைப் பேணுவதில் குடிநீருக்கு முக்கியமான பங்கு உண்டு. ஏனெனில், குடிநீரிலுள்ள F எனும் மூலகமானது பற்களின் ஆரோக்கியம் பேணுவதில் பெரும் பங்கு வகிக்கிறது. அளவான F கொண்ட நீரைப் பருகுவதால் பற்கள் பாதுகாக்கப்படும். குடிநீரில் F அதிகம் இருப்பின், மேலதிக F ஆனது பற்களிலும் என்புகளிலும் படிந்து விடும். பற்களில் F படிவதால் புளோரோசிஸ் நோய் உருவாகலாம்.

எலும்புகளின் உறுதிக்கு, வளர்ச்சிக்கு, விருத்திக்கு புரத, Ca, vit A/D உணவுக் கூறுகள் தேவை. அந்த உணவுக் கூறுகளை எமது வாழ்க்கையின் எக்காலப் பகுதியில் உட்கொள்வதால் பற்களின் வளர்ச்சி, விருத்தி இடம்பெறும் என்பதை அறியாமல் 40, 50 வயதுகளில் Ca, புரதம் சாப்பிட்டால் பற்கள் வளரும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஒரு தாய் 06 ஆவது கர்ப்ப வாரத்தில் இருக்கும்போது ஒரு குழந்தையின் பற்கள் உருவாவதற்கான முளைய விருத்தி ஆரம்பமாகும்; பல்லிழையங்கள் உருவாகும். இக்காலப் பகுதியில் கலப் பெருக்கத்திற்கு, பல்லிழைய விருத்திக்கு புரத, Ca உணவுகள் இன்றியமையாதவை. ஆகவே, இக்காலத்தில் ஒரு தாயின் சமப்படுத்தப்பட்ட போஷாக்கு நிறைந்த (Balance diet) உணவு இதற்கு உதவுகின்றது.

அத்தோடு குழந்தை பிறந்து, பின்வளர்ச்சிக் காலப் பகுதி வரையிலும் (16 வயது) குழந்தைக்கு புரத, Ca, Vit A/D உணவுகள் பல்லின் உறுதிக்கும் ஆரோக்கியத்திற்கும் தேவைப்படுகின்றன. புரத, Ca, Vit A/D உணவுகள் குறைபாட்டினால் பற்கள் தாமதித்து முளைத்தால் (Delayed emption), மிளிரிப் பகுதியின் கலப் பெருக்க குறைவு, கனியுப்புருவாக்கக் குறைவு (Enamel Hypoplasisa and Enamel Hypo Mineralization) என்பன உருவாகும். இதனால் குழந்தைகளுக்கு மிக விரைவில் பற்சூத்தை ஏற்படும்.

பற்கள் தமது தொழிற்பாட்டு நிலைக்கு வரும்போது பற்சூத்தை நோய் வராமல் இருக்க அடிக்கடி அதிக சீனித் தன்மையான உணவுகள் உட்கொள்ளும் பழக்கத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இன்னும் மிளிரி கரைவது (Enamel Erosion) தடுக்கப்பட அமிலம் நிறைந்த, புளிப்புச் சுவையுடைய உணவுகளை உட்கொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

விற்றமின் C உணவுகளை உட்கொள்வதால் முரசிலிருந்து இரத்தம் வடிதல் நோய் வராமல் பாதுகாக்க முடியும். பழங்கள், காய்கறிகள் உண்பதால் இது கிடைக்கலாம். வளர்ச்சிக் காலப் பகுதியிலேயே இதுவும் அதிகமாக தேவைப்படுகின்றது. இரும்புச் சத்துக் குறைபாட்டால் Hb% அளவு குறைவடையும்போது வாய்ப்புண்கள் (Mouth Ulcers) ஏற்படலாம். எனவே, நாளாந்தம் இரும்புச் சத்து நிறைந்த உணவுகளை சிறுபராயத்திலிருந்தே உட்கொள்ள வேண்டும்.

Antioxidant உணவுகளை அதிகமாக உட்கொள்வதன் மூலம் வாய்ப்புற்று நோயிலிருந்து தற்காப்பு பெற முடியும். விற்றமின் E உணவுகள், வேர்க் கடலை, மரவள்ளி, தக்காளி, குடிநீர் யாவும் Antioxidant நிறைந்தவை. எனவே, இவற்றை நாளாந்தம் உணவில் சேர்த்து வருவதன் மூலம் இப்பயங்கர ஆட்கொல்லி நோயிலிருந்து தற்காப்பு பெற முடியும், இன்ஷா அல்லாஹ். ■



# அளவான உணவு! ஆரோக்கியமான வாழ்வு!



- ஏ. அர்ஷாத் அலி - B.Sc. in Food Science & Nutrition

இயல்பான மனித வாழ்க்கைக்கு சவால் விடுக்கின்ற ஒரு காரணிதான் உணவுப் பழக்கவழக்கம். ஒரு மனிதனது இயல்பான வாழ்க்கைக்கு உழைப்பு, விளையாட்டு, அறிவுத் தேடல் முதலான அன்றாட நடவடிக்கைகளை வினைத் திறனாக மேற்கொள்வதற்கு உடல் ஆரோக்கியமும் உள ஆரோக்கியமும் முக்கியமானவை. உடல் மற்றும் உள ஆரோக்கியம் தாயின் கருவில் இருக்கும் நிலையிலும் முழு மனிதனாக உலகில் நடமாடும்போதும் அவர் பெற்றுக் கொள்ளும் போஷணையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. இந்த போஷணையைப் பெற்றுக் கொள்வதற்காக மனிதன் உணவு உட்கொள்கின்றான். மூன்று வேளை உணவு உட்கொள்வது தொன்றுதொட்டு தொடர்ந்து வரும் மனிதனின் உணவுப் பழக்க முறையாகும்.

மனித உடலின் செயற்பாடுகளுக்கும் இயக்கங்களுக்கும் சக்தி முக்கியம். உடலுறுப்புகளின் கட்டமைப்பு, வளர்ச்சி, குறித்த தொழிலை மேற்கொள்வதற்காக புரதம் அவசியம். உடலுக்குத் தேவையான சக்தி பிரதானமாக காபோஹைதரேற்று (மாப்பொருள் உணவுகள்), கொழுப்பு உணவுகளிலிருந்து பெறப்படுகிறது. இவற்றுக்கு மேலதிகமாக விற்றமின்கள், கனியுப்புகள் போன்றனவும் உடலகத் தொழிற்பாடுகளுக்கு மிக அவசியமானவை. இப்போஷணைக் கூறுகளை அளவோடு உட்கொள்வது உடல், உள ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு இன்றியமையாதது. உட்கொள்ளப்படும் இப்போஷணைப் பதார்த்தங்கள் உடலினால் உறிஞ்சப்பட்டு ஒன்றில் முழுமையாகப் பயன்படுத்தப்படல் வேண்டும் அல்லது உடலிலிருந்து அகற்றப்படல் வேண்டும் அல்லது தற்காலிக சேமிப்பாக சேமிக்கப்படல் வேண்டும். மாறாக, நிரந்தர சேமிப்பாக உடலில் களஞ்சியப்படுத்தப்படும்போது உடல், உள ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

மனித நாகரிகத்தின் இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக சொகுசான வாழ்க்கை முறைக்கு மக்கள் பழக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக உட்கொள்ளும் உணவின் பெரும் பகுதி நிரந்தர சேமிப்பாக உடலில் தங்கி விடுகிறது. உடலில் களஞ்சியப்படுத்தப்படும் நிரந்தர சேமிப்புணவாக கொழுப்பு காணப்படுகிறது. மேலும் சொகுசு வாழ்க்கை முறையில் சந்தையில் கிடைக்கும் உடனடி உணவுகள், நொறுக்குத் தீனிகள், Fried Rice, பிரியாணி போன்ற உணவுகளில் அதிகம் கொழுப்புகளே அடங்கியுள்ளன. இவையும் உடலில் சேமிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே இயல்பான வாழ்க்கை முறைக்கு சவால் விடுகின்ற காரணிகளுள் ஒன்றாக உணவு மாறியுள்ளது.

உடல் பருமன் அதிகரித்தல், தொற்றாத நோய்களான உயர் குருதிய முத்தம், நீரிழிவு, புற்றுநோய் என்பன சர்வசாதாரணமான நோய்களாக இனங்காணப்பட்டுள்ளன. சிறு பிள்ளைகள் முதல் இளம் வாலிபர்கள்கூட இந்நோய்களின் தாக்கங்களுக்கு உள்ளாகி யிருக்கிறார்கள். இத்தாக்கங்களிலிருந்து விடுபடுவதற்காக விஷேட உணவுப் பழக்கவழக்கங்களையும் உடற்பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

**முஸ்லிம்கள் வாழ்க்கை முறையியலின் எல்லாத் துறைகளுக்கும் முன்மாதிரியாகத் திகழ வேண்டியவர்கள் என்ற வகையில் எம்மிடம் நேர்த்தியான உணவுப் பழக்க வழக்கங்கள் பற்றிய அறிவும் தெளிவும் காணப்படுவதோடு, உணவுப் பழக்கவழக்க நடைமுறையிலும் பிற இனத்தவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டியது எமது கடமையும் பொறுப்பும் ஆகும்.**

எமது சொகுசான வாழ்க்கை முறையில் தயாரித்த அல்லது உடனடி உணவுகளை உணவகங்களிலிருந்து வாங்கி உண்ணப் பழகியிருக்கிறோம். குறிப்பாக, பட்டர் (Butter) அல்லது லெசிடின் (Lecithin) சேர்த்து தயாரிக்கப்பட்ட பேக்கரி உற்பத்திகளான கேக், பிஸ்கட், பாண் வகைகள் பீட்ஸா (Pizza), பொரித்த உணவுகள், நொறுக்குத் தீனிகள், விதவிதமாக சமைக்கப்பட்ட இறைச்சி வகைகள் என்பன எமது பிரதான உணவு மேசையை அல்லது ஒன்றுகூடல்களின் போதான உணவு மேசைகளை அலங்கரிக்கின்றன. முஸ்லிம்களைப் பொறுத்தவரை வெள்ளிக் கிழமை விஷேட பிரியாணி, Fried Rice, இப்தார் நிகழ்வுகளில் மேசைக்கு வரும் சமுசா, ரோல்ஸ், பேஸ்டி போன்றவையும் பிரதான உணவு வேளைகளில் ஒட்டியிருக்கும் பொரியல், வறுவல் கறி வகைகளையும் நினைவுகூர்ந்தால் கொழுப்பும் எண்ணெய்யும் எமது உணவில் ஆக்கிரமித்துள்ளதை அவதானிக்க முடியும். இலங்கையின் புள்ளி விபரங்களை அவதானித்தால் முஸ்லிம்களை ஏனைய இனத்தவர்களுடன் ஒப்பிடும்போது உடற்பருமனில் அதிகரித்தவர்களாகவும் மேலே குறிப்பட்ட தொற்றாத நோய்களால் அதிகம் பீடிக்கப்பட்டவர்களாகவும் இருப்பதை அவதானிக்க முடியும்.

முஸ்லிம்கள் வாழ்க்கை முறையியலின் எல்லாத் துறைகளுக்கும் முன்மாதிரியாகத் திகழ வேண்டியவர்கள் என்ற வகையில் எம்மிடம் நேர்த்தியான உணவுப் பழக்க வழக்கங்கள் பற்றிய அறிவும் தெளிவும் காணப்படுவதோடு, உணவுப் பழக்கவழக்க நடைமுறையிலும் பிற இனத்தவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டியது எமது கடமையும் பொறுப்பும் ஆகும்.

கொழுப்புணவுகள் உடலுக்கு இன்றியமையாதவை என்ற வகையில் உடலுக்கு அவசியமான கொழுப்பை அவசியமற்ற, பாதிப்பை ஏற்படுத்தும் கொழுப்பிலிருந்து வேறுபடுத்தி பயன்படுத்தத் தெரிந்திருத்தல் அவசியமாகும். எமது உணவுகளில் Trans Fat நிரம்பிய கொழுப்பு (Saturated Fat) மற்றும் LDL எனப்படும் கொலஸ்ட்ரோல் அடங்கியிருக்கும்போது உடற்பருமன் அதிகரித்தல், உடல் கலங்களைச் சூழ கொழுப்பு படிதல், குருதிக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு உயர் குருதியமுக்கம், மாரடைப்பு ஏற்படுதல், குருதியில் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்படுத்தும் இன்சுலின் ஓமோனுக்கு எதிர்ப்பு நிலை உருவாகி நீரிழிவு நோய் ஏற்படுதல், புற்று நோய் ஏற்படுவதற்கான சுயாதீன மூலிகங்கள் என்பன தோற்றுவிக்கப்படும்.

நிரம்பிய கொழுப்புகள் பொதுவாக விலங்குணவுகளில் காணப்படுகின்றன. இறைச்சி வகைகள், இறைச்சி உற்பத்திகளான Sausages, Meat Balls, பால் உற்பத்திகளான Butter, Cheese, தேங்காய் எண்ணெய், பீட்ஸா, பேஸ்டி, பொரித்த உருளைக் கிழங்கு என்பன நிரம்பிய கொழுப்பு அடங்கிய உணவுகள், பொரிக்கப்பட்ட நொறுக்குத் தீனிகள் பேஸ்டி, குக்கீஸ், ரோல்ஸ், சம்சா, கேக், பீட்ஸா, Fried Rice, பிரியாணி முதலான உணவுகளில் Trans Fat அடங்கியுள்ளது.

மேலும் பொரியலுக்கு பயன்படுத்தப்பட்ட எண்ணெய்யின் மூலம் பொரிக்கப்பட்ட உணவுகளும் Trans Fat ஐக் கொண்டிருப்பதோடு இப்படியான உணவுகளை தொடர்ந்தேர்ச்சியாக உட்கொண்டால் புற்றுநோய் ஏற்படக்கூடும். இவ்வுணவுகளை உண்பதை வழக்கமாக்கிக் கொள்ளாமல் இருப்பதானது உடல் ஆரோக்கியத்தையும் உள ஆரோக்கியத்தையும் உத்தரவாதப்படுத்தும். மேலும், இவ்வகைக் கொழுப்புகளுக்கு மாற்றீடாக உடலுக்கு ஆரோக்கியத்தையும் உள்ளத்துக்குத் தெம்பையும் தரும் MUFA, PUFA வகைக் கொழுப்புகளையும் எமது உணவில் சேர்த்துக் கொள்வது அவசியமாகும்.

தாவர எண்ணெய்கள் கடல்வாழ் மீனினங்களில் இவ்வகைக் கொழுப்புகள் முறையே காணப்படுகின்றன. இக்கொழுப்புகள் சிறப்பான மூளை செயற்பாட்டுக்கும் நரம்பு இயக்கங்களுக்கும் புத்துயிர்ப்பாக உடல் செயலாற்றுவதற்கும் அவசியமானவை. ஆகவே, ஆரோக்கியமான உடல், புத்துயிர்ப்பான உள்ளம் என்பவற்றுக்கு அவசியமான கொழுப்புகள் அடங்கிய உணவுப் பண்டங்களே மேசையை அலங்கரிக்க வேண்டும்.

MUFA, PUFA கொழுப்புகளும்கூட உயர் வெப்பநிலை சமையலுக்கு பயன்படுத்தப்படும்போது நிரம்பிய கொழுப்பு, Trans Fat போன்ற கொழுப்பு வகைகளாக மாறி பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே, சிந்தனையை வலுவூட்டி சிறப்பான தெரிவின் மூலம் எமது உணவுப் பழக்க வழக்கத்தை ஒழுங்கமைத்து உடல் ஆரோக்கியத்தையும் உள ஆரோக்கியத்தையும் பெற்று முன்மாதிரியான வாழ்க்கை ஒழுங்கை பிறருக்கும் கற்றுக் கொடுப்போமாக! ■

www.engalthesam.lk

(48ஆம் பக்கத் தொடர்) ஸீரா..

"அபூ முவைஹபாவே! நான் இந்த உலகின் அருட் கடாட்ஷங்களின் சொந்தக்காரனாக மாறி அவ்வாறே நீடூழி வாழ்ந்து சுவனத்துக்குச் செல்லலாம் அல்லது மரணித்து எனது இரட்சகனைச் சந்தித்து சுவனத்துக்குச் செல்லலாம் என்ற இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யுமாறு வேண்டப்பட்டேன். நான் எனது இரட்சகனை சந்திப்பதைத் தெரிவு செய்தேன். நான் எனது இரட்சகனைச் சந்திக்க கடும் பேரவா கொண்டுள்ளேன்."

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கடுமையாக சுகயீனமுற்றார்கள். அவரால் தொழுகைக்கு தலைமைத்துவம் வழங்க முடியவில்லை. அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை தொழுகையை இமாமத் செய்யுமாறு ஏவினார்கள். பின்னர், அன்னாரின் மரணத்துக்கு நான்கு நாட்களுக்கு முன்னர் சிறிது தேக ஆரோக்கியம் கிடைத்த பின்னர் தொழுகைக்காக வந்தபோதும் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களையே தொழுவிக்க முற்படுத்தி அன்னார் அமர்ந்தவாறு தொழுகையை நிறைவேற்றினார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மரணிப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன் தனது மனைவிமார்களை அழைத்து ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் வீட்டில் எஞ்சிய நாட்களைக் கழிக்க அனுமதி வேண்டினார்கள். அனைவரும் அனுமதியளித்தார்கள். பின்னர், அலி இப்னு அபீ தாலிப், பழ்ல் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகியோரின் உதவியுடன் நபியவர்கள் ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் வீட்டுக்கு சுமந்து செல்லப்பட்டார்கள். மக்கள் இதனைக் கண்டு திகைத்தனர். மஸ்ஜிதுந் நபவியில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைச் சூழ மக்கள் திரண்டார்கள்.

"நிச்சயமாக மரணத்துக்கு ஸகராத் வேதனையுண்டு. லா இலாஹ இல்லல்லாஹ்" எனக் கூறினார்கள்.

ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்:

"நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு வியர்வை கொட்டியது. சங்கைக்குரிய அவரது கையையே எடுத்து அவரது வியர்வையைத் துடைத்தேன். ஏனெனில், அவர் நோயாளிகளினதும் பலவீனர்களினதும் தலையில் அவரது கையை வைத்து இவ்வாறு ஓதினார்: 'இறைவா! மனிதர்களின் இரட்சகனே! கஷ்டத்தை நீக்கு! நிவாரணமளி! நீயே நிவாரணமளிப்பவன். உனது நிவாரணம் எவ்வித நோயையும் விட்டுவைக்காது' இவ்வாறே நானும் ஓதினேன். அப்போது நபியவர்கள் 'இல்லை ஆயிஷா இப்பொழுது இது பயனளிக்காது. அனைத்துக்கும் ஒரு காலம் இருக்கின்றது' எனக் கூறினார்கள். நான் அவர் மரணிக்கப் போவதை உணர்ந்தேன்."

பள்ளிவாயலில் மக்களின் சலசலப்பை நபியவர்கள் செவியேற்றார்கள். மக்கள் தன்னைப் பற்றியே அஞ்சுகின்றார்கள் என்பதை உணர்ந்து கொண்ட நபியவர்கள் தன்னை மக்களின் முன் சுமந்து செல்லுமாறு பணித்தார்கள். பின்னர் மக்களுடன் இறுதியாக உரையாற்றினார்கள்:

"மக்களே! நீங்கள் எனக்கு ஏதும் நடந்துவிடும் என்று அஞ்சுகின்றீர்கள். நான் உங்களை சந்திக்கும் களம் உலகமல்ல. நான் மறுமை நாளில் நீர்த் தடாகத்தில் உங்களுக்காக காத்திருப்பேன். நான் அதனை இங்கிருந்தே காண்கிறேன்...

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்களுக்கு வறுமை பீடிப்பதையிட்டு அஞ்சவில்லை. உலக ஆசை உங்களை தீண்டுவதையிட்டும் அஞ்சுகிறேன். இவ்வாறு தான் முன்னைய சமூகம் உலக ஆசையில் மூழ்கி போட்டியிட்டுக் கொண்டது. அப்படியிருந்தால், அவர்கள் அழிக்கப்பட்டதைப் போல் நீங்களும் அழிக்கப்படுவீர்கள்.

மனிதர்களே! ஓர் அடியான் தனது இரட்சகனை சந்திப்பது உலக வாழ்வு என இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யுமாறு வேண்டப்பட்டார். அவர் தனது இரட்சகனை சந்திப்பதை தெரிவு செய்து கொண்டார்.

மனிதர்களே! நான் எவரையும் அநியாயமாக தண்டித்திருந்தால் இதோ எனது முதுகு; என்னைத் தண்டியுங்கள். நான் யாருடைய செல்வத்தையும் அநியாயமாக அபகரித்திருந்தால் இதோ எனது செல்வம்; அதிலிருந்து அவர் எடுத்துக் கொள்ளட்டும். யாருடைய மானத்துக்கும் நான் பங்கம் ஏற்படுத்தியிருந்தால் இதோ அவர் என்னைப் பழிதீர்த்துக் கொள்ளட்டும். நான் எனது இரட்சகனை தூய்மையான நிலையில் சந்திக்க விரும்புகிறேன்."

பின்னர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்கள். இனபந்துக்களுடன் இணைந்து நடப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள். பெண்களோடு நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு ஏவினார்கள். அன்ஸார்களின் சிறப்புக்களை சிலாகித்துப் பேசினார்கள். பின்னர் "மக்களே! மறுமை வரை எனக்குப் பின்வருவோருக்கு எனது ஸலாத்தை எத்திவையுங்கள்" எனக் கூறினார்கள்.

பின்னர் ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களது வீட்டுக்கே மீளச் சென்றார்கள். அங்கே பாத்திமா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை அழைத்து தான் மரணிக்கப் போகின்ற செய்தியை எத்திவைத்தார்கள். அதனை செவியேற்ற பாத்திமா (ரழியல்லாஹு அன்ஹா) அழத் தொடங்கி விட்டார். மீண்டும் தனக்குப் பின் முதன் முதலில் தன்னை சந்திப்பவளும் அவள்தான் என இரகசியம் கூறியபோது பாத்திமா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் சிரித்து விட்டார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மறுநாள் பஜ்ர் வேளையில் ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களது மடியில் சாய்ந்த வண்ணம் வபாத்தானார்கள். அது திங்கட்கிழமையாக இருந்தது. மக்கள் அழுகையில் மூழ்கினார்கள். ஸஹாபாக்கள் செய்வதறியாது அலைக்கழிந்தார்கள். மக்களை ஒருமைப்படுத்தி தலைமைப் பொறுப்பை ஜனநாயக அடிப்படையில் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பொறுப்பேற்றார்கள். நபியவர்களை அடக்கம் செய்தார்கள். தூதர் மரணிக்கலாம். தூதர் கொண்டு வந்த தூது ஒரு போதும் மரணிக்க மாட்டாது. அதன் அடிப்படையில் தோழர்கள் தமது பணியை முன்னெடுத்துச் சென்றார்கள்.

நாம் அவரது பாதையில் பயணிக்கத் தயாரா?

(22ஆம் பக்கத் தொடர் ) **இஸ்லாத்தில் பெண்கள்...**

வியாபார கொடுக்கல்- வாங்கல்களில் மாத்திரம் சாட்சியமளிக்கும்போது இரு பெண்களின் சாட்சியம் வேண்டும் என்று கோரியது பாரபட்சம் காட்டும் நோக்கத்திலோ பெண்களுக்கு அநீதி இழைக்கும் நோக்கத்திலோ அன்று. மாறாக, கொடுக்கல்- வாங்கல்களில் எவ்விதத் தவறும் ஏற்படாது உறுதிப்படுத்திக் கொள்வதற்காகும்.

இமாம் அபூஹனீபா, இமாம் தபரி போன்றோர் நீதிபதி உட்படவுள்ள இஸ்லாத்தின் முக்கிய நிர்வாக பொறுப்புக்களில் பெண்கள் நியமிக்கப்பட முடியும் என சுட்டிக் காட்டியுள்ளனர். சட்டம், நீதி என்ற அடிப்படையில் பெண்கள் பாரபட்சம் காட்டப்பட்டிருப்பின் நீதியைப் பாதுகாக்கின்ற முக்கிய பொறுப்பில் பெண்களை நியமிக்க முடியும் என்று இஸ்லாமிய அறிஞர்கள் அபிப்பிராயப்பட்டிருப்பார்களா என்ன?

(34ஆம் பக்கத் தொடர் ) **சுவனத்துக்கு அழைத்துச்...**

இன்று கல்வி என்பது தொழில் சார்ந்ததாக, பட்டம், சான்றிதழ் சார்ந்ததாக மாறிவிட்டது. குறிப்பிட்ட ஒரு துறையில் கற்றால் எவ்வளவு உழைக்கலாம், எவ்வளவு பணம் சம்பாதிக்கலாம் என்றுதான் சிந்திக்கிறார்கள். மாறாக, கல்வியினால் ஊருக்கும் நாட்டிற்கும் சமூகத்திற்கும் என்ன பயன் என்று யாரும் சிந்திப்பதில்லை.

இமாம் அபூஹாஸிம் அவர்கள் கற்றுக் கொடுக்கும் பணி புரிந்தவர்கள். அப்பாஸியருடைய ஆட்சிக் காலத்தில் இவரை கலீபா அப்துல் மலிக் அவரது அவைக்கு அழைத்து அவரிடம் "இமாமவர்களே! உங்களுக்கு என்ன வேண்டும்? எதை வேண்டுமானாலும் கேளுங்கள்" என்றார். அதற்கு இமாமவர்கள் கூறினார்கள்: "கலீபாவே! எனக்கு ஒரேயொரு தேவைதான் இருக்கிறது. அந்தத் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே நான் அலைந்து திரிகிறேன். உங்களால் முடியுமென்றிருந்தால் அந்தத் தேவையை நிறைவேற்றித் தாருங்கள்." அப்போது கலீபா, "சொல்லுங்கள் இமாம் அவர்களே!" என்றதும் இமாமவர்கள், "என்னை நரகத்திலிருந்து விடுவித்து சுவனத்தில் நுழைவிக்க வேண்டும். இதுதான் எனது தேவை" என்றார்கள். உடனே கலீபா, "எனக்கும் அந்தத் தேவைதான் இருக்கிறது" என்று கூறினார். இப்படிப்பட்ட மனிதர்களை எந்தப் பல்கலைக்கழகம், எந்தப் பாடசாலை, எந்த கல்வி நிறுவனம் உருவாக்கியிருக்கிறது?

## முன்மாதிரி

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதாரணபுருஷர்களாக திகழ வேண்டும்.

"மனிதர்களுக்கு நன்மையை ஏவுகின்ற நீங்கள் உங்களை மறந்து விட்டீர்களா?" என்று அல்குர்ஆன் கேட்கிறது. கற்பிக்கின்ற ஆசிரியர்களிடத்தில் இத்தகைய முன்மாதிரிகள் இல்லாதபோது மாணவர்கள் எதனை முன்மாதிரியாகக் கொள்வது?

ஆயிரம் மனிதர்கள் தங்களுடைய பேச்சினால் ஒரு மனிதனில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைவிட ஒரு மனிதன் தனது முன்மாதிரியால் ஆயிரம் மனிதர்களிடத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் மிகப் பலமானது.

எனவே, மாணவர்கள் ஆசிரியர்களின் முன்மாதிரிகளையே பார்க்கின்றனர். அவர்களது வெறும் பேச்சுக்களை விட செயல்களுக்கு, நடத்தைகளுக்கு முன்மாதிரிகளுக்கு அதிக தாக்கம் செலுத்தும் சக்தி இருக்கிறது. வகுப்பிற்கு நேர காலத்தோடு ஆசிரியர் சமுகமளித்தால் அது பிள்ளைகளிடம் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுவதுதான் முக்கியமானது.

## இஹ்லாஸ்

அடுத்த முக்கியமான பண்புதான் இஃலாஸ். மேற்சொன்ன அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது இந்த இஃலாஸ்தான். நாம் அல்லாஹ்விடமிருந்தே வந்தோம், அவனுக்காகவே வாழ்கிறோம், அவனிடமே மீள உள்ளோம் என்ற உணர்வு அவசியம். இந்த உணர்வு இருந்தால் அல்லாஹ்வுக்காகச் செயற்படுவார்.

இந்தப் பண்புகள் இல்லாததன் மோசமான விளைவுகளை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இவற்றுக்கெல்லாம் நாம்தான் பதில் சொல்ல வேண்டும். ஆசிரியர் பணி மிகவும் பொறுப்பான ஒரு பணி. ஆசிரியர்களின் முறையான வழிகாட்டல்கள் கிடைக்கப் பெறாமையினால் வீதிகளில் சுற்றித் திரிகின்ற, சிறைச்சாலைகளில் வாடுகின்றவர்கள் குறித்து ஆசிரியர்கள் பதில் சொல்லியாக வேண்டும். ■

**உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**

## மணமகன் தேவை

கம்பஹா மாவட்டம் கஹட்டோவிட்டவைச் சேர்ந்த க.பொ.த சாதாரண தரம் வரை கற்றுள்ள, தையல் வேலை செய்து சமபாதிக்கும் தந்தையை இழந்த மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 28, உயரம் 5') பொருத்தமான துணையை குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றார். மணமகளுக்கு சொந்த வீடு உண்டு.

**தொடர்புகளுக்கு: 072 6687419**

மாவனல்லையைச் சேர்ந்த GAQ பூர்த்தி செய்துள்ள மணமகளுக்கு (வயது 24, உயரம் 5' 3") பொருத்தமான படித்த, மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 075 9012343**

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த வெளிவாரிக் கலைமாணிக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ள மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 37, உயரம் 5') பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள தொழில் புரியும் மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 078 7437234**

(17ஆம் பக்கத் தொடர் ) **அமெரிக்காவின் வெளிநாட்டு...**

இதன்போது அரபுலக ஜனநாயகத்தை விட பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையே முதன்மையானது என வெள்ளை மாளிகை பட்டவர்த்தனமாக கூறியது. விளைவாக, அரபுலக ஜனநாயகமயமாக்கல் சாத்வீக வழிமுறைக்கூடாக சாத்தியப்பட மாட்டாது என்ற நிலைப்பாட்டை நோக்கி நசுக்கப்பட்ட இளைஞர்கள் தள்ளப்பட்டனர். இதுவொரு நிர்ப்பந்தமான தெரிவு.

சுருக்கமாக, 1990 முதல் இன்று வரை மத்திய கிழக்கின் இராஜதந்திர நலன்களை அடைந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அமெரிக்க வெளிநாட்டு கொள்கை வகுப்பாளர்கள் செயற்படுத்திய திட்டங்களே ஆயுதக் கலாசாரத்தை முஸ்லிம் உலகில் எரியூட்டி வளர்த்துள்ளன என்பது தெளிவாகிறது. மதம், சர்வதிகாரம் மற்றும் முஸ்லிம் உலகின் மானிட, சமூகவியல் காரணிகளுக்கும் அப்பால், இதுவே முதன்மையானது. குறிப்பாக, 80களில் ஆப்கான் முஜாஹித்களது போராட்டத்தை சூறையாடியமை, 90களில் தலிபான்களது அரசாங்கத்தை மறைமுகமாக பயன்படுத்தியமை, 2000க்குப் பின்னர் ஈராக் ஆக்கிரமிப்பிற்கும் அதன் பின்னராக ஈராக்கிய உள்விவகாரத்தை வழிநடத்துவதற்கு கையாளப்பட்ட கொள்கைகள் மற்றும் 2010 களின் பிற்பகுதியில் கொதித்தெழுந்த அரபு வசந்தத்தை நசுக்குவதில் இரட்டை வேடத்துடன் நடந்துகொண்டமை என்பன அவற்றுள் சிலவாகும். இந்த வகையில் தலிபான்கள், அல்காயிதா மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் என்பன அமெரிக்காவின் தோல்வியடைந்த வெளிநாட்டுக் கொள்கையின் படிப்படியான நேரடி பக்க விளைவுகளாகும். இதனை சூழ்ச்சிகளாக பார்ப்பதனை விடவும் மத்திய கிழக்கை கற்பழிக்கும் ஏகாதிபத்தியத்தின் கொள்கைகள் எனச் சொல்லலாம். ■




**அல்ஹஸனாத் நிகாஹ் சேவை விண்ணப்பப் படிவத்தை அல்ஹஸனாத் இணையதளத்தில் (www.alhasanath.lk) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

> **"திறந்த பொருளாதாரம் என்பது ஒரு நாட்டின் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சியை கட்டுப்படுத்தும் மிக மோசமான பொறிமுறையாகும். ஏனெனில், சர்வதேச சக்திகள் தேசத்தின் அரசியல் நகர்வுகளை கட்டுப்படுத்துவதற்கான வாயிலை அது திறந்து கொடுக்கிறது. இதன் விளைவாகவே, திறந்த பொருளாதாரத்தை ஆதரிக்கும் ஜனநாயகத்தை மாத்திரமே சர்வதேச சக்திகள் வரவேற்கின்றன."**
>
> **-பேராசிரியர் தாரிக் ரமழான்-**

**நிகாஹ் விளம்பரங்களை தகுந்த ஆவணங்களைப் பெற்று சேவை நோக்கிலேயே பிரசுரம் செய்கின்றோம். இரு தரப்பாரும் விளம்பரங்கள் தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். (ஆசிரியர்)**

அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் ALHASANATH என்ற பெயருக்கு Money Order எடுத்து தபாலகம் DEMATAGODA எனக் குறிப்பிட்டு அனுப்பவும். வங்கியில் வைப்பிலிட நாடுவோர் Srilanka Jamath - E-Islami AC NO: 1320009182, Commercial Bank, Maradana அல்லது Srilanka Jamath - E-Islami AC NO: 372132, B.O.C, Maradana எனும் வங்கிக் கணக்கில் குறித்த தொகைப் பணத்தை வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை அனுப்பவும்.

# உம்ரா 2015 TGL TRAVELS

நவம்பர், டிசம்பர்


எமது குழுக்கள் புறப்படும் திகதி
நவம்பர்- 25
டிசம்பர்- 10
டிசம்பர்- 24

குழந்தைகள், சிறுவர்களுக்கு விஷேட கட்டணம்

"ஓர் உம்ரா, மறு உம்ரா வரையிலுள்ள பாவங்களுக்குப் பரிகாரமாகும்" (புகாரி: 1773)

உங்கள் பயணத்தில்

- உங்கள் அமல்களை உரிய முறையில் செய்யவும் வழிகாட்டவும் உங்களுடன் இணைகின்ற தகைமை மற்றும் அனுபவமிக்க உலமா
- கொழும்பு - ஜித்தா நேரடி விமான சேவை
- இரு ஹரம்களுக்கு அருகாமையில் தங்குமிடம்
- இலங்கை முறைப்படி மூன்று வேளை உணவு
- இஸ்லாமிய புனிதத் தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு



மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்...

Al Haj Rizmy : 0777801262 Hijaz Sanoos: 0777800388 Shiyam: 0777630288

நபி வழியில் உம்ரா செய்து இபாதத்களை திருப்தியுடன் நிறைவேற்ற

## TGL TRAVELS & TOURS (PVT) LTD.

TGL Since 1990

Airline Ticketing Agent & Hajj - Umrah Operators

90, Chatham Street, Colombo 01. Tel: 0115341134 Fax: 0115371410
www.tglhajjumrah.com E-mail: umrah-haj@tgl.lk

IATA Accredited Agent



# OCEAS

OXFORD COLLEGE OF ENGINEERING APPLIED STUDIES

## Qatar நாட்டு December மாத பயணத்துக்கான பயிற்சி நெறிகள்...

- AutoCAD - 2D & 3D
- MEP Drafting (AutoCAD Study Include)
- MEP Quantity Surveying (100% Practical Work Ordinary Study)
- Civil Quantity Surveying (100% Practical Work Ordinary Study)

### Our Student History 2014 December

கடந்த வருடம் 2014 December மாதத்திலிருந்து எமது கல்வி நிறுவனத்தில் கல்வி கற்று வெளியேறிய 20 மாணவர்களை MEP Quantity Surveyor, MEP Draftsman, Civil Quantity Surveyor, Civil Draftsman, Site Engineer (MEP or Civil), Construction Supervisor (MEP or Civil), Construction Forman (MEP or Civil), Seles Engineering ஆகிய துறைகளுக்கு தொழில் வாய்ப்புக்கான 100% வழிகாட்டல் நடைபெற்றது.

அதில் 09 மாணவர்கள் 1ம் மாதத்திலும், 08 மாணவர்கள் 3ம் மாதத்திலும், 02 மாணவர்கள் 5ம் மாதத்திலும் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொண்டதுடன் ரூபா **120,000/-** இற்கு மேல் சம்பளமும் பெற்று எமது மாணவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

### Our Purpose

எமது கல்வி நிறுவனத்தில் கல்வி கற்று சான்றிதழைப் பெற்று அத்துறையில் **Qatar** நாட்டில் தொழில் வாய்பை எதிர்பார்த்து செல்ல இருக்கும் மாணவர்களுக்கு மட்டும் நாம் Qatar நாட்டிற்கு அழைத்துச் சென்று அங்கு அவர்களுடைய துறையில் தொழில் ஒன்றினை பெற்றுக்கோடுப்தற்காக எமது கல்வி நிறுவனம் Qatar நாட்டில் உதவிகளையும், வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் மாணவர்களுக்கு வழங்குவதேயாகும்.

பதிவுகள் October க்கு முன்னர்

தூர இட மாணவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

Register Under:
Tertiary and Vocational Education Commission
TVEC Reg. No:- P18/0066. Like OCEAS College

077 94 230 64
075 94 230 64

15, Main Street
Sainthamaruthu.

337, Main Street
Maruthamunai.

# மடவளையில் பெண்களுக்கான முழுநேர பாடநெறிகள்

## ENGLISH & LIFE SKILLS

- English Language (Special)
- Computer Application
- Life Skills & Motivation
- Counseling &Guidance
- Psychology
- Human Development
- Human Nutrition And Hazard
- Cookery
- Dress Making
- Sinhala Language
- Self Employment Courses
- Social Media & Safety
- Beauty Culture

4 MONTHS FULL TIME

மேலும் சில இஸ்லாமிய பாடநெறிகள்

**5 Diploma Certificates**

அரச அங்கீகார சான்றிதழ் +
சர்வதேச ISO சான்றிதழ் உட்பட

ஆங்கிலத்தை மட்டும் கற்க விரும்புபவர்களுக்கு

## Diploma in SPOKEN ENGLISH

With Grammar

அடிப்படையில் இருந்து கற்கும் விதத்தில்
வடிவமைக்கப்பட்ட பாடநெறி




3 MONTHS FULL TIME

**2 Diploma Certificates**

சர்வதேச ISO சான்றிதழ் /
அரச அங்கீகார சான்றிதழ் உட்பட

தினமும் 4 மணித்தியாலத்திற்கும்
அதிகமான பேச்சுப் பயிற்சி

LIFE SKILLS ஐ மட்டும் கற்க விரும்புபவர்களுக்கு

## LIFE SKILLS

- Computer Application
- Life Skills
- Motivation
- Counseling &Guidance
- Psychology
- Cookery
- Dress Making
- Self Employment Courses
- Social Media & Safety
- Beauty Culture

2 MONTHS FULL TIME

மேலும் சில இஸ்லாமிய பாடநெறிகள்

**3 Diploma Certificates**

அரச அங்கீகார சான்றிதழ் +
சர்வதேச ISO சான்றிதழ் உட்பட

பாதுகாப்பான வதிவிடம் மற்றும் இஸ்லாமியச் சூழல்

**Next Intake: 29th OCT**  **Hotline: 0777 877 966**

## Emerrad Ladies Academy

36/3B | SIRIMALWATTA ROAD | MADAWALA BAZAAR | KANDY
M: 0777 71 71 29   T: 081 20 50 600

ETS TOEIC   TVEC   LCM   EDFOCUS   fusion education

Like us: Emerrad Ladies Academy

# HND in

## CIVIL
Engineering

## TELECOM
Engineering

## ELECTRICAL & ELECTRONIC
Engineering

Leading to **BSc / BEng (Hons)**




- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய **Engineering** பிரத்தியோக கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க **Engineering** நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை **Top-Up** பூர்த்தி செய்யும் அரிய வாயிப்ப்பினை **BCAS Campus** உங்களுக்கு
- வழங்கப்படுகின்றது.

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
**www.bcas.lk**

**For Details:**
**Manjula - 0772 834 595**
**Olivia . 0766 127 711**

**BCAS City Campus** - 256, Galle Road, Colombo 06. 0112 364458
**BCAS Mount Campus** - 54, Galle Road, Mt. Lavinia. 0112 728082

Colombo | Mt.Lavinia | Kandy | Kurunegala | Jaffna | Batticaloa | Kalmunai | Qatar

Registered as a News Paper in GPO/QD/16/NEWS/2015

Printed by AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.

After O/L | A/L



ISO 9001: 2008 Certified Company

TURNKEY IT CAMPUS — Join the No.1

# சர்வதேச அங்கீகாரமுடைய Network Engineer ஆவதற்கு நீங்களும் விரும்புகிறீர்களா?

IT துறையில் அதிஉயர் சம்பளத்தை பெறக்கூடிய NETWORK துறையில் இன்றே இணையுங்கள்.

## Bsc (Hons) Computer Systems & Networking

University of Greenwich

1½ Years

ACHNP

Advanced Certified Hardware & Network Professional

Six Recognized Certifications

- CCNA — Cisco Certified Network Associate
- Microsoft Certified Technology Specialist — Microsoft Certified Solution Associate
- CLNA — Linux Network Admin with Security
- CWNA — Windows Network Administration
- CHEN — Hardware Engineering with Networking

**MCSE** Server 2012 — Exam 70 - 413, 70 - 414

**MCSA** Server 2012 — Exam 70 - 410, 70 - 411, 70 - 412

**MCSA** Windows 8 — Exam 70 - 687, 70 - 688

CISCO

**CCIE** — Routing & Swithing written Exam 350 - 001

**CCNP** — IP Routing, IP Switch IP Tshoot

**CCNA** — R&S Voice, Security

CompTIA — A+ N+

CEH — Certified Ethical Hacker

Microsoft Partner

PEARSON VUE-Authorised Test Centre

## Multimedia Engineering

- Graphic Designing
- Web Designing
- Web Development

MySQL php APACHE

## TURNKEY ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- இலங்கையில் Hardware and Networking துறையில் அதிகமான வல்லுனர்களை உருவாக்கிய முதன்மை நிறுவனம்.
- Authorized Test Center for CISCO & Microsoft Examinations.
- வெளிநாட்டு தூதரகங்களிலும் தொழில் வாய்ப்பு வழங்குனர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச சான்றிதழ்.
- Cisco, Microsoft and Networking பாடநெறிகளுக்கு உயர்தரமிக்க பரிசோதனைக் கூடம்.
- மறைமுகக் கட்டணங்கள் இல்லை.

TURNKEY IT TRAINING

*Dedicated for Professional Coaching*

2 581581

**COLOMBO**
562/15B, Lower Bagathale Road,
(Road adjoining Premadasa Jewellers-Sea side)
Colombo 03.
Tel: 2 581581, 2 595336, 077 2286988

**KANDY**
504/1, Peradeniya Road, Kandy.
Tel: 081 2205678, 077 5077456

An Institution registered with Tertiary and Vocational Education Commission of Sri Lanka. Reg No. PO1/200

HOTLINE 0772 286 988

Now register for any course online @ www.turnkey.lk

info@turnkey.lk    www.facebook.com/turnkeycolombo